# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2041 மார்கழி 15 வியாழக்கிழமை (30.12.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 034


# குடாநாட்டில் தொடர்கிறது படுகொலைப் பயங்கரம்!

## மூன்று வாரங்களுக்குள் மூன்றாவது சம்பவம் சரசாலையில்

யாழ்ப்பாணம், டிசெம்பர் 30

மூன்று நாள்களுக்கு முன்னர் வீட்டிலிருந்து தந்திரமாகக் கடத்தப்பட்ட இளம் குடும்பஸ்தர் வெட்டுக் காயங்களோடு சடலமாக நேற்று மீட்கப்பட்டார்.

இந்த அதிர்ச்சிதரும் சம்பவம் தென்மராட்சி சரசாலைப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

மீசாலை, புத்தூர் சந்தியைச் சேர்ந்த மகேந்திரசெல்வம் திருவருட்செல்வன் (செல்வன்) (வயது 28) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார். தொடர்ச்சியாக - அடுத்தடுத்து - நிகழ்ந்துவரும் படுகொலைச் சம்பவங்களால் குடாநாட்டு மக்கள் பயத்தால் உறைந்துபோயுள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது :-

வாகனங்களைக் கொள்வனவு செய்து பின்னர் அவற்றை விற்பனை செய்யும் தொழிலில் ஈடுபட்டுவந்த இந்த இளம் குடும்பஸ்தரின் வீட்டுக்குக் கடந்த திங்கட்கிழமை மாலை 6 மணியளவில் மோட்டார் சைக்கிளில் இரு நபர்கள் வந்தனர்.

''கனகம்புளியடிச் சந்தியில் ஒரு வாகனம் விற்பனைக்காக இருக்கிறது. வந்து பார்க்க முடியுமா?'' என்று கூறித் தந்திரமாகக் குறித்த குடும்பஸ்தரான செல்வனை அழைத்துச் சென்றுள்ளனர். மோட்டார் சைக்கிளில் வந்தவர்களோடு சென்ற செல்வனைக் காணாது இரவு முழுதும் குடும்பத்தினர் தேடியலைந்தனர். இந்தச் சமயத்தில் வீட்டாரின் தொலைபேசிக்கு ஓர் அழைப்பு வந்தது. அதில் பேசிய மர்ம நபர்கள் பெருந் தொகைப் பணத்தைக் கேட்டு மிரட்டினர். குறித்த தொகைப் பணத்தைத்

(27 ஆம் பக்கம் பார்க்க)

## உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட கைதிகள் மீது இராணுவம் தாக்குதல்

### வவுனியாச் சிறைச்சாலையில் சம்பவம்

கொழும்பு, டிசெ. 30

வவுனியா சிறைச்சாலையில் உள்ள கைதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டபோது, அவர்கள் மீது இராணுவத்தினர் தாக்குதல் நடத்தியுள்ளனர் எனத் தெரியவருகிறது. இதன் காரணமாக அங்கு பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட கைதிகள் மீது வவுனியா இராணுவத்தினர் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதனால், (27 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு நகர பாதுகாப்புக் கமராக்கள் நேற்று முதல் இயங்க ஆரம்பித்தன

கொழும்பு, டிசெ. 30

கொழும்பு நகரில் பொருத்தப்பட்ட கமராக்கள், பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவினால் நேற்று இயங்க வைக்கப்பட்டன. நகரில் இடம்பெறும் (27 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு, கிழக்கின் சகல உள்ளூராட்சி சபைகளிலும் கூட்டமைப்பு போட்டி

கொழும்பு, டிசெ. 30

வடக்கு, கிழக்கிலுள்ள அனைத்து உள்ளூராட்சி சபைகளிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடும். போட்டியிடவுள்ள வேட்பாளர்கள் தொடர்பாக உள்ளூராட்சி சபைகள் கலைக்கப்பட்ட பின்னர் கூட்டமைப்பின் செயற்குழு கூடி முடிவு செய்யும்.

- இப்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

உள்ளூராட்சித் தேர்தல்கள் திருத்தச் சட்டமூலம் ஜனவரி 4ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று அரசு அறிவித்திருக்கிறது. இதற்கிடையில் எதிர்வரும் 3ஆம் திகதி உத்தேச உள்ளூராட்சி திருத்தச் சட்டமூலத்தில் கொண்டுவரப்படவுள்ள திருத்தங்கள் தொடர்பான தகவல்களை அரசு கூட்டமைப்பினருக்கு

(27 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. நிபுணர் குழுவின் வருகை குறித்து நாடாளுமன்றில் தெளிவுபடுத்தவேண்டும்

### மங்கள சமரவீர எம்.பி. கோரிக்கை

கொழும்பு, டிசெ.30

ஐ.நா. நிபுணர் குழுவின் இலங்கை வருகை குறித்து வெளிவிவகார அமைச்சர் எதிர்வரும் 4 ஆம் திகதி நாடாளுமன்றில் தெளிவுபடுத்த வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர நேற்றுக் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கையின் நிலைமை தொடர்பாக தமக்கு ஆலோசனை வழங்குவதற்காக மூவர் கொண்ட நிபுணர் குழுவை பான் கீ -மூன் அமைத்தார்.

அந்த நிபுணர் குழுவுக்கு எதிராக இலங்கை அரசு கருத்துத் தெரிவித்தது. அது பயங்கரவாதக் குழு என்றும் அரசு கூறியது. ஜனாதிபதியிடம் நல்ல பெயர் வாங்குவதற்காக அமைச்சர்கள் பலர் ஆட்டம் போட்டனர். (27 ஆம் பக்கம் பார்க்க)


உதயன்

2011 நாள்காட்டி

நாளைய நாளிதழுடன்

யுனிலங்காஸ் பஞ்சாங்கக் கலண்டர்கள்
தினத்தாள் கலண்டர்கள்

தவறு இல்லாத வாக்கியப் பஞ்சாங்கக் கணிப்பில்
தெளிவான அச்சமைப்புடன் அழகுதரும்
தெய்வீக வண்ணப்படங்கள். பொது அறிவு.
பொன்மொழிகள். தினசரி ராசிபலன்கள்.
சுபமுகூர்த்ததினங்கள் போன்ற விடயங்களுடன்
நாடெங்கிலும் யுனிலங்காஸ் நாட்காட்டிகள்

பஞ்சாங்கக் கலண்டர் வாங்கும்போது கலண்டரின் பிற்பக்கத்தில்
சென்னை முருகு பாலமுருகனின் 2011 ஆம் ஆண்டுக்கான
மாதாந்த ராசிபலன் உள்ளதா என்பதை பார்த்து வாங்குங்கள்...

யுனிலங்காஸ் கொழும்பு 13 0776258778


## உள்ளூராட்சித் தேர்தல்களில் போட்டியிட வரிந்துகட்டுகின்றன அரசியல் கட்சிகள்

கொழும்பு, டிசெ.30

உள்ளூராட்சி சபைகளின் தேர்தல்களுக்குப் பிரதான கட்சிகள் தயாராகி வருகின்றன. எதிர்வரும் ஜனவரி மாதம் உள்ளூராட்சி சபைகள் கலைக்கப்படும் என்று ஸ்ரீல.சு.கட்சி பொதுச் செயலாளர் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, உள்ளூராட்சித் தேர்தல்கள் திருத்தச் சட்டமூலம் திட்டமிட்டபடி எதிர்வரும் ஜனவரி 4ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். ஆனால் தேர்தல்கள் இப்போதிருக்கும் விகிதாசார முறையிலேயே நடத்தப்படும் என அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீல.சு.கட்சி உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் போட்டியிட விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. விண்ணப்பிக்க விரும்புவோர் ஜனவரி முதலாம் திகதி முதல் ஜனவரி 15ஆம் திகதிக்குள் விண்ணப்பங்களை அனுப்பிவைக்க வேண்டுமென அக்கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவிக்கின்றார். ஒவ்வொரு மாவட்டத்திலும் வேட்பாளர்களைத் தெரிவு செய்ய குழு அமைக்கப்படும். இக்குழு ஜனவரி இறுதிக்குள் தகுதியான வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் போட்டியிட விரும்புபவர்களிடமிருந்து (27 ஆம் பக்கம் பார்க்க)


நுளம்புகளின் தொல்லைக்கு ஒரே தீர்வு.....

சொல்பெக் EW 050




Hayleys
ஹேலீஸ் காட்சியறை
47, ஸ்டான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
021 2221292



NIBM
BUILDING COMPETENCIES
Jaffna
யாழ்ப்பாணம்



A statutory Body under the Ministry of Youth Affairs & Skills Development

மாபெரும் இலவச கணினிக் கருத்தரங்கு

காலம்.: 02.01.2011 (ஞாயிற்றுக் கிழமை) நேரம்: காலை 10.00 மணி

இடம்: தேசிய வியாபார முகாமை நிறுவனம்
இல-40, கல்லூரி வீதி (யாழ். இந்துக் கல்லூரி மைதானம் முன்பாக)
யாழ்ப்பாணம்.

பதிவுகளுக்கு: 021 222 0360/0361/0362 வயதெல்லை: 16 வயதுக்கு மேற்பட்டவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# லண்டனில் இருந்து வந்த தமிழ் இளைஞர் கொள்ளுப்பிட்டி பொலிஸாரால் கைது

கொழும்பு, டிச.30

கொழும்பில் உயர்பாதுகாப்பு வலயத்தில் நடமாடிய குற்றச்சாட்டில் பிரிட்டனில் இருந்து வந்த தமிழ் இளைஞர் ஒருவரை இலங்கைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சஞ்சய் ரவீந்திரன் என்ற இலங்கை மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகளில் இரட்டைக் குடியுரிமையைக் கொண்டுள்ள இளைஞரே கைது செய்யப்பட்டுள்ளவராவார்.

லண்டனை வசிப்பிடமாகக் கொண்ட இவர், எட்டு போத்தல்களில் நீர் மாதிரிகளை பெய்ரா ஏரியில் இருந்து எடுத்துக் கொண்டிருந்த போதே கைது செய்யப்பட்டார்.

ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவினர் கொடுத்த தகவலை அடுத்தே கொள்ளுப்பிட்டி பொலிஸார் இவரைக் கைது செய்தனர்.

அவரை நேற்றுமுன்தினம் பொலிஸார் கோட்டே பதில் நீதிவான் முன்னிலையில் நிறுத்தினர்.

தடை செய்யப்பட்ட பகுதியான பெய்ரா ஏரிப் பகுதிக்குள் அனுமதியின்றி நுழைந்தாக அவர் மீது குற்றம்சாட்டிய பொலிஸார் சந்தேக நபரை விளக்கமறியலில் வைத்து விசாரிக்க அனுமதி கோரினர்.

இதையடுத்து குறிப்பிட்ட இளைஞரை ஜனவரி 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

பொலிஸாரின் விசாரணைகளின் போது அந்த இளைஞர், தான் நீர் மாசுபடுதல் குறித்த பட்டப்பின்படிப்பு ஆராய்ச்சிக்காகவே லண்டனில் இருந்து கொழும்பு வந்ததாகக் கூறியுள்ளார்.

இந்த இளைஞர் லண்டன் ஹீத்ரோ விமான நிலையத்தில் பணியாற்றுபவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இலங்கை – இந்தியாவுக்கு இடையில் கடலுக்கு அடியிலான மின்சாரப் பரிமாற்றம்

## 2014 இல் ஆரம்பம்

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே கடலுக்கு அடியிலான மின்சாரப் பரிமாற்று திட்டம், எதிர்வரும் 2014ஆம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்படும் என எதிர்பார்க் கப்படுகிறது.

இந்த வேலைத்திட்டத்தை கையேற்றுள்ள இந்திய நிறுவனத்தின் தகவல்களை மேற்கோள்காட்டி, 'த பிஸ்னஸ் ஸ்டேன்டர்ட்' இணையத்தளம் இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

கடலுக்கு அடியில் சுமார் 250 தொடக்கம் 300 கிலோமீற்றர்கள் நீளமான மின்பரி மாற்று கம்பிகள் மூலம் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நீருக்கு அடியிலான மின் சார பரிமாற்று வேலைத்திட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இது தொடர்பான விரிவான அறிக்கை இந்த மாதம் இந்திய மத்திய அரசாங்கத்துக்கு கையளிக்கப்படும் எனவும் இத்திட்டத்தை பொறுப்பேற்றுள்ள குறித்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

எனினும் இந்த வேலைத் திட்டத்தை விரைவாக நிறைவேற்றும் பொறுப்பு, இந்திய மின்சாரத் துறை அமைச்சின் கைகளிலேயே தங்கியிருப்பதாகவும் அந்த நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (எ)

# பொட்டம்மானால் அனுப்பப்பட்ட புலி உறுப்பினர் பதுளையில் புலனாய்வுத் துறையால் கைதாம்

கொழும்பு, டிசெ.30

பதுளையில் விடுதலைப் புலிகளின் முக்கிய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக இரகசியப் புலனாய்வுத்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கைது செய்யப்பட்டவருக்கும் விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பொறுப்பாளர் பொட்டம்மானுக்கும் இடையில் நெருங்கிய தொடர்புகள் இருந்துள்ளதாக புலனாய்வுத்துறையினரின் விசாரணைகளின் போது தகவல்கள் வெளிவந்துள்ளன.

கைது செய்யப்பட்டுள்ளவர் மல்லாகம் பிரதேசத்தை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டவர் என்றும் கடந்த 2006ஆம் ஆண்டு முதல் பதுளையில் வசித்து வருவதாகவும் தெரிவித்துள்ளார். பதுளையில் காளி கோயிலின் அர்ச்சகராகவும் கடமையாற்றியுள்ளார். ஆனாலும் இவருடைய பெயர் இன்னமும் வெளியிடப்படவில்லை.

பதுளையில் உள்ள முக்கியஸ்தர்கள் அல்லது பதுளைக்கு வரும் முக்கியஸ்தர்களை இலக்கு வைத்துத் தாக்குதலொன்றை மேற்கொள்ளும் திட்டத்துடனேயே அவர் பொட்டம்மானால் பதுளைக்கு அனுப்பப்பட்டிருந்ததாக புலனாய்வுத்துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

**உரிமைக்காக...**



போராட்டம்: களனி பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றுப் புதன்கிழமை களனிப் பல்கலைக்கழகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டனர். பல்கலைக்கழக மாணவர்களுக்கான விடுதி வசதியை ஏற்படுத்தித் தருமாறும் இடைநிறுத்தப்பட்ட 14 மாணவர்களையும் மீண்டும் அனுமதிக்குமாறும் கோரியுமே இந்த ஆர்ப்பாட்டத்தில் அவர்கள் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

# பிரதி அமைச்சர் முரளிதரனின் குற்றச்சாட்டுக்கு நோர்வே மறுப்பு



கொழும்பு, டிசெ.30

யுத்த நிறுத்த ஒப்பந்தம் அமுலில் இருந்த போது விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய நோர்வே பெருமளவு நிதி வழங்கியதாக மீள்குடியேற்ற அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் நல்லிணக்க ஆணைக்குழு முன் தெரிவித்ததை நோர்வே மறுத்துள்ளது.

மீள்குடியேற்றப் பிரதியமைச்சர் விநாயக மூர்த்தி முரளிதரனின் கருத்துகளை ஏற்றுக்கொள்ள முடியாது என நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹேய்ம் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் சில நாள்களுக்கு முன்னர் நல்லிணக்க ஆணைக்குழு முன் சாட்சியமளித்திருந்தார். அந்த சாட்சியத்திலேயே புலிகள் ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய நிதியுதவி வழங்கியதாக கருத்துத் தெரிவித்திருந்தார்.

பிரதியமைச்சர் கடந்த காலங்களிலும் இது போன்ற குற்றச் சாட்டுகளை சுமத்தியிருந்தார் என்றும், அரசியல் காரணங்களால் இவ்வாறான முறையற்ற வகையில் கருத்துகள் முன் வைக்கப்படு வதாகவும் எரிக் சொல்ஹேய்ம் தெரிவித்துள்ளார்.

# தனங்கிளப்புக்கான 809ஆம் மார்க்க பஸ்சேவை மீண்டும் ஆரம்பிக்கப்படுமா?

தென்மராட்சி, டிசெ. 30

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் 809ஆம் மார்க்க பஸ் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்படுமா?

- இவ்வாறு தென்மராட்சி தெற்குப் பிரதேச மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

தனங்கிளப்புச் சந்திவரை நாவற்குழி மற்றும் சாவகச்சேரியில் இருந்து தனங்கிளப்புச் சந்திவரை வீதிகள் திருத்தப்பட்டுள்ளதாலும் மறவன்புலோ, தனங்கிளப்பு ஆகிய பகுதி மக்கள் மீள்குடியமர்ந்து வருவதாலும் இந்த மார்க்க பஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்குமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை எதிர்வரும் 3ஆம் திகதி மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயம் மீண்டும் ஆரம்பிக்கப்பட உள்ளதாகவும் இப்பாடசாலைக்கு வரும் மாணவர்கள் ஆசிரியர்கள் நலன்கருதி பஸ்சேவையை ஆரம்பிக்குமாறும் அவர்கள் கேட்டுள்ளனர். (ஒ-207)

# அடுத்தடுத்து நடக்கும் கொலைகள், கொள்ளைகளால் அதிர்ச்சியில் ஆழ்ந்துள்ள யாழ்.குடாநாட்டு மக்கள்

## சிறி ரெலோ அறிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.30

யாழ்.குடாநாட்டில் கடந்த சில தினங்களாக இடம்பெற்று வருகின்ற கொலைகள் மற்றும் கொள்ளைகளால் பீதி அடைந்திருந்த மக்களுக்கு உரும்பிராயில் நடந்த படுகொலைச் சம்பவம் பேரதிர்சியை ஏற்படுத்தியுள்ளது.

- இவ்வாறு சிறீ தமிழ்ஈழ விடுதலை இயக்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளாதாவது:-

24 மணி நேரமும் குடாநாட்டு வீதிகளில் படையினரும், பொலிஸாரும் ரோந்து நடவடிக்கைகளிலும் சோதனை நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருக்கின்ற இக்கால கட்டத்தில், மீண்டும் இரவு வேளையில் இடம்பெற்றிருக்கின்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமானது குடாநாட்டு மக்கள் மத்தியில் சந்தேக உணர்வினையும், கேள்வியையும் எழுப்பி நிற்கின்றது.

தென்னிலங்கையில் இவ்வாறு கொலை, கொள்ளை, துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெறுகின்ற போது உடனடியாகக் களத்தில் இறங்கி விசாரணைகளை மேற்கொண்டு குற்றவாளிகளைக் கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்தும் பொலிஸாரும் பாதுகாப்பு படையினரும், குடாநாட்டில் இடம்பெற்று வருகின்ற சம்பவங்களைக் கண்டும் காணாமலும் இருப்பது மக்களுக்கு கவலையை ஏற்றபடுத்துவதுடன் சிந்திக்கவும் வைக்கின்றது.

கடந்த காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுகின்ற போது புலிகளைக் குற்றஞ்சாட்டிய தென்னிலங்கை அரசியல் தலைமைகள் இன்று ஏன் மௌனம் சாதிக்கின்றனர் எனவும், உரும்பிராயில் இடம் பெற்றிருக்கின்ற துர்ப்பாக்கிய நிகழ்வானது, மீண்டும் தமிழ் புத்தி ஜீவிகளை கொன்றொழிக்கும் படலம் ஆரம்பமாகியுள்ளதா எனவும் மக்கள் கேள்விகளை எழுப்புகின்றனர்.

எது எவ்வாறு இருப்பினும் இவ்வாறான செயற்பாடுகளின் பின்னணியில் எம் சமூகத்தில் உள்ள சில சமூக விரோதிகள் இணைந்திருப்பது கவலைக்குரிய விடயமாகும். இவ்வாறானவர்கள் திருந்தி வாழும்படியும், நாதியற்று இருக்கின்ற எம் சமுதாயத்தினை கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு எம் ஒவ்வொருவருக்கும் இருப்பதனாலும் உணர்ந்து செயற்படும் படியும் தமிழ் மக்களின் நலன் பேணும் கட்சி என்ற வகையில் சிறி ரெலோ கட்சி வேண்டுகோளினையும் கண்டனத்தினையும் தெரிவிக்கின்றது.

தென்னிலங்கையில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுகின்ற போது பொலிஸாரும் பாதுகாப்பு படையினரும் எவ்வாறு செயற்படுகின்றார்களோ, அதேபோல் வடக்கு கிழக்கிலும் பாகுபாடின்றி செயற்பட வேண்டும் எனவும், குடாநாட்டில் இடம்பெற்றுவருகின்ற இவ்வாறான சம்பவங்களை இல்லாது ஒழிக்கவும், இனிமேல் நடைபெறாமல் இருக்கவும் அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் சிறி ரெலொ கட்சி வேண்டுகோள் விடுக்கிறது. என்றுள்ளது.

### செந்திவேல் அறிக்கை

புதிய ஜனநாயக மாக்சிச லென்னிசக் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில்:-

வலிகாமம்வலயக் கல்விப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் மார்க்கண்டு சிவலிங்கம் மூன்று நாள்களுக்கு முன்பு அவரது இல்லத்தில் இரவு நேரத்தின் போது சுட்டுக்கொல்லப்பட்டிருக்கின்றார். மேலும் இது போன்ற படுகொலைகள் அண்மைக் காலங்களில் தொடரப்பட்டு வந்துள்ளன. இவை வடக்கு, கிழக்கில் ஆயுதக் கலாசாரம் பேணப்பட்டு வருவதையே எடுத்துக் காட்டுகின்றன. மேற்படி கல்விப் பிர திப் பணிப்பாளரின் படுகொலைக்கும் ஏனைய கொலை கொள்ளைச் சம்பவங்களுக்கும் எமது புதிய மாக்சிச - லெனினிசக் கட்சி தனது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கின்றது. அத்துடன் அரசாங்கம் இவற்றுக்கு பொறுப்பும் பதிலும் கூற வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றது.

- இவ்வாறு புதிய ஜனநாயக மாக்சிச - லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் அரசியல் குறிப்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். (ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் மீள்குடியேறிய சிங்கள மக்களுக்கு உதவிசெய்ய யாருமே முன்வரவில்லையாம்

## கண்ணீர் வடிக்கிறது ஹெல உறுமய

கொழும்பு, டிசெ.30

மீள்குடியேற்றத்துக்காக வடக்குக்குச் சென்றுள்ள சிங்கள மக்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்துகொடுக்க, இதுவரையிலும் எவரேனும் முன்வரவில்லை என ஜாதிக ஹெல உறுமய குற்றஞ்சாட்டியுள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய கட்சியின் பிரசாரச் செயலாளர் நிஷாந்த வர்ணசிங்க இவ்வாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் -

எவரும் மீள்குடியேற்றத்துக்கு உதவ முன்வராததால், வடக்கில் குடியேறச் சென்றுள்ள சிங்கள மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

மீள் குடியேற சென்ற சிங்கள மக்களின் இடம் ஏனையவர்களால் அபகரிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அவர்கள் தற்காலிகமாக நாவற்குழியில், தற்காலிக இருப்பிடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இங்கு இவர்கள் ஒரு மாதம் மற்றும் 18 நாள்களாகவும் தங்கியுள்ள நிலையில், இதுவரையில் இவர்கள் குறித்து எவரும் நடவடிக்கை எடுக்க முன்வரவில்லை.

குறைந்த பட்சம் அரசாங்கம் கூட இவர்கள் விடயத்தில் பாராமுகமாகவே உள்ளது. இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம் - என்றார். (எ)

# மின்கட்டணங்களில் மாற்றம் தொடர்பாக இதுவரை உறுதியான முடிவேதுமில்லை

கொழும்பு, டிசெ.30

நிர்ணயிக்கப்பட்ட அலகுகளுக்கும் அதிகமான மின்சாரத்தைப் பயன்படுத்தும் பாவனையாளர்களின் மின் கட்டணத்தில் மாற்றம் மேற்கொள்வது தொடர்பில் இதுவரை தீர்மானிக்கப்படவில்லை - இத்தகவலை இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

120 அலகுகள் வரையில் மாதாந்தப் பாவனையுடைய மின் பாவனையாளர்களின் கட்டணப் பட்டியல்களில் மாற்றங்கள் மேற்கொள்ளவேண்டாமென ஜனாதிபதி நேற்றுமுன்தினம் குறித்த பிரிவுகளுக்குப் பணிப்புரை வழங்கியிருந்தார்.

எனினும் பொதுமக்கள் பயன்பாட்டு ஆணைக்குழுவின் ஊடாகப் புதிய கட்டண முறைமை உருவாக்கப்பட்டுள்ளதாகவும், இந்த ஆணைக் குழுவுடன் கலந்துரையாடிய பின்னரே இது தொடர்பிலான இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படவுள்ளது எனவும் மின்சார சபையின் தலைவர் வித்யா தில்ருக் அமரபால தெரிவித்துள்ளார். (எ)

# விடைத்தாள் மதிப்பீட்டுப் பணி இன்று முதல் ஆரம்பம்

கொழும்பு, டிசெ.30


நடைபெற்று முடிந்த ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையின் விடைத்தாள் மதிப்பிடும் பணி இன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த விடைத்தாள் மதிப்பிடும் பணி நாடு முழுவதும் 51 நிலையங்களில் இடம்பெறவுள்ளது.

முதலாம் கட்ட விடைத்தாள் மதிப்பிடும் பணி டிசெம்பர் மாதம் 30ஆம் திகதியிலிருந்து ஜனவரி 8 ஆந் திகதி வரையும், இரண்டாம் கட்ட விடைத்தாள் மதிப்பிடும் பணி ஜனவரி 20 ஆம் திகதி ஆரம்பமாகி 29 ஆம் திகதி வரையும் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் விடைத்தாள் திருத்தும் பணிகள், யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தர பெண்கள் பாடசாலை, யாழ். மத்திய கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் ஆகியவற்றில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

## என்றென்றும் இணைவு...



பலமாகும் உறவு: இந்திய பாதுகாப்புச் செயலர் பிரதீப்குமார் மஹிந்த ராஜபக்ஷவை நேற்றுமுன்தினம் காலை அலரிமாளிகையில் சந்தித்துப் பேசினார்

# கத்தி வைத்திருந்த இலங்கையர் கைதானார் இத்தாலியில்

கொழும்பு, டிசெ.30

சட்டவிரோதமான முறையில் இரண்டு கத்திகளை வைத்திருந்தமைக்காக, இத்தாலியில் இலங்கையர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மேலும் இரண்டு இலங்கையர்களும் இச் சம்பவம் குறித்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

மல்டா நகரில் இருந்து ரோமில் உள்ள வானூர்தி நிலையத்துக்கு செல்லும் போது குறித்த இலங்கையர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரது காற்சட்டைப் பையில் 7.5 சென்றிமீற்றர் மற்றும் 9 சென்றிமீற்றர் நீளமான இரண்டு கத்திகள் இருந்தன. எனினும் குறித்த இரு கத்திகளும் எங்கிருந்து பெறப்பட்டன என்ற பொலிஸாரின் கேள்விக்கு சரியாக பதில் வழங்காத நிலையிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார். இந்நபர் அங்கிருந்து கட்டார் செல்வதற்காக விமான நிலையத்துக்கு வந்த போதே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (எ)

# வடக்கு கிழக்குப் பகுதிகளில் பணியாற்ற விரைவில் 2 ஆயிரம் தமிழர்கள் பொலிஸில் இணைக்கப்படுவர்

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள சகல பொலிஸ் பிரிவுகளுக்கும் தேவையான தமிழ் பேசும் பொலிஸாரை இணைத்துக்கொள்ளும் நடவடிக்கைகள் விரைவில் ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைப் பொலிஸ் மா அதிபர் மகிந்த பாலசூரிய கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

இத்திட்டத்தின் அடிப்படையில் வடக்கு, கிழக்கு பகுதிகளில் சுமார் 2 ஆயிரம் தமிழ் பேசும் பொலிஸார் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் வடபகுதியில் பல பொலிஸ் நிலையங்கள் புனரமைக்கப்பட்டு வருவதாகவும், விரைவில் அந்தப் பணிகள் நிறைவடையவுள்ளன எனவும் பொலிஸ்மா அதிபர் மகிந்த பாலசூரிய குறிப்பிட்டார்.

இதேவேளை, சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கான நடவடிக்கைகளும் எதிர்வரும் காலங்களில் பொலிஸாரால் செயற்படுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (எ)

# வீட்டு மின்னிணைப்பு பயிற்சி நெறி

கெருடாவில், டிசெ.30

ஜீ. சீ. ஈ சாதாரண தரம் வரை கல்வி கற்ற மாணவர்களுக்கு முறைசாராக் கல்விப்பிரிவினரால் நடத்தப்படும் வீட்டு மின் இணைப்புப் பயிற்சி வகுப்பு வல்வை சிதம்பரக் கல்லூரியில் எதிர்வரும் ஜனவரி மாதம் ஆரம்பமாகவுள்ளன. எனவே மேற்படி பயிற்சிகளில் கலந்துகொள்ளவிரும்புவோர் நாளை வெள்ளிக்கிழமை முன்னர் மேற்படி கல்லூரி அதிபர் எஸ்.நற்குணலிங்கத்திடம் விண்ணப்பங்களைப் பெற்று பூர்த்திசெய்து கொடுக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (201-253)

# இறக்குமதியாகும் தேங்காய்களால் இலங்கையிலுள்ள தென்னைகளுக்கு நோய் ஏற்படாதிருக்க நடவடிக்கை

கொழும்பு, டிசெ.30

இந்தியாவின், கேரள மாநிலத்திலிருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் தேங்காய்களிலிருந்து இலங்கையிலுள்ள தென்னைகளுக்கு நோய்கள் பரவாதவாறு தடுப்பதற்கு அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக உள்நாட்டு வர்த்தக அமைச்சு உறுதியளித்துள்ளது.

சதோசா நிறுவனத்தினூடாக தேங்காய்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதியை ஏற்கெனவே திறைசேரி வழங்கியுள்ளது. ஆனாலும், கேரள மாநிலத்திலிருந்து தேங்காய்களை இறக்குமதி செய்வதனூடாக இலங்கையிலும் நோய்த் தாக்கம் ஏற்படலாமென்று பலர் அஞ்சுகின்றனர்.

இதனால் கேரள மாநிலத்திலிருந்து தேங்காய்கள் இறக்குமதி செய்யப்படும்போது, நோய் பரவாதவாறு தடுப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளதாக உள்நாட்டு வர்த்தக அமைச்சின் செயலாளர் எஸ்.சிறிசேன தெரிவித்தார்.

தேங்காயின் விலை தற்போது குறைவடையத் தொடங்கியுள்ளது. மழையுடன் கூடிய காலநிலை தொடர்ந்தும் நீடிப்பதால் தேங்காய் விநியோகத்தில் தேக்க நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் மழைக்காலங்களில் மரங்களில் ஏறமுடியாததாலும், தேங்காய்க்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. மேலும், தென்னந்தோட்டங்கள் மழையால் சேறும் சகதியுமாக மாறியுள்ளதால் அங்கு வாகனங்கள் செல்லமுடியாத நிலை தோன்றியுள்ளது. இவையே இலங்கையில் தேங்காய்களுக்கு திடீரெனப் பற்றாக்குறை ஏற்படுவதற்கான காரணம்' எனவும் அவர் கூறினார்.

எனினும் அடுத்த வருடத்தில் இருந்து சந்தைகளினூடாகத் தேங்காய்களை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

இதனால் எதிர்காலத்தில் தற்போது ஏற்பட்டுள்ளது போன்ற திடீர் பற்றாக்குறைகள் ஏற்படுவதை தடுக்க முடியும் - என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, தாவர பாதுகாப்புச் சட்டத்தின் கீழ், இறக்குமதி செய்வதற்கு தடை விதிக்கப்பட்டபோதிலும், தேங்காய்களை இறக்குமதி செய்து குறைந்த விலைகளில் சந்தைகளில் விற்பனை செய்வதற்கு தீர்மானித்துள்ளதாக அமைச்சர் ஜோன்ஸ்ரன் பெர்னாண்டோ ஏற்கனவே தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

# தொடர்ச்சியாகப் பொழிந்த பெருமழை வெங்காயச் செய்கையாளர் பெரும்பாடு

வலி.வடக்கு, டிசெ.30

யாழ். குடாநாட்டில் மீண்டும் பெய்யத் தொடங்கியுள்ள பெரும் மழை காரணமாக பல ஏக்கர் நிலப்பரப்பில் செய்கை பண்ணப்பட்ட வெங்காயம் அழுகிவிடும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

தொடர்ந்து பெய்து வந்த மழை கடந்த வாரம் ஓய்ந்ததைத் தொடர்ந்து விவசாயிகள் தோட்டங்களைப் பண்படுத்தி வெங்காயப் பயிர்ச்செய்கையை பெருமெடுப்பில் மேற்கொண்டிருந்தார்கள்.

இந்த நிலையில் மீண்டும் கடந்த இரண்டு தினங்களாக தொடர்ந்து மழைபெய்யத் தொடங்கியமையால் வெங்காயம் நடப்பட்ட தோட்டங்களில் வெள்ளநீர் தேங்கத் தொடங்கியுள்ளது.

தோட்டங்களில் வெள்ளம் தேங்கி இருப்பதால் விதை வெங்காயம் அழுகும் நிலையை எதிர்நோக்கியுள்ளதாக விவசாய சம்மேளன பிரதிநிதிகள் கவலையுடன் தெரிவித்துள்ளார்கள்.

குறிப்பாக வலி கிழக்கு, வலி.வடக்கு, வலி.மேற்கு, வலி.தென்மேற்கு மற்றும் வடமராட்சிப் பிரதேச தோட்டச் செய்கையாளர்களே மழையால் கடுமையான பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

தற்போது பயிரிடப்பட்டுள்ள வெங்காயப் பயிர் அழுகும் நிலை ஏற்பட்டுள்ளதால் ஏற்கனவே சந்தையில் உச்ச நிலையில் உள்ள வெங்காயத்தின் விலை மேலும் எகிறக்கூடிய கூடிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-26-85)

# மாலைதீவு மறுப்பு

இலங்கையில் எச்1என்1 வைரஸ் பரவல் குறித்து கவலை கொண்டிருந்த போதிலும் இலங்கைக்கு பயணம் செய்யவேண்டாம் குறித்து மாலைதீவு மக்களுக்கு ஆலோசனை எதுவும் வழங்கப்படவில்லை என மாலைதீவின் சமூக சுகாதார மற்றும் நோய் கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை மாலைதீவில் எவரும் இந்நோயினால் பாதிக்கப்பட்டதாக உறுதிப்படுத்தப்படவில்லை எனவும் அந்நிலையம் தெரிவித்துள்ளது.

பறவைக் காய்ச்சல் பெருகியுள்ள இலங்கைக்கான தமது பயணங்கள் குறித்து மாலைதீவு மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் - என அறிவித்ததாக செய்திகள் வெளிவந்ததை அடுத்தே [illegible] மாலைதீவு அரசாங்கம் விடுத்துள்ளது. (எ)

# தங்கத்துக்கான கேள்வி அதிகரித்தாலும் இன்னும் சூடுபிடிக்கவில்லை வியாபாரம்

## நகை வியாபாரிகள் சங்கத் தலைவர் தகவல்

கொழும்பு, டிசெ.30

தங்கத்துக்கான கேள்வி படிப்படியாக உலக சந்தையில் அதிகரித்து வருகின்றது. இனிவரும் காலங்களில் இது மேலும் அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வாறு இலங்கை நகை வியாபாரிகள் சங்கத் தலைவர் கே.ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தங்கத்தின் விலை அதிகரித்துக்கொண்டே செல்கின்றபோதும், நாம் எதிர்பார்த்த அளவுக்கு வியாபாரம் அதிகரிக்கவில்லை.

இப்போது 24 கரட் தங்கம் 45,500 ரூபாவாகவும் 22 கரட் தங்கம் 39,500 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகிறது. இப்போது வியாபாரம் அதிகமாக உள்ளது. இது அண்மையில் வரவுள்ள புதுவருடம், தைப்பொங்கல் போன்ற பண்டிகைகள் காரணமாக ஏற்பட்ட ஒன்றுதான்.

தங்க வியாபாரம் செய்வதற்கான பாதுகாப்பான சூழலை உருவாக்குவதில் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, வகித்த பாத்திரத்தை பாராட்டி அவருக்கு மரியாதை செய்யும் முகமாக எமது சங்கம் கடந்த வாரம் நமக்காக நாம் நிதியத்துக்கு 2 மில்லியன் ரூபாவை கடந்த வாரம் அன்பளிப்பு செய்தது - என்றார். (எ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தேசிய கல்வி நிறுவன சபை உறுப்பினர் பதவியை ஏற்பதற்கு பேரியல் மறுப்பு

## தனது அனுமதி இல்லாமலேயே நியமனம் என்று குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ.30

தேசிய கல்வி நிறுவனத்தின் சபை உறுப்பினர் பதவியைத் தான் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று தெரிவித்துள்ள முன்னாள் அமைச்சர் பேரியல் அஷ்ரப் தனது அனுமதி இல்லாமலேயே கல்வியமைச்சர் பந்துல குணவர்தன இச் சபைக்குத் தன்னை நியமித்துள்ளார் எனவும் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

பாடசாலை பாட விதானங்களை மறு சீரமைப்பு செய்யும் தேசிய கல்வி நிறுவனத்தின் உறுப்பினர் பதவிக்கு கல்வி அமைச்சர் என்னை நியமித்துள்ள போதிலும், அது தொடர்பாக இதுவரை கல்வியமைச்சு உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை.

இதுபோன்ற எந்தப் பதவியையும் நான் எதிர்பார்க்கவில்லை. கல்வியமைச்சின் ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நான் ஒருபோதும் ஆசிரியர் சேவையில் ஈடுபடவில்லை.

- இப்படி அவர் கூறியுள்ளார்.

பாடசாலை பாட விதானங்களை மறு சீரமைப்பு செய்யும் தேசிய கல்வி நிறுவனத்தின் சபை உறுப்பினர்களாக முன்னாள் அமைச்சர் பேரியல் அஷ்ரப் உட்பட ஏழுபேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீட பீடாதிபதி பேராசிரியர் அபேரத்ன பண்டார, தேசிய கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகமாக கல்வியமைச்சர் பந்துல குணவர்தனவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

(ஒ-சி)

## மரண அறிவித்தல்

### தம்பையா சிவசம்பு



காரைநகர் கொள்ளடைப்பைப் பிறப்பிடமாகவும், 215/19, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா சிவசம்பு நேற்று (29.12.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா- பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கனகசபை- தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், செல்லாட்சியின் (மலர்) அன்புக் கணவரும், பொன்மலரின் (மல்லிகா) பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற வைத்திலிங்கம், பாலசிங்கத்தின் அன்புச் சகோதரனும், நித்தியலட்சுமி, நவரெட்ணம், இராஜேஸ்வரி (கோப்பாய்) மகேஸ்வரி, புவனேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற சண்முகதாஸ் மற்றும் புனிதகுமாரி, லோகேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2010) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

215/19, இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம். (108983)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### திருமதி கமலாதேவி மகேந்திரன்



யாமா சந்தி, உடுவில் தெற்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் 91/4, குளோப்மில் வீதி, பண்டாரிக்குளம், வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கமலாதேவி மகேந்திரன் நேற்றுமுன்தினம் 28.12.2010 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சரஸ்வதி தம்பதியரின் ஏக புத்திரியும் பரமநாதர் மகேந்திரனின் (ஓய்வு பெற்ற பொலிஸ் பரிசோதகர்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பரமநாதர் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் கவிதா, ரமேஷ், சுரேஸ், பிரகாஷ், தர்சிகா ஆகியோரின் அன்புத் தாயும் குகநாதன், ஜனித்தா, நளினி ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான சண்முகலிங்கம், திருநாவுக்கரசு மற்றும் கணேசலிங்கம் (கணேஷ்), விக்னேஸ்வரன் (சோதி) காலஞ்சென்ற தங்கேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சோதிமலர், அருந்தவமலர், ஜெகசோதி, ரத்னா, திலகவதி, பூபாலசிங்கம் ஆகியோரின் மைத்துனியும் அர்வின், ஹரிஸ் ஆகியோரின் அப்பம்மாவும் அபிநிஷாவின் அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது. இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
ப.மகேந்திரன் (கணவர்)
0724191875, 0750413098,
0754578739.

யாமா சந்தி,
உடுவில் தெற்கு,
மானிப்பாய். (108176)

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை கனகரத்தினம்



அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும், மொறட்டுவ சொய்சாபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கனகரத்தினம் நேற்று 29.12 .2010 புதன்கிழமை அதிகாலை 3 மணியளவில் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - பொன்னம்மா தம்பதியிரின் அன்பு மகனும், அரிராம் - புவனேஸ்வரி தம்பதியரின் மருமகனும், அருட்செல்வியின் கணவரும், ஜீவிதா, நரேஷ் (UK). ஆகியோரின் தந்தையும், சரஸ்வதி, கணேசமூர்த்தி, தனலட்சுமி, சுப்பிரமணியம், காலஞ்சென்றவர்களான கிருஷ்ணமூர்த்தி, சிவ லிங்கம் மற்றும் மங்களேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் கனகலிங்கம், சிவபாக்கியம், K.S. K., சம்பந்தர் (ஓய்வுபெற்ற அதிபர், அவிசாவளை சென்.மேரிஸ் கல்லூரி), ஜெயரூபகாந்தி (விஞ்ஞான ஆசிரியை, கிளிநொச்சி), சோதிமலர், கலைச்செல்வி, சுந்தர லிங்கம் (சட்டத்தரணி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சிறிதரன், ஜீவனா (கனடா), கபிலன், கீர்த்னா, மயூரன், நிருஜன், சுகன்யா, நீலுஜா (UK), நிதர்னா ஆகியோரின் சிறிய தந்தையும், கலைவாணி, சிறிவிக்கினராசா, சிறிஸ்கந்தராசா, சுலோசனா, திலீபன் (UK), ரம்யா (UK), தாருணி, தேவகி ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (30.12.2010) வியாழக் கிழமை பி.ப 2 மணிக்கு பொ. சுந்தரலிங்கம் (சட்டத்தரணி), டச்சு றோட், அளவெட்டி மேற்கு இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக, கேணிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டச்சு றோட்,
அளவெட்டி மேற்கு. (108487)

தகவல்
வே.கணேசமூர்த்தி (சகோதரன்).

## செபமாலைத் தாசர் சபைக்கு மூன்று புதிய குருமணிகள்



ஜோண் பீற்றர் டன்சன்



கிறிஸ்தோப்பர் கொட்வின்



யேசுதாசன் றொபேட் வின்சன்

யாழ். நாவாந்துறை பரலோக மாதா பங்கைச் சேர்ந்த அருட். சகோ. ஜோண் பீற்றர் டன்சன், மன்னார் சிலாவத்துறை புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயப் பங்கைச் சேர்ந்த அருட். சகோ. கிறிஸ்தோப்பர் கொட்வின், யாழ். குருநகர் புனித யாகப்பர் பங்கைச் சேர்ந்த அருட். சகோ. யேசுதாசன் றொபேட் வின்சன் ஆகிய மூவரும் இன்று (30.12.2010) வியாழக்கிழமை காலை 9.30 மணியளவில் யாழ்.புனித மரியன்னை பேராலயத்தில், செபமாலைத் தாசர் துறவறச் சபைக் குருக்களாக அதிவண. யாழ். ஆயர் தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகையால் அபிஷேகம் செய்யப்படவுள்ளனர். புதிய குருக் களை வாழ்த்தி அவர்கள் பணி சிறக்க செபிப்போம். (108179)


මහජන සම්පත
மஹஜன சம்பத
Mahajana Sampatha

28.12.2010

அலுவலக முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2337

வெற்றி எழுத்து: J
வெற்றி எண்கள்: 8 5 2 3 5 7

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | J | 8 | 5 | 2 | 3 | 5 | 7 | ரூபா.12,671,520/= | பரிசு - |
| 1 பரிசுகள் | | 8 | 5 | 2 | 3 | 5 | 7 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 02 |
| 2 பரிசுகள் | | | 5 | 2 | 3 | 5 | 7 | ரூபா. 100,000/= | பரிசுகள் 13 |
| 3 பரிசுகள் | | | | 2 | 3 | 5 | 7 | ரூபா. 10,000/= | பரிசுகள் 128 |
| 4 பரிசுகள் | | | | | 3 | 5 | 7 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1305 |
| 5 பரிசுகள் | | | | | | 5 | 7 | ரூபா. 100/= | பரிசுகள் 13180 |
| 6 பரிசுகள் | | | | | | | 7 | ரூபா. 20/= | பரிசுகள் 130668 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசுகள் | | 8 | 5 | 2 | 3 | 5 | | ரூபா. 10,000/= | பரிசுகள் 13 |
| 8 பரிசுகள் | | 8 | 5 | 2 | 3 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் 137 |
| 9 பரிசுகள் | | 8 | 5 | 2 | | | | ரூபா. 100/= | பரிசுகள் 1308 |
| 10 பரிசுகள் | | 8 | 5 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் 13017 |
| 11 பரிசுகள் | J | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் 52402 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை Rs. 13,913,050.00

அடுத்த சீட்டிழுப்பிகான சுப்பர் பரிசு Rs. 12,899,473.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 2470662, 4607000, Hotline. 2433631 மின்னஞ்சல்: www.nlb.lk


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 01 ★ 01 ★ 1930



விண்ணில் 30 ★ 11 ★ 2010

### அமரர் நாகமணி பூமணி

அன்பாலும் பண்பாலும் அரவணைத்த தெய்வமே!
உங்கள் அன்பு நினைவு மட்டும்
எம் மனதை விட்டு அகலவில்லையே!
ஆயிரம் உறவுகள் சூழ்ந்திருந்தும்
ஆறவில்லை எம் மனது
அனுதினம் உங்கள் நினைவோடு
வேதனையில் தவிக்கிறோம்
எத்தனை ஜென்மம் சென்றாலும்
நித்தமும் உங்கள் நினைவுகள்
நிழலென எங்களுடன் தொடர்ந்து வரும்

கடந்த (30.11.2010) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (30.12.2010) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெறும்.

இதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கலையரசு வீதி,
நவாலி தெற்கு,
மானிப்பாய்.

என்று நினைவுகளுடன்....
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## வெந்த புண்ணில் வேல் பாய்ச்சலாமா?

போருக்கு முன்பும் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த போதும் மட்டுமல்ல போர் முடிவுற்றதாக அறிவிக்கப்பட்டுள்ள இந்த காலத்திலும் கூட அப்பாவி சாதாரண பொதுமக்கள் நெருக்கடிகளுக்குள்ளாக்கப்பட்டே வருகிறார்கள்.

அரசின் உயர் மட்டங்களில் இருந்து என்னதான் நல்லிணக்கமான கருத்துக்கள் வெளியிடப்பட்டாலும் கீழ் நிலைகளில் அதற்கேற்றாற்போல் செயற்பாடுகளைக் காண்பது அரிதாக விருக்கின்றது.

இதற்கு சான்றாக நெடுங்கேணி பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படும் ஒருவிடயத்தை நாம் பார்க்கலாம்.

அப்பகுதிக்கு அண்மையில் பயணம் செய்து அப்பகுதி மக்களின் ஆதங்கத்தை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கேட்டறிந்துள்ளார். அதிகாரிகளின் தில்லு முல்லுகளுக்கு அவர்களிடமிருந்து பரிகாரம் கிடைக்காது என்பதால் உறுப்பினர் ஆற்றமுடியாமல் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கே நேரடியாக கடிதம் எழுதியுள்ளார்.

நெடுங்கேணி பிரதேச செயலகத்துக்குட்பட்ட தமிழ் மக்களின் 500 ஏக்கர் வயற்காணியை மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இணைப்பது தொடர்பாக கடந்த 26ஆம் திகதி நான் நெடுங்கேணி பிரதேசத்துக்கு நேரில் சென்று ஒலுமடு, பட்டிக்குடியிருப்பு மற்றும் கந்தளாய்க் கிராம மக்களில் மீள் குடியேற்றம் செய்யப்பட்டுள்ள பொதுமக்களுடன் கலந்துரையாடினேன். அம்மக்களுக்கு சொந்தமான தனிக்கல்லு, இலுப்பைக்குளம், ஒதியமலை ஆகிய மூன்று குளங்களின் கீழ்வரும் 500 ஏக்கர் நெற் காணிகளின் சொந்தக் காரர்களுக்கு பெரும்போக நெற் செய்கைக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. கண்ணிவெடி அகற்றப்படவில்லையென்றே இதற்குக் காரணம் கூறப்பட்டது.

*ஆனால் தமிழ் மக்களின் அதே வயற் காணிகளில் வெலி ஓயாவைச் சேர்ந்த சிங்கள மக்கள் நெற் செய்கையில் ஈடுபட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.*

போரினாலும், இடம் பெயர்வுகளினாலும், உயிர், உடல் மற்றும் பொருள் இழப்புகளாலும் நொந்துபோய் உள்ள தமிழ் மக்களை இவ்வாறு அதிகாரிகள் இனக்குரோதத்துடன் ஓரங்கட்டி வஞ்சகத்துடன் செயல்படுவதானது எந்த வகையிலும் நாட்டுக்கோ நல்லிணக்கத்துக்கோ உதவிடமாட்டாது. இது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியதற்கு ஒப்பான செயலாகும்.

என்னதான் நியாயம் கூறப்பட்டாலும் போரினால் பாதிக்கப்பட்டு மீள்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கே முன் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

கண்ணிவெடிகள் அப்பகுதியில் அகற்றப்படவில்லையென தமிழ் விவசாயிகளுக்கு தெரிவித்துள்ள அதிகாரிகள் அதே பகுதியில் சிங்கள விவசாயிகளை அனுமதிக்கிறார்கள் என்றால் அதன் பொருள் என்ன? கண்ணிவெடிகள் சிங்கள விவசாயிகளை ஒன்றும் செய்துவிடாது என்பதல்ல, தமிழ் மக்களை அப்பகுதிக்குள் அனுமதிக்கக் கூடாது என்ற குரோத மனப்பான்மைதான் காரணம்.

இம் மாதிரி செயற்பாடுகளால்தான் கடந்த காலத்திலும் தமிழ் மக்கள் மனங்களில் விரக்தி வளர்ந்தது. விரோதம் தலைதூக்கியது. சாத்வீக போராட்டங்களும் பின்னர் ஆயுதப் போராட்டங்களும் வெடித்தன. எனவேதான் பொறுப்புள்ள அதிகாரிகளை நிதானத்துடனும், நேர்மையுடனும் ஒரு பக்கம் சாராமலும் செயற்படும் படி அரசு பார்த்துக் கொள்ளவேண்டியது அவசியமாகின்றது.

சிங்கள இனவாதிகளிடமும் இன வாதத் தலைவர்களிடமும் நல்ல பெயர் வாங்கிக்கொள்வதற்காக சில அதிகாரிகள் தமிழ் மக்களை இனக்குரோதத்துடன் நடத்த முற்படுவது என்பது புதிய சங்கதியல்ல,

கிழக்கு மாகாணத்தில் பட்டிப்பளை, தாந்தாமலை முருகன் ஆலயம் தொடர்பாக எழுந்துள்ள இன்னொரு பிரச்சினையும் இவ்வாறு அதிகாரிகளின் குரோதப் போக்கினையே எடுத்துக்காட்டுவதாக உள்ளது.

தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் அவ்வாலயத்தின் சமய செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவித்து வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் மகஜர் அனுப்பியிருக்கிறார். இது குறித்து ஏற்கனவே தாம் பிரதமருக்கு எழுதிய கடிதத்திற்கு பதில் இல்லாமையால் இப்போது மீண்டும் மகஜர் அனுப்புவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அகழ்வாராய்ச்சிகள் தேவையாக இருக்கலாம். ஆனால் அவை அப்பகுதி மக்களின் இன, சமய உணர்வுகளைப் புண்படுத்துவதாக இருக்கலாகாது. தாந்தாமலை முருகன்கோயில் விவகாரம் சாத்வீகப் போராட்டம் ஒன்றுக்கு வழி வகுப்பதாக இருந்து விடலாகாது. அப்பிரதேசத்திலுள்ள இந்து மக்களை ஒன்றிணைத்து அகிம்சை போராட்டம் ஒன்றை நடத்தப்போவதாக நாடாளுமன்ற உறுப்பினர் அறிவித்திருப்பதை அரசு உதாசீனம் செய்யலாகாது.

மக்களின் உணர்வுகளை சீண்டி புண்படுத்துவதானது தேவையற்ற விளைவுகளுக்கு காரணமாகிவிடலாம்.

இவைகளை நியாய சிந்தையுள்ள பிரமுகர்களைக் கொண்டு ஆராய்ந்து மக்கள் மனங்களை வென்றெடுக்க முயல்வது அரசுக்கும், நாட்டுக்கும் நல்லது.

# யாழ்.ஸ்ரான்லி வீதி புனரமைப்புப் பணி இடைநடுவில் விடப்பட்டதால் சிரமம்

யாழ்ப்பாணம், டிசெ.30

யாழ்.நகர் ஸ்ரான்லி வீதியை 'காப்பெற்' வீதியாக புனர் நிர்மாணம் செய்யும் வேலைத்திட்டம் முற்றுப் பெறாமல் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருப்பது வீதிப் போக்குவரத்துக்கு அசௌகரியமாக உள்ளதாகப் பொது மக்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

கடந்த நவம்பர் மாதம் 14ஆம் திகதி ஸ்ரான்லி வீதி 'காப்பெற்' முறை மூலம் புனர்நிர்மாணம் செய்வதற்கான அங்குரார்ப்பண நிகழ்வு இடம்பெற்றது. ஜனாதிபதியின் புதல்வரும் அம்பாந்தோட்டை நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ கலந்துகொண்டு அதனை ஆரம்பித்துவைத்தார்.

யாழ்ப்பாணம், மானிப்பாய், காரைநகர் வீதியின் 3 கிலோமீற்றர் தூரமான பகுதி 'காப்பெற்' முறையில் புனரமைப்புச் செய்வதற்கான ஆரம்பக் கட்டமாக யாழ்.ஸ்ரான்லி வீதியில் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

அதில் தற்போது குறித்த அளவு தூரமான வீதியே 'காப்பெற்' முறையில் சீர்செய்யப்பட்டுள்ளது.

அதுவும் வீதியை இரண்டாகப் பிரித்து அதன் ஒரு பகுதி மட்டுமே 'காப்பெற்' முறை மூலம் புனரமைக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக அந்த வீதியூடாகப் பயணிக்கும் மக்களும் வாகனச் சாரதிகளும் பல அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதனால் விபத்துக்கள் ஏற்படக் கூடிய நிலை காணப்படுவதாகவும் கூறப்படுகிறது.

எனவே இந்த விடயத்தில் அதிக அக்கறை எடுத்து இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ம-14)

## 4 அமைச்சுகளை ஒன்றிணைக்க ஜனாதிபதி மஹிந்த ஆலோசனை

கொழும்பு,டிசெ.30

திறமைமிக்க சமுதாயமொன்றை நாட்டில் உருவாக்குவதற்கு, நான்கு அமைச்சுகளை ஒன்றிணைத்துத் தேசியக் கொள்கை ஒன்றைத் தயாரிக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியுள்ளார்.

உயர் கல்வி, இளைஞர் விவகாரம், உற்பத்தித் திறன் ஊக்குவிப்பு மற்றும் கல்வி ஆகிய அமைச்சுகள் இணைந்து எதிர்காலத் தீர்மானங்களுக்கான செயற்றிட்டம் ஒன்றை உருவாக்குமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியதாகக் கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

குறித்த அமைச்சர்களுக்கிடையிலான முதற்கட்டச் சந்திப்பு அண்மையில் இடம்பெற்றதாகவும் எதிர்காலத்தில் திட்டங்களை வகுப்பதற்காகக் குறித்த அமைச்சர்களுக்கிடையில் மாதாந்தம் சந்திப்பொன்று இடம் பெறவுள்ளதாகவும் அமைச்சர் பந்துல குணவர்தன மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதன் மூலம் கல்வி கற்கும் சிறுவர்களின் திறமைகளை விருத்தி செய்தல் மற்றும் அவர்களின் திறமைகளை உபயோகித்து ஆற்றல் மிகுந்த சமுதாயத்தை உருவாக்குதல் போன்ற திட்டங்கள் வகுக்கப்படவேண்டுமென பந்துல குணவர்தன குறிப்பிட்டுள்ளார். (த)

## கலாசாலை ஆசிரியருக்கு இறுதிப் பரீட்சை

யாழ்ப்பாணம்,டிசெ.30

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நாளை வெள்ளிக் கிழமையுடன் பயிற்சியை நிறைவு செய்து மீண்டும் பாடசாலைகளுக்கு நியமனம் பெற்றுச் செல்லும் ஆசிரியர்களுக்கான இறுதிப் பரீட்சை ஜனவரி 17ஆம் திகதி தொடக்கம் நடைபெறவுள்ளது.

இதற்கான அனுமதி அட்டைகள் கலாசாலையில் வைத்து வழங்கப்படும் என்று அதிபர் வே.கா.கணபதிப்பிள்ளை தெரிவித்துள்ளார். (ம)

## கர்ப்பிணிகளுக்கு பன்றிக்காய்ச்சல் தடுப்பூசி

பன்றிக்காய்ச்சல் நோயால் இலகுவாகப் பீடிக்கப்படக்கூடிய வாய்ப்புகள் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு உள்ளது. அதனால் முன்னேற்பாடாக அவர்களுக்கு நாளை 31 ஆம் திகதிக்கு முன்னர் தடுப்பூசிகளை ஏற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தொற்று நோய் ஒழிப்புப் பிரிவின் வைத்திய நிபுணர் சுதத் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தற்சமயம் பன்றிக்காய்ச்சல் நோய் நாட்டின் பல பாகங்களிலும் தீவிரமாகப் பரவி வருகின்றது. டிசெம்பர் 13 தொடக்கம் 17 வரையான காலப் பகுதியில் 65 பேர் இந்த நோயால் பீடிக்கப்பட்டுள்ளதாகவும் அதில் 9 பேர் மரணித்துள்ளதாகவும் அவர் கூறினார். சளிப் பரிசோதனையின் மூலம் மட்டும் இதுவரை 342 நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளதாகவும் வைத்திய நிபுணர் சுதத் பீரிஸ் மேலும் தெரிவித்தார். (ம-5)

## நெடுந்தீவு பயணிகளுக்கு பாதுகாப்பு அங்கிகள்

யாழ்ப்பாணம், டிசெ.30

நெடுந்தீவு படகுச்சேவையில் பயணிகளின் பாதுகாப்புக்கருதி பாதுகாப்பு அங்கிகள் அணிவது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கென யாழ் அரச அதிபரின் கோரிக்கைக்கு அமைவாக தேசிய அனர்த்த தினத்தை முன்னிட்டு யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் கடற்படைக் கப்டன் ஆர்.ஏ.யூ.எல்.ரணசிங்கவிடம் 300 பாதுகாப்பு அங்கிகள் கையளிக்கப்பட்டன. (ம-7)

## இருப்பிட முகவரியை மாற்றி இரட்டை ஓய்வூதியம் பெற்ற நபர்

### முழுத் தொகையையும் திருப்ப நடவடிக்கை

கொழும்பு,டிசெ.30

11 வருடங்களில் தனது இருப்பிட முகவரியை ஒன்பது தடவைகள் மாற்றி இரட்டை ஓய்வூதியத்தைப் பெற்று வந்த நபர் பற்றிய விசாரணையை ஓய்வூதியத் திணைக்களம் ஆரம்பித்துள்ளது.

இந்த நபர் கொலன்னாவை மற்றும் குளியாப்பிட்டி பிரதேச செயலகங்களிலிருந்து சுமார் 5 லட்சத்து 70 ஆயிரம் ரூபாவை சட்டவிரோதமாகப் பெற்றுள்ளார் என ஓய்வூதியத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கே.ஏ.திலகரத்ன தெரிவித்துள்ளார்.

வானிலை அவதான நிலையத்தில் 1976 ஆம் ஆண்டு அவதானியாகப் பணியாற்றிய இவர் 1996ஆம் ஆண்டில் ஓய்வுபெற்றுள்ளார்.

1996ஆம் ஆண்டில் கடுவெல பிரதேச செயலர் காரியாலயத்திலிருந்து தனது ஓய்வூதியத்தைப் பெற்ற இவர் அதன்பின் பண்டுவஸ்நுவர, குளியாப்பிட்டி மேற்கு, மஹர, அத்தனகல்ல, மீரிகம, கொலன்னாவ; குளியாப்பிட்டி ஆகிய பிரதேச காரியாலயங்களிருந்து இந்த இரட்டிப்பு ஓய்வூதியத்தைப் பெற்றுள்ளார் என விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது.

இவரது முகவரி மாற்றப்பட்டதும் குளியாப்பிட்டியில் இருந்து கொலன்னாவைக்கு அவரது அந்தரங்கக் கோவை அனுப்பப்பட்டது. எனினும் குளியாப்பிட்டிய அலுவலகத்தில் கணினியில் அவரது பெயர் நீக்கப்படாமல் இரண்டு அலுவலகங்களிலும் கடந்த 11 வருடங்களாக இரட்டிப்பு ஓய்வூதியத்தைப் பெற்றுள்ளார்.

குளியாப்பிட்டி கணினியில் ஏற்பட்ட இந்தத் தவறு தெரிந்திருந்த போதும் அதுபற்றி அறிவிக்காமல் அவர் தொடர்ந்து 11 வருடங்களாக இரண்டு செயலகங்களிலும் ஓய்வூதியத்தைப் பெற்று வந்துள்ளார்.

இவ்விடயம் அம்பலமானதும் அவரது ஓய்வூதியம் முற்றாக நிறுத்தப்பட்டதாகவும் சட்டவிரோதமாக அவர் பெற்றுள்ள முழுத்தொகையையும் அறவிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்தார். (ம-5)

## நாளை

| | | |
|---|---|---|
| மார்கழி 16 | | 31.12.2010 வெள்ளிக்கிழமை |
| திதி: | : | ஏகாதசி பி.ப. 05.38 வரை |
| நட்சத்திரம் | : | விசாகம் பி.இ.03.39வரை |
| சுபநேரம் | : | [illegible] வரை |
| ராகுகாலம் | : | 10.59 - 12.29 வரை |

## புலனடக்கமே தவம்

வேதங்கள் சூரியனை புத்திக்கும் சந்திரனை மனத்திற்கும் ஒப்பிடுகின்றன. சத்யா என்ற பதத்தை படித்தால் யா த ஸ என வருகிறது. இங்கே 'யா' என்பது யமா, என்றால் ஒழுக்கம் மற்றும் புலனடக்கம் என்ற பொருளைத் தருகிறுது ''தா'' என்பது தவம் புலன்களை அடக்கினால் மட்டுமே தவம் என்பது செய்ய முடியும். மனம் வாக்கு , காயம் என்ற இம் மூன்றின் ஒருங்கிணைப்பையும் தவத்தின் மூலமே செய்ய முடியும். பிறகு ' சத்' இது ஞானத்தைக்குறிப்பிடுகிறது. புலன்களை அடக்கி, தவம் செய்யும் போதுதான், உண்மையான ஞர்னம் என்கின்ற தெளிவை அடையமுடியும்.

மனிதர்களுக்கு உண்மையின் உள்ளர்த்தம் தெரிந்தும் கூட, சத்தியத்தின் தத்துவத்தைப் பின்பற்ற மறுக்கின்றனர். இதனால்தான் மனித சமுதாயத்தில் இத்துணை துயரமும் கஷ்டமும். சத்யம் எங்கிருக்கிறதோ அங்கே அமைதி என்பது இருக்கும். சத்யம் என்பதுடன் தர்மம் என்கிற அறவழியும் இணைகின்றது.



நன்றி : சாயி அருளமுதம்

சாயி சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்தரங்கு இடமாற்றம்

கோப்பாய், டிசெ.30

கோப்பாய் கோட்ட அதிபர்களுக்கு இன்று வியாழக்கிழமை யாழ். வலயக்கல்வி முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெற விருந்த கருத்தரங்கு யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கு மாற்றப் பட்டுள்ளது என கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வே.பாலசுப்பிரமணியம் அறிவித்துள்ளார். (ம-72)

## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தில் ஒட்டுநராகப் பணியாற்றிய

**மாணிக்கம் பாலசுந்தரம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உதயன் பணிமனை,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

உதயன் நிர்வாக
இயக்குநரும்,
பணியாளர்களும்.

## கண்ணீர் அஞ்சலி



எமது பணிமனையில் மாதர் அபிவிருத்தி நிலையப் போதனாசிரியராகக் கடமையாற்றும் திருமதி த.வேல்வரராணி அவர்களின் பாசமிகு தாய்

திருமதி **மாணிக்கம் பூரணம்**

அவர்கள் 17.12.2010 அன்று சிவபதமடைந்த செய்திகேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஊழியர் நலன்புரி சங்கம்.
உதவி அரசாங்க அதிபர் பணிமனை.
தீவகம் வடக்கு. ஊர்காவற்றுறை.

உதவி அரசாங்க அதிபரும்,
உத்தியோகத்தர்களும்.

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**தம்பிஐயா சிவஞானம்**

(ஓய்வு பெற்ற விவசாய வெளிக்கள உத்தியோகத்தர்)

திதி: தசமி

ஜப்பான் மாமா என்று செல்லமாக அழைக்க
பார் புகழ சேவை செய்து
பாமாலையால் இறைவனை பூஜித்து
விநாயகர் திருவடி சேர்ந்து ஈராண்டு ஆனதோ..!

ராஜ வீதி,
கரந்தன் சந்தி,
நீர்வேலி.

(108140)

சகோதரி, மைத்துனர்,
மருமக்கள்.


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்

1255 நீலம்

சிங்கம்

02 35 40 42

28-12-2010

ஜக்பொட் பரிசு ரூபா. 5,672,875/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 239,945 | 20/- | 4,798,900/- |
| 2 இலக்கங்கள் | 22,037 | 40/- | 881,480/- |
| 1 இல. + லக்கினம் | 21,850 | 60/- | 1,311,000/- |
| 2 இல. + லக்கினம் | 2,002 | 200/- | 400,400/- |
| 3 இலக்கங்கள் | 585 | 1000/- | 585,000/- |
| 3 இல. + லக்கினம் | 44 | 10,000/- | 440,000/- |
| 4 இலக்கங்கள் | 02 | 200,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | 01 | 5,672,875/- | 5,672,875/- |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 14,489,655/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 644 | | 620,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 287,110 | | 15,110,155/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,000,000/-

### இரண்டாவது வாய்ப்பு

வெற்றி இலக்கங்கள்

06 08 25 54

ஜக்பொட் பரிசு ரூபா. 300,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 641 | 500/- | 320,500/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 300,000/- | - |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 644 | | 620,500/- |

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா. 400,000/-


# மஹஜன சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு, டிசெ. 30

தேசிய லொத்தர் சபையின் மஹஜன சம்பத 2337ஆம் இலக்க சீட்டிழுப்பில் "J" என்ற ஆங்கில எழுத்தும் 8/5/2/3/5/7 என்ற இலக்கங்களும் அதிர்ஷ்டத்துக் குரியனவாகத் தெரிவாகின.

இதன் பிரகாரம் வலமிருந்து இடமான அமைப்பில் சுப்பர் பரிசு வெல்லப்பட வில்லை.

8/5/2/3/5/7 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் இருவருக்கு முதலாம் பரிசாக தலா இருபது இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

5/2/3/5/7 சீட்டுக்களை வைத்திருக்கும் 13 பேருக்கு இரண்டாம் பரிசாகத் தலா ஒரு இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

2/3/5/7 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 128 பேருக்கு மூன்றாம் பரிசாகத் தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

3/5/7 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,305 பேருக்கு 4ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கும்.

5/7 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13,180 பேருக்கு 5ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

7 என்ற இலக்கத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,30,668 பேருக்கு 6ஆம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கும்.

இடமிருந்து வலமான அமைப்பில் 8/5/2/3/5 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13 பேருக்கு ஏழாம் பரிசாக தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

8/5/2/3 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 137 பேருக்கு 8ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கும்.

8/5/2 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,308 பேருக்கு 9ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

8/5 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13,017 பேருக்கு பத்தாம் பரிசாக தலா ஐம்பது ரூபா கிடைக்கும்.

"J" என்ற ஆங்கில எழுத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 52,402 பேருக்கு பதினோராம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது. (ஒ)


## விற்பனைக்கு

இரண்டு 3 Face 3 H.P மோட்டார் புதியது விற்பனைக்குண்டு.
(சைனீஸ் பழைய மொடல்)
தொடர்பு:-0777568685

## வேலைக்கு ஆள் தேவை

கிங்ஸ் எலெக்ரோனிக்ஸ் ஸ்தாபனத் திற்கு 25 வயதிற்குட்பட்ட ஆண்கள் தேவை.
தொடர்பு:- கிங்ஸ் எலெக்ரோனிக்ஸ்,
11 -A ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P:021-2223857


## தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ.சங்கம், கைதடி

**திருத்தம்**

கடந்த 22.12.2010 பக்கம் 22 இல் பிரசுரமான பதவி வெற்றிடம் விளம்பரத்தில் கூ.வே.ஆ சுற்றுநிருபம் 86/2006 இன் படி என்பதை கூ.வே.ஆ. சுற்று நிருபம் 66/2006 இன்படி என திருத்தி வாசிக்கவும்.

பொது முகாமையாளர்.


## மணமகள் தேவை

1976ல் பிறந்த ரோகினி நட்சத்திரம், செவ்வாய்க் குற்றமற்ற அரச உத்தியோகம் பார்க்கும் மணமக னுக்கு அரச தொழில் புரியும் மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். சாதி இந்து அல்லது கிறிஸ்தவர்.
தொடர்பு: 0776668387


## தவறிவிட்டது

குரும்பசிட்டி கிழக்கு, கட்டுவன் என்ற விலாசத்தைக் கொண்டுள்ள சேகர் சுதாகர் என்பவருடைய இலக்கம் 802694555V கொண்ட தேசிய அடையாள அட்டை இரண்டு வாரங்களுக்கு முன்னர் யாழ்ப்பாண நகரப் பகுதியில் தொலைந்துவிட்டது. கண்டெடுத்தோர் தயவு செய்து பாலா மில், பலாலி வீதி, உரும்பிராய் என்ற விலாசத்தில் அல்லது 0778332857 என்ற தொலைபேசி இலக்கத் [illegible]

# முன்பள்ளி வருடாந்த கலை விழா

கோப்பாய், டிசெ.30

நீர்வேலி ஸ்ரீ கணேசா முன்பள்ளி வருடாந்த கலை விழா இன்று வியாழக்கிழமை முன்பள்ளி தலைவர் க. முருகையா தலைமையில் பிற்பகல் 2 மணிக்கு முன்பள்ளி முன்றிலில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி. கிழக்கு பிரதேச செயலாளர் ம.பிரதீபன் கலந்துகொள்வார். (ம-72)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் சுப்பிரமணியம் இராசரத்தினம்

(ஓய்வுபெற்ற பொறியியலாளர், பெருந்தெருக்கள் திணைக்களம்.)



தோற்றம்
1925 * 09 * 30

மறைவு
2010 * 01 * 09

திதி: 30.12.2010

ஐயனே!
கண்ணின் கருமணிபோல் காத்து
காசித்தலத்தில் கங்கையில் உன்
அஸ்தியைக் கரைத்தேன் ஈசன்திருவடியில்
சேரவிட்டு வாடி தேங்கி நிற்கின்றேன் ஐயா!

நீண்டியாம்பந்தை,
பருத்தித்துறை.

(108481)

மனைவி, சகோதரர்கள்,
பேரமக்கள்,
மருமக்கள்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**சற்குணநாதன் குலதாசன்**

(முன்னாள் உப அஞ்சல் அதிபர், விடத்தற்பளை)

பிறப்பு
27
03
1977

இறப்பு
19
01
2009

நேற்று எம்முடன் நீவிர் இருந்த
நேச நினைவினை மீட்டியே பார்க்கின்றோம்
காலதேவனின் கணிப்பின் விளைவால்
வாழ்வுச் சக்கரம் வழிமாறியது.
காலம் ஆயிரம் கரைந்து போயினும்
ஞாலம் தன்னில் உம் பெயர் நிலைக்கும்
நடமாடும் வீட்டில் படமாகினாய்
நாளும் நினைவில் உன்முகம் தெரியுது.

ஆத்ம சாந்திக்காய்!
பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்.

விடத்தற்பளை, மிருசுவில்.

## மரண அறிவித்தல்

**திருமதி திரேசா செல்வம் அன்ரனி**



யாழ்ப்பாணம், சப்பல் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திரேசா செல்வம் அன்ரனி (28.12.2010) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மனுவல் அகஸ்ரின் அன்ரனியின் அன்பு மனைவியும், றெஜி னோல்ட் (ஓய்வூதியர், இலங்கை வங்கி), வில்வராஜசிங்கம் (கனடா), மாலினி ஆகியோரின் அன்புத் தாயும் தேவயோகம், மரியராணி (ஆசிரியை, யா/புனித சாள்ஸ் மகா வித்தி யாலயம்), பாலேந்திரம் யோசப் (யாழ்.போன் சொப்) ஆகியோரின் அன்பு மாமியும் ஷிபானி (இலங்கை வங்கி மாகாணக் காரியாலயம், யாழ்ப்பாணம்), நிஷானி (தேசிய சேமிப்பு வங்கி, சாவகச்சேரி), மதிவதனன் (ஆசிரியர், யோசவாஸ் மகா வித்தியாலயம், விடத்தல்த் தீவு), மேரி ஆன், மினோலின், அர்ச்ஜீன், ஷேன் ஜொயல், றொஷ்னி ஏஞ்சலின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஸ்ரீவ் றொஜர், மார்க் ரெறோன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு இன்று (30.12.2010) வியாழக்கிழமை மாலை 3 மணியளவில் யாழ்.புனித கொஞ்சேஞ்சி மாதா ஆலயத்தில் திருப்பலியின் பின்னர் பூதவுடல் நல்லடக்கத்துக்காக கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.48, சப்பல் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே:: 021 222 1170

தகவல்:
மாலினி யோசப்
(மகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். குடாநாட்டு பொலிஸ் நிலையங்களில் தமிழ் பேசும் பொலிஸார் போதியளவு இல்லை

## இரவு நேரங்களில் மக்கள் நெருக்கடியில்

யாழ்ப்பாணம், டிசெ.30

யாழ்.குடாநாட்டில் உள்ள பொலிஸ் நிலையங்களில் தமிழ் தெரிந்த பொலிஸார் போதியளவு இன்மையால் பொது மக்கள் பல்வேறு சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

அண்மைக் காலத்தில் யாழ். குடாநாட்டில் திருட்டுக்கள், கொள்ளைகள், துப்பாக்கிப் பிரயோகங்கள் என்று குற்றச் செயல்கள் அதிகரித்துள்ள நிலையில் பொதுமக்கள் பொலிஸ் நிலையங்களுடன் அவசரத் தொடர்புகளை மேற்கொள்வதில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

பொலிஸ் நிலையங்களில் தமிழ் பேசும் பொலிஸார்கள் இருப்பதாகக் கூறப்படுகின்றதே அன்றி அவசரத்திற்குத் தொடர்பு கொள்ளக் கூடிய வகையில் தமிழ்ப் பொலிஸார் கடமையில் இல்லை என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

ஆபத்தான, இக்கட்டான நேரத்தில் பொலிஸாருடன் தொடர்பு கொள்ள முடியாத நிலையை எண்ணி மக்கள் மிகவும் வேதனை அடைகின்றனர்.

அவசரத்திற்கு பொலிஸ் நிலையங்களுக்குப் தொலைபேசி அழைப்புக்களை எடுத்தால் சிங்களப் பொலிஸாரே அவற்றைக் கையாள்கின்றனர்.

மக்கள் தமது நிலமையைக் கூறினாலும் கூட தமிழ் தெரியாமையினால் தொலைபேசி இணைப்புகள் துண்டிக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

இத்தகைய நிலமையைப் போக்குவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-68)

# சிவன் புது வீதியில் கொட்டப்படும் கழிவால் அப்பகுதி மக்களுக்குச் சிரமம்



யாழ்ப்பாணம், டிசெ.30

'குப்பை போடாதீர்' என அறிவித்தல் போடப்பட்ட சிவன் புது வீதியில் தினமும் கூடுதலான கழிவுப் பொருள்கள் கொட்டப்படுவதால் அப்பகுதியால் செல்ல முடியாது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

மணல்தறை ஒழுங்கையிலும் இவ்வாறு குப்பைகள் போடப்படுவதால் இந்த வீதியால் செல்லும் மக்களும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர் என்று கூறப் படுகின்றது.

தூர இடங்களில் உள்ளவர்களும் வர்த்தகர்களுமே இரவு நேரங்களில் கழிவுப் பொருள்களைக் கொண்டு வந்து இப்பகுதிகளில் கொட்டுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திருநெல்வேலி சிவன் கோயில் வாயிலுக்கு நேராகத் தேர் முட்டிக்குச் சமீபமாகவும் இப்போது கழிவுப் பொருள்கள் கொட்டப்பட்டு வருகின்றன.

ஆலயச் சூழலில் இவ்வாறு

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

கழிவுப் பொருள்களைப் போடுவது குறித்து அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றார்கள்.

இவ்வாறு கொட்டப்படும் கழிவுப் பொருள்களால் சுகாதாரச் சீர்கேடுகள் நிலவுவதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

# காலந்தாழ்த்தி ஆதனவரி செலுத்தினால் கூடவே தண்டப் பணமும் அறவிடப்படும்

சண்டிலிப்பாய், டிசெ.30

யாழ்.குடாநாட்டில் வசிக்கும் வரியிறுப்பாளர்கள் வருடாந்த மதிப்பீட்டின்படி 2011ஆம் ஆண்டுக்குரிய ஆதன வரியைக் குறிப்பிட்ட கால எல்லைக்கு முன் செலுத்தி, வரிக் கழிவைப் பெற்று, நன்மை அடைவதுடன் பிரதேசத்தின் அபிவிருத்திக்கு ஒத்துழைப்பும் வழங்க வேண்டும் என்று பிரதேச சபைகள் அறிவுறுத்தி உள்ளனர்.

இதேவேளை குறிப்பிட்ட கால எல்லைக்குள் வரியைச் செலுத்தாதவர்கள் மீது தண்டப் பணமும் சேர்த்து அறவிடப் படும் என பிரதேச சபைகளின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

அடுத்த ஆண்டுக்கான ஆதன வரி அறவீடு தொடர்பாக பிரதேச சபைகள் மேலும் தெரிவித்திருப்பதாவது:- தற்போது அமுலில் உள்ள வருடாந்த மதிப்பீட்டிற்கமைய (10 வீதம்) 2011 ஆம் ஆண்டுக்கான ஆதனவரி அறவீடு செய்யப்பட வேண்டு மெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆண்டு முழுவதற்குமுரிய வரித்தொகையை ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துவோருக்கு அந்த வருடத்துக்கான மொத்த வரியில் 12 வீதக் கழிவும் ஒவ்வொரு கந்தாயங்களுக்குரிய வரியை அந்தந்தக் கந்தாயத்தின் முதல் மாத இறுதி நாளுக்கு முன் செலுத்துவோருக்கு 05 வீதம் கழிவும் வழங்கப்படும்.

இதேவேளை வரி செலுத்தத் தவறின் வதிவிடங்கள், வெற்றுக்காணிகளுக்கு 15 வீதமும் வியாபார நோக்கங்களுக்காகப் பாவிக்கப்படும் ஆதனங்களுக்கு 20 வீதமும் அபராதக் கட்டணமாக வரியுடன் சேர்த்து அறவிடப்படும். எனவே, ஆதனங்களுக்குரிய வரியை 31.01.2011 ஆம் திகதிக்கு முன் நிலுவை இன்றிச் செலுத்தி, வரிக் கழிவைப் பெற்றுக் கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (201-115)

# எப்போது வரும் குமுதினி

யாழ்ப்பாணம், டிசெ.30

டிசெம்பர் மாதம் 24 ஆம் திகதி குமுதினிப் படகு நெடுந்தீவுச் சேவைக்கு வருமென வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகள் அண்மையில் தெரிவித்திருந்த நிலையில் மேற்படி படகின் திருத்த வேலைகள் இதுவரை பூர்த்தியடையவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

நவம்பர் 24 ஆம் திகதி இப்படகு சேவையில் ஈடுபடும் எனவும் முன்னர் சொல்லப்பட்டிருந்தது. பின்னர் ஒரு மாத காலம் தாமதமாகும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை-

ஜனவரி முதலாம் திகதி நெடுந்தீவுக்கான சேவையில் ஈடுபடும் எனப் பெரிய அளவில் எதிர்பார்க்கப்பட்டிருந்த புதிய படகின் கட்டுமான வேலைகளும் முழுமையடையவில்லை எனக் கூறப்படுகின்றது. இந்நிலையில் நெடுந்தீவு மக்கள் திறந்த படகுகளில் மழை வெய்யில்களுக்கு மத்தியில் பயணிக்க வேண்டிய நிலை தொடர்ந்த வண்ணம் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-7)

# தரம் ஒன்று மாணவருக்கு கால்கோள் விழா ஜனவரி 18 இல் நடத்துமாறு அறிவுறுத்து

அச்சுவேலி, டிசெ.30

தரம் 1 இல் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களுக்கான கால்கோள் விழா ஆரம்பப் பிரிவு வகுப்புக்கள் உள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் ஜனவரி 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு மத்திய கல்வி அமைச்சின் செயலாளர் சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளார்.

புதிதாகப் பாடசாலைகளில் அனுமதிக்கப்படும் தரம் 1 மாணவர்களை தரம் 2 மாணவர்கள் அன்புடன் மாலை சூட்டி வரவேற்றுக் கொள்ளல், புதிய மாணவர்கள் தயக்கம் இன்றி விருப்பத்துடன் பாடசாலைக்குச் செல்லல், ஆரம்பக் கல்வி மறுசீரமைப்பை சமூகத்துக்கு அறிமுகம் செய்தல், ஆரம்பக்கல்விப் பாடவிதானத்தை சமூகத்துக்கு வெளிப்படுத்தல் ஆகிய செயற்பாடுகளை உள்ளடக்கிய வகையில் கால்கோள் விழா ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஜனவரி 18ஆம் திகதி காலையில் அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற உதவி பெறும் அனைத்துப் பாடசாலைகளிலும் தனியார் பாடசாலைகளிலும் ஆரம்பப் பிரிவில் தரம் 1 மாணவர்களுக்கான கால்கோள் விழாவை முதல் முதல் பாடசாலைக்கு வருகை தரும் பிள்ளைகளின் ஞாபகத்தில் இருக்கக் கூடிய வகையில் ஒழுங்கு செய்து நடத்த வேண்டும் என மத்திய கல்வி அமைச்சின் செயலாளர் எவ்.எம்.குணசேகரா சுற்றறிக்கை மூலம் அறிவுறுத்தியுள்ளார்.

சுற்றறிக்கை சகல பாடசாலைகளுக்கும் மத்திய கல்வி அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கால்கோள் விழா தொடர்பான செயற்பாட்டறிக்கை நிகழ்வு தொடர்பான போட்டோ பிரதியுடன் வலயக் கல்வி அலுவலகங்களில் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம-11)

# வெங்காயச் செய்கையைப் பாதித்த சீரற்ற காலநிலையும் மழையும்

அச்சுவேலி, டிசெ.30

சீரற்ற காலநிலையும் தொடர்மழையும் யாழ். குடாநாட்டு காலபோக வெங்காயச் செய்கையை பெருமளவில் பாதித்து இருப்பதோடு வெங்காயப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளைப் பெரியளவில் பொருளாதாரப் பாதிப்புக்கு உள்ளாக்கியுள்ளது என கவலை தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.குடாநாட்டில் கடந்த காலங்களின் வெங்காயச் செய்கை நத்தார் பண்டிகைக்கு முன்னரே மேற்கொள்ளப்படுவது வழமை. இந்த வருடம் பருவமழை மாறுபட்ட வித்தில் தொடர்ந்து பெய்வதும் இடையிடையே கோடை போன்று வெப்பநிலை காணப்படுவதும், வெங்காயப் பயிர்ச் செய்கையை உரிய காலப்பகுதியில் மேற்கொள்ள முடியாத நிலைக்குத் தள்ளியுள்ளது.

நேற்று முன்தினம் பெய்த கனமழையால் நத்தார் பண்டிகைக்குப் பின்னர் நட்ட வெங்காயங்கள் மண்ணால் மூடப்பட்டு அழுகி சேதம் அடைந்துள்ளன.

பண்டிகைக்கு முன்னர் நடுகை செய்யப்பட்டு வளர்ந்துள்ள வெங்காயப் பயிரும் தான் அழுகிச் சேதமடைந்திருப்பது வெங்காயப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளைப் பெரும் கவலைக்கு ஆளாக்கியுள்ளது.

உள்ளூரில் வெங்காயம் கிலோ 240 ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யப்படுகின்றது. அவை அழுகிய நிலையில் காணப்படுகின்றன.

நடுவதற்குச் சேமித்து வைத்த வெங்காயத்தைக் கால நிலைச் சீர்கேடு மற்றும் சந்தை விலை அதிகரிப்பைக் கருத்திற் கொண்டு சில்லறை விலையில் சந்தைக்கு எடுத்துச் சென்று விற்பனை செய்வதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

காலபோக வெங்காயச் செய்கையில் ஏற்பட்டுள்ள பாதிப்பு எதிர்காலத்தில் வெங்காயத்தில் சில்லறை விலையை கிலோ 250 ரூபாவுக்கு மேற்பட்ட நிலைக்குக் கொண்டு செல்லக் கூடியதாக இருக்கும் என்று கூறப்படுகிறது.

விதை வெங்காயத்தை உள்ளூரில் பெற்றுக் கொள்ள முடியாத நிலையையும் இது ஏற்படுத்தி இருப்பதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (ம-11)

# சமுர்த்தி வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் வேலணை பிரதேச மக்களுக்கு உதவிகள்

யாழ்ப்பாணம், டிசெ.30

சமுர்த்தி வாழ்வாதார திட்டத்தின்கீழ் வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் புங்குடுதீவு, மண்டைதீவு, வேலணைப் பகுதிகளில் தெரிவு செய்யப்பட்ட ஆறு கிராமங்களுக்கு சமுர்த்தி அதிகாரசபை நிதியுதவிகளை வழங்கியுள்ளது.

இதில் விவசாயத்திற்கு தெரிவான 16 பயனாளிகளுக்கு 3 லட்சத்து 38 ஆயிரத்து 200 ரூபாவும், கைத்தொழிலுக்குத் தெரிவான 11 பயனாளிகளுக்கு 2 லட்சத்து 20 ஆயிரம் ரூபாவும், சந்தைப்படுத்தலுக்கான 7 பயனாளிகளுக்கு ஒரு லட்சத்து 28 ஆயிரம் ரூபாவும், கால்நடை வளர்ப்பு, மீன் பிடிக்கெனத் தெரிவான 83 பயனாளிகளுக்கு 20 லட்சத்து 73 ஆயிரத்து 800 ரூபாவும் வழங்கப்பட்டுள்ளன.

இதேசமயம் வேலணைப் பிரதேச செயலர் பிரிவின் 24 கிராமங்களில் விவசாய நடவடிக்கைகளுக்காக தெரிவு செய்யப்பட்ட 18 பேருக்கு 4 லட்சத்து 34 ஆயிரத்து 600 ரூபாவும், கைத்தொழிலுக்கென 12 பேருக்கு 2 லட்சத்து 38 ஆயிரம் ரூபாவும், சந்தைப்படுத்தலுக்குத் தெரிவான இருவருக்கு 32 ஆயிரம் ரூபாவும், மீன்பிடி, கால்நடை வளர்ப்புக்கென 122 பேருக்கு 26 லட்சத்து 55 ஆயிரத்து 400 ரூபாவும் வழங்க வேலணை சமுர்த்திச் சங்கம் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது.

ஒவ்வொரு பயனாளியும் தமக்கான கொடுப்பனவுத் தொகையின் அரைவாசித் தொகையைத்தாமே பொறுப்பேற்றுக் கொள்வார்கள் என்று சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளர் இ. தவமோகன் தெரிவித்தார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகதேகியாக வாழ புதிய உணவு வகை

யாழ்ப்பாண மக்களிடையே பாரம்பரிய உணவு வகை, மேல்நாட்டு உணவு வகை எனப் பலவிதமான உணவு வகைகள் பழக்கத்தில் உள்ளன. எனினும் ஒருவரை ஆரோக்கியமாக வைத்திருப்பதற்கு இந்த உணவுவகைகள் உதவி செய்கின்றனவா? அதிகரிக்கும் நோயாளர் தொகை இல்லை என்ற பதிலையே எமக்குத் தருகிறது. Non infection disease என்று கூறப்படும் தொற்றுதலடையா நோய்களான சலரோகம், இருதய நோய், உயர் குருதியமுக்கம் போன்றன இக்காலத்தில் பொதுவான நோய்களாகி விட்டன. ஒருவருக்கு எந்த வயதில் இவ்வகை நோய் ஏற்படுகிறது என்பது அவரின் சிறுவயதிலிருந்தான வாழ்க்கை முறையிலும் பரம்பரைக் காரணிகளிலும் தங்கியிருக்கிறது. வாழ்க்கை முறை எனப்படும்பொழுது அதில் உணவுப் பழக்கங்கள், உடற்பயிற்சி, தொழில் (உடல் வேலை, மூளைக்கு வேலை) புகைத்தல், மதுபானம் அருந்துதல் மற்றும் ஒருவரின் மனநிலை என்பன அடங்குகின்றன. இவற்றில் ஒருவரின் உணவுப் பழக்க வழக்கமும் உடற்பயிற்சியும் முக்கியமானவையாகும். ஒருவரின் சிறு வயதிலிருந்தான உணவுப் பழக்கத்தை சீரான முறைக்கு மாற்றியமைப்பதன் மூலம் இந்நோய்கள் ஏற்படும் வயதைப் பின்தள்ளலாம். அல்லது வராமல் தடுக்கலாம்.

உள்ளக அனுசரணை :
உதயன்

தற்போது யாழ்ப்பாணத்தில் பொதுவாக உண்ணப்படும் காலை, மதிய, இரவு உணவுகளை எடுத்துக்கொண்டால் அவற்றின் பெரும்பகுதி அரிசி அல்லது அவற்றின் மா வகையாக உள்ளது. கோதுமை மா கலக்கப்பட்டே அல்லது கோதுமை மாவில்தனியாக செய்யப்படும் உணவுகளாக உள்ளன. இவை காபோவைதரேற்று (மாப்பொருள்) எனும் உணவுக்கூறை அதிகம் கொண்டுள்ளன. புரதம், கொழுப்பு, விற்றமின், கனியுப்பு மற்றும் நார்ச்சத்து கொண்ட இதர உணவுகள் கறியாக சமைக்கப்பட்டு சிறிதளவிலேயே சேர்க்கப்படுகின்றன. இது ஒரு சமநிலையற்ற உணவுப் பழக்கமாகும்.

சிற்றுண்டி வகைகளை எடுத்துக் கொண்டால் கேக், பற்றிஸ், றோல்ஸ், மிக்சர், பிஸ்கட் போன்ற அதிக கோதுமை மா சேர்க்கப்பட்ட உணவுகளையும் பயற்றம்பணியாரம், சீனி அரியதரம், முறுக்கு, அச்சுப்பலகாரம் போன்ற அரிசிமா கலக்கப்பட்ட உணவுகளையும் காணலாம். இதைவிட தற்போது யாழ்ப்பாணத்தில் அதிகரித்து வரும் வியாபார ஸ்தாபனங்களால் ஐஸ்கிரீம், சொக்லட் மற்றும் பிஸ்கட் வகைகள் மக்களால் அதிகம் நுகரப்படுகின்றன. ஒரு மனிதனுக்கு நாளாந்தம் தேவையான உணவுக் கூறுகளில் காபோவைதரேற்று பிரதானமானதாக இருக்கிறது. எனினும் காபோவைதரேற்றை அதிகமாகக் கொண்ட உணவு வகைளை நாள் ஒன்றுக்கு மூன்று தடவையோ அல்லது அதற்கு மேற்பட்ட தடவைகளோ உண்பது ஆரோக்கியமானதன்று. மனிதனின் சக்தித் தேவையைப் பூர்த்தி செய்தபின் மீதியான காபோவைதரேற்று கொழுப்பாகி உடலில் சேமிக்கப்படுகிறது. இது ஒருவருக்கு நிறை அதிகரிப்பை ஏற்படுதபுதுவதுடன் எதிர்காலத்தில் சலரோகம், இருதயநோய், குருதியமுக்கம் போன்ற நோய்கள் ஏற்படக் காரணமாகிறது.

இந்த ஆபத்திலிருந்து எமது சமுதாயத்தைக் காப்பாற்றி எதிர்காலத்தில்

Dr. மனோஜினி லக்ஸ்மன்
நீரிழிவு சிகிச்சை நிலையம்,
யாழ்.போதனா வைத்தியசாலை

சுகமான வயோதிபர்ளை உருவாக்கும் பணியின் ஓர் அங்கமே இந்தப் புதிய உணவு வகைகளைக் கண்டறியும் ஆராய்ச்சியும் மாபெரும் சமையல் போட்டியும் ஆகும்.

இந்த ஆராய்ச்சியில் சகல அரிசிவகைகளும் மாவகைகளும் தவிர்க்கப்பட்டதன் முக்கிய நோக்கம் பொதுமக்கள் தமது சமையல் திறமையைச் சரியான முறையில் பயன்படுத்தி புதிய உணவு வகைகளைக் கண்டு பிடிக்கவேண்டும் என்பதே. பயறு, கடலை, உழுந்து, பருப்பு வகை போன்றனவும் அவற்றின் மா வகைகளும் மீன், இறைச்சி போன்றனவும் பாவிக்கப்படும்போது தேவையான புரதச்சத்து கிடைக்கிறது. மரக்கறி, இலைவகை, பழங்கள் போன்றன போதியளவு விற்றமின், கனியுப்பு, நார்ச்சத்து என்பவற்றைக் கொண்டுள்ளன. எண்ணெய் வகை, தேங்காய் போன்றன கொழுப்புச் சத்தைக் கொண்டுள்ளன. பால், முட்டை நிறையுணவாகும்.

காபோவைதரேற்று பெரும்பாலான உணவுகளில் போதியளவு காணப்படுகிறது. இவற்றைக் கருத்தில் கொண்டே இவ்வாராய்ச்சியில் தவிர்க்கப்படவேண்டிய, சேர்க்கப்பட வேணடிய உணவுப் பதார்த்தங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. இதற்கமைய மக்கள் தமது புதிய உணவு தயாரிக்கும் ஆராய்ச்சியை ஆரம்பிப்பார்களாயின் அவர்கள் கண்டுபிடிக்கும் புது உணவு ஒருவரைச் சுகதேகியாக வாழவைப்பதற்குப் பொருத்தமான உணவுகளில் ஒன்றாக இருக்கும்.

சமையல் கலையில் கைதேர்ந்தவர்களே ஆர்வமுள்ள சமையல் வல்லுநர்களே இந்த ஆராய்ச்சியில் பங்கேற்று யாழ். சமுதாயத்திற்கு சுவையான ஆரோக்கியமான உணவு வகைகளை அறிமுகம் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இது தொடர்பான உங்கள் சந்தேகங்களுக்குத் தொடர்புகொள்ள வேண்டிய இடம் நீரிழிவு சிகிச்சை நிலையம், யாழ். போதனா வைத்தியசாலை. தொலைபேசி எண் : 021 222 0179

## பாவிக்கக் கூடிய பொருள்கள்

- பருப்பு வகை - துவரம்பருப்பு, மைசூர், கடலைப் பருப்பு போன்றவை.
- பயறு, கௌபி, கொண்டைக் கடலை, உழுந்து வகை,
- சோளம், சோயா, அவரை, சோயாமீற்.
- மரக்கறி (உ-ம்) வெண்டி, கத்தரி, போஞ்சி, தக்காளி, வாழைக்காய், பூசணி, கரட், பீற்றூட்.
- இலைவகை (உ-ம்) வல்லாரை, பொன்னாங்காணி, அகத்தி, முருங்கை.
- பழவகை - அப்பிள், கொய்யா, பப்பாசி, விளாம்பழம், வாழைப்பழம், தோடம்பழம், ஜம்பு.
- கோழியிறைச்சி
- மீன், சுறா, கருவாடு, இறால்
- முட்டை
- பால், தயிர், பால்மா, பன்னீர்
- வெந்தயம், கடுகு, மிளகு போன்ற வாசனைத் திரவியங்கள்
- உள்ளி, வெங்காயம், புளி, மிளகாய், நிறமூட்டிகள்
- சுவையூட்டிகள்(Sugar substitute உட்பட)

## அளவாகச் சேர்க்கப்பட வேண்டிய உணவுப் பதார்த்தங்கள்

- சூரியகாந்தி எண்ணெய், நல்லெண்ணெய்
- தேங்காய்த் துருவல்.

## தவிர்க்கப்பட வேண்டிய பொருள்கள்

- சீனி, சர்க்கரை, பனங்கட்டி, பழப்பாகு, ரின்பால், ஐசிங்சீனி போன்ற இனிப்பு வகைகள்.
- கிழங்கு வகைகள்.
- எண்ணெய்வகை (சூரியகாந்தி எண்ணெய், நல்லெண்ணெய் பாவிக்கலாம்)
- இறைச்சி வகை (கோழியிறைச்சி பாவிக்கலாம்)
- நண்டு, கணவாய்.
- சகல அரிசி வகை.
- அரிசிமா, கோதுமைமா, ஆட்டாமா, குரக்கன்மா.
- பட்டர்/ மாஜரின், நெய்.
- பலாப்பழம், மாம்பழம், திராட்சை, பேரிச்சம்பழம்.'
- ரவை, சவ்வரிசி, நூடில்ஸ்.
- கச்சான், கஜூ
- பாண் ( றஸ்க் தூள் பாவிக்கலாம்)

# மொனராகலவில் அபிவிருத்திக்கு 1.16 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு

கொழும்பு, டிசெ.30

2011ஆம் ஆண்டு பெப்ரவரி 4ஆம் திகதி தொடக்கம் தொடர்ந்து 10 நாள்களுக்கு புத்தலயில் நடைபெறவுள்ள 'தேசத்துக்கு மகுடம்' கண்காட்சியை முன்னிட்டு சிறுவர் மகளிர் அபிவிருத்தி அமைச்சு 1.16 கோடி ரூபா செலவில் மொனராகல மாவட்டத்தில் பல அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளவுள்ளது.

இதற்கமைய அநாதரவான சிறுவர்களுக்கான நலன், பொருளாதார வசதியற்ற சிறுவர்களுக்கு உதவிகளை வழங்குதல் மற்றும் அவர்களது கல்வி வசதி, புலமைப் பரிசில் ஆகியவற்றை ஏற்படுத்திக் கொடுத்தல், சிறுவர்களுக்கான மாதிரிக் கிராமம் நூல் நிலையங்கள், 22முன்பள்ளிகளுக்கு நிதி உதவி வழங்கல், அடிப்படை உபகரணங்களைப் பெற்றுக்கொடுத்தல், 250 முன்பள்ளி ஆசிரியர்களைப் பயிற்றுவித்தல், 25 முன்பள்ளிகளுக்கான கட்டடங்களை அபிவிருத்தி செய்தல், 11 முன்பள்ளிகளுக்கு விளையாட்டுத் திடல்களை அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (ஜ-5)

STUDY& WORK IN
LONDON | NEW ZEALAND
USA CANADA | IRELAND | SINGAPORE | FRANCE
SWEDEN | MALAYSIA | INDIA | NORWAY | ITALY



1. மேற்கூறிய நாடுகளில் கல்வியைத் தொடர Visa க்கள் உறுதிப்படுத்தப்படும்.
2. IELTS தகைமை இல்லாமல் சில பாடநெறிகளுக்கு Visa பெற்றுத்தரப்படும். (No Need IELTS for Level 6 & 7 program)
3. Courses:- Business Management, Computer Science, Engineering, Travel & Tourism, Beauty Culture and over 200 Courses
4. Expert free guidance for sponsorship
5. எதிர்பார்க்கப்படும் குறைந்த தகைமை (G.C.E. O/L)
6. Part time job guaranteed

MILLENNIUM BUSINESS ACADEMY (MBA)
# 286, R. A. De Mel Mawatha, Colombo 03.
(Near the Liberty Plaza, Next to Don Karolis)
Hotline: Hasan - 0773507663
E-mail: hasan_abdul10@yahoo.com
Web: www.millmba.com

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 18.05.1947 | 13.01.2007 |

அமரர் **அப்பாத்துரை சண்முகநாதன்**

திதி: தசமி

அன்பால் எம்மை அரவணைத்த தந்தையே!
ஆண்டுகள் பல சென்றாலும்
உங்களை மறவாது எம் இதயம்

மதவடி லேன்,
சுதுமலை வடக்கு,
மானிப்பாய். (108139)

குடும்பத்தினர்.

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 25.07.1933 | 21.12.2008 |

அமரர் Dr. பொ.மகாலிங்கம்

எங்கள் குடும்ப விளக்கு மறைந்து இரண்டு ஆண்டுகள் நிறைவையொட்டி எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சொக்கர் வளவு சோதி விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்.

'அன்னமகால்',
குப்பிளான் தெற்கு. ஏழாலை. (108151)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்குடியமர்ந்த அரச ஊழியர்களுக்கும் வீட்டுத் திட்டங்கள், வீட்டுக்கடன் வசதிகள்

கிளிநொச்சி,டிசெ.30

கிளிநொச்சி மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு வழங்கப்படுவதைப் போன்று மீளக்குடியமர்ந்துள்ள அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் வீட்டுத் திட்டங்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டுமென மாவட்ட அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன் வலியுறுத்தியுள்ளார். கிளிநொச்சியில் தேசிய வீடமைப்பு அதிகார சபை அலுவலகத் திறப்பு விழாவில் அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

இந்த மாவட்டத்தில் மிக வேகமாக மீள்குடியேற்றங்கள் நிகழ்கின்றன. இந்த ஒரு வருட காலத்தில் மட்டும் ஒரு லட்சத்துப் பதினையாயிரம் மக்களை மீளக் குடியமர்த்தியுள்ளோம். ஆனால் மாவட்டத்தின் எந்த இடத்திலும் ஒழுங்கான வீடுகள் இல்லாத நிலையை அரசின் உதவியுடன் மாற்றி வருகின்றோம். இந்த வகையில் வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையும் உதவுவதற்கு முன் வந்துள்ளது. எதிர்காலத்தில் வீடுகள் இல்லாத எவரும் இந்த மாவட்டத்தில் இருக்கக் கூடாது என்பதே எமது குறிக் கோளாகும்.

இன்று முதற்கட்டமாக கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் 50 பேருக்கு வீட்டுக்கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. இதைப் போன்று பூநகரி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேசங்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

அத்துடன் இன்று மீளக்குடியமர்ந்த மக்களுக்கான வீட்டுத் திட்டங்கள், வீட்டுக்கடன் வசதிகள் போன்று இந்த மாவட்டத்தைச் சேர்ந்த இடம்பெயர்ந்து மீளக்குடியேறியுள்ள அரச உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்பட வேண்டுமெனத் தாம் எதிர்பார்க்கிறார் என்றும் அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

(க-11)

# முத்துஐயன்கட்டுக் குளப் புனரமைப்புக்கு ஒதுக்கப்பட்ட நிதி போதாதெனத் தகவல்

முல்லைத்தீவு,டிசெ.30

முத்துஐயன் கட்டுக்குளத்தின் புனரமைப்பு வேலைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதி போதாமையால் முழு வேலைகளையும் செய்து முடிக்காமல் போகலாமென நீர்பாசனத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தற்போது இந்தக் குளத்தின் புனரமைப்பு வேலைகளுக்கென 200 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் முழுவேலைகளையும் செய்து முடிப்பதற்கு 500 மில்லியன் ரூபா தேவையாகவுள்ளது. ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர் பணிமனையில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் இந்த விவரங்கள் தெரிவிக்கப்பட்டன.

எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் குளத்தின் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. குளத்தின் வாய்க்கால்கள் யாவும் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளன. நீர்பாயும் துருசுகள் உட்பட கொட்டுகள், கிளை வாய்க்கால்களின் திருத்தவேலைகள் என்பனவற்றைச் செய்து முடிக்க வேண்டியுள்ளது. அத்துடன் நீர்ப்பம்பிகள் பொருத்தும் வேலைத் திட்டங்கள், அலை கல்லுப் போடுதல் என்பனவும் பூர்த்தியாக்கப்படவுள்ளன.

இந்த வேலைத்திட்டங்கள் யாவற்றையும் பூர்த்தி செய்வதற்கு 500 மில்லியன் ரூபா தேவையாகவுள்ளது. ஆனால் ஒதுக்கப்பட்ட நிதியோ 200 மில்லியன் ரூபா மட்டுமே. ஆகவே இந்த நிதி மூலம் முழு வேலைகளையும் பூர்த்தி செய்ய முடியாதென்று அதிகாரி சுட்டிக் காட்டினார்.

(க-500)

# கிளிநொச்சியில் திருட்டுத்தனமாக கால்நடைகளை இறைச்சிக்காக வெட்டும் அவலநிலை

கிளிநொச்சி, டிசெ.30

கிளிநொச்சியில் திருவையாறு இரத்தினபுரம், உருத்திரபுரம் ஆகிய பிரதேசங்களில் இறைச்சிக்காக மாடுகளைத் திருட்டுத்தனமாகப் பிடித்து வெட்டப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருவதாக அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றார்கள்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மீனின் விலை அதிகரித்துள்ளதாலும் மரக்கறிகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாலும் பசுமாடு உட்பட சினை மாடுகளையும் களவாகப் பிடித்து காட்டுப் பகுதிகளுக்குள் வைத்து வெட்டி இறைச்சியை சந்திகளில் வைத்து விற்பனை செய்கின்றனர்.

இதனால் கால்நடைகளின் பெருக்கம் குறையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அத்துடன் மீள்குடியமர்ந்து தமது வாழ்வாதாரத்தை அதிகரிக்கும் நோக்குடன் கால்நடைகளை வளர்த்துவரும் இப்பகுதி மக்கள் திருடர்களின் இச்செயலால் கலக்கம் அடைந்துள்ளனர்.

எனவே இவ்வாறான திருட்டுச் சம்பவங்களில் ஈடுபடுவோர் மீது சட்ட நடவடிக்கைகள் எடுக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-313)




## உயிர் காப்போம்....



சிறந்த பணி: நோயாளர் நலன் கருதி கிளிநொச்சி வைத்தியசாலைப் பணி யாளர்கள் நாலுமாத இடைவெளியில் இரண்டாவது தடவையாக இரத்ததானம் செய்கின்றனர்.

# வன்னி ஆசிரியர்களுக்கு சம்பள நிலுவைகள் இதுவரை கிட்டவில்லை என முறைப்பாடு

முல்லைத்தீவு, டிசெ.30

வருடாந்த சம்பள அதிகரிப்பு நிலுவை நீண்டகாலமாக வழங்கப்படாததால் மீளக்குடியமர்ந்துள்ள நிலையில் கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதி ஆசிரியர்கள் அதிக சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்று அதிருப்தி தெரிவிக்கப்படுகின்றது.

2005 ஆம் ஆண்டுகளுக்குப் பின்னர் வழங்கப்பட வேண்டிய சம்பள நிலுவைகள் ஆசிரியர்களுக்கு நீண்ட காலமாக வழங்கப்படவில்லை. அதில் பதவியுயர்வுச் சம்பள அதிகரிப்பு நிலுவை, வருடாந்த சம்பள அதிகரிப்பு நிலுவை என்பன அடங்குகின்றன.

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் மீளக்குடியமர்ந்துள்ள ஆசிரியர்களுக்கு தமது வாழ்வில்லங்களைப் புனரமைத்துக் கொள்வதற்கும் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொள்வதற்கும் அதிக செலவினங்கள் ஏற்பட்டுள்ளன. இந்த நிலையில் இந்தச் சம்பள நிலுவைகளை வழங்கினால் இவ்வாறான செலவினங்களை ஈடுசெய்து கொள்ள முடியும் எனவும் ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, ஆசிரியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய சம்பள நிலுவைகளை உடனடியாக வழங்கி அவர்களது எதிர்பார்ப்புக்களை நிறைவு செய்யக் கல்வி அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் ஆசிரியர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(க-14)

# கசிப்பை நிறுத்த பொலிஸ் சோதனை

முல்லைத்தீவு,டிசெ.30

முல்லைத்தீவில் கசிப்பு உற்பத்தி அதிகரித்துள்ளதால் பொலிஸார் தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

வீடு வீடாகத் தீவிர சோதனை நடவடிக்கைகளில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். இதனால் கசிப்பு உற்பத்தி வீழ்ச்சி கண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பல குடும்பங்களை நிர்க்கதிக்குள்ளாக்கிய கசிப்புக்குப் பூரண முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்பதே பொது மக்களின் விருப்பமாகும்.

(க-500)

# பஸ் தரிப்பிடம் இல்லை: பரந்தன் சந்தியில் பயணிகள் அவதி

கிளிநொச்சி பரந்தன் சந்தியில் பஸ்தரிப்பிடம் இல்லாத காரணத்தால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

போருக்கு முன்னர் புதுப்பொலிவுடன் பெரிய கட்டட வசதிகளுடன் அமையப் பெற்றிருந்த இந்தப் பஸ்தரிப்பிடம் போரின் போது கூரைகள் கட்டடங்கள் இடிக்கப்பட்டுச் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது. இதனால் பரந்தன் சந்தியில் இருந்து ஏனைய பிரதேசங்களுக்கு பேருந்துகளில் பயணம் செய்வோர் மழை, வெயில் என்பவற்றில் துன்பங்களை அனுபவித்து நீண்ட நேரம் கால் கடுக்க நின்று பயணம் செய்ய வேண்டியுள்ளதாகப் பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

(க-313)

# கிளிநொச்சியில் சிறப்பாக நடைபெற்ற சிறார்களை வழியனுப்பும் நிகழ்வு

கிளிநொச்சி, டிசெ.30

கிளிநொச்சி ஆதவன் முன்பள்ளியில் கல்வியை முடித்து 2011 ஆம் ஆண்டு தரம் 1 இற்குச் செல்லும் சிறார்களை வாழ்த்தி வழியனுப்பும் நிகழ்வு கடந்த 22ஆம் திகதி பி.ப. 3 மணியளவில் ஆதவன் முன்பள்ளியின் பணிப்பாளர் சி.மகேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இறைவணக்கத்துடன் ஆரம்பமான இந்த நிகழ்வில் பிரதான சுடரை கிளிநொச்சி கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் செ.செல்வராசா, கரைச்சிப் பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் எஸ்.பி.அமலராஜா, கிளிநொச்சி மத்திய கல்லூரியின் பிரதி அதிபர் திருமதி கெங்காதேவி ஜெயராஜ், ஆதவன் முன்பள்ளியின் அபிவிருத்திச்சங்கத் தலைவர் தி.சிவரூபன் ஆகியோர் ஏற்றி வைத்து முன்பள்ளிச் சிறார்களுக்கான ஆசியுரைகளையும் வழங்கினர். தொடர்ந்து சிறார்களை வாழ்த்தும் வாழ்த்துப்பா இசைக்கப்பட்டு அதன் பிரதிகள் விருந்தினர்களால் ஒவ்வொரு சிறுவர்களுக்கும் வழங்கப்பட்டது. தொடர்ந்து பெரியோர்களால் ஏற்றப்பட்ட பிரதான சுடரில் இருந்து ஒவ்வொரு சிறாரும் தமக்கான சுடர்களை ஏற்றிச் சென்றனர்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சிக் கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.கணேசலிங்கம் கலந்து கொண்டு சிறப்புரையை நிகழத்தினார்.

தொடர்ந்து முன்பள்ளிச் சிறார்களின் படங்களையும் ஆக்கங்களையும் தாங்கிய 'எனது நண்பர்கள்' எனும் தலைப்பிலான ஆதவன் முன்பள்ளியின் 15 ஆம் ஆண்டு நினைவு மலர் வெளியிடப்பட்டது. இந்த மலரினை முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் செ.செல்வராசா வெளியிட்டுவைக்க உதவித் திட்டப் பணிப்பாளர் எஸ்.பி. அமலராஜா பெற்றுக் கொண்டார். தொடர்ந்து நன்றியுரையை ஆதவன் முன்பள்ளியின் அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திருமதி த.புஸ்பாகரன் நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் இவ்வருடம் மேற்பிரிவில் கல்வி கற்ற 90 மாணவர்கள் வாழ்த்தி வழியனுப்பப்பட்டனர். (க-405)

# கற்சிலைமடு, ஒட்டுசுட்டான் பாடசாலைகளுக்கு நான்கு லட்சம் ரூபா பெறுமதியான நூல்கள்

முல்லைத்தீவு, டிசெ.30

வன்னியிலிருந்து புலம்பெயர்ந்து அவுஸ்திரேலியாவில் வசிக்கின்ற மக்களால் 4 லட்சம் ரூபா பெறுமதியான புத்தகங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கற்சிலைமடு, ஒட்டுசுட்டான் பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளுக்கே இந்த நூல்கள் வழங்கப்பட்டுள்ளன.

போர் அழிவினால் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டும், தாய், தந்தையரை இழந்தும் அல்லலுற்ற நிலையில் கல்வி கற்று வரும் கற்சிலை மடு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை மாணவர்களுக்கும், ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய மாணவர்களுக்கும் பயன்தரும் வகையில் பாடசாலைகளிலுள்ள நூல் நிலையங்களுக்கு இந்த நூல்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நூல்கள் ஆஸ்திரேலியா வாழ் வன்னித் தமிழ் மக்களால் சேகரிக்கப்பட்டு கற்சிலைமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் பழைய மாணவனும் தற்போது ஆஸ்திரேலியாவில் வசிப்பவருமாகிய பொன்னையா சீவரத்தினம் என்பவர் ஊடாக அனுப்பப்பட்டுள்ளது. ஆஸ்திரேலியா வாழ் மக்கள் சார்பில் பாடசாலையின் இன்னொரு பழைய மாணவரும்,ஓய்வு பெற்ற கிராம அலுவலரும், [illegible] பாடசாலையின் நிர்வாகத் [illegible] வருமாகிய மு.சிவனேசனிடம் நூல்கள் கையளிக்கப்பட்டன. இந்த நூல்கள் பாடசாலைகள் ஆரம்பிக்கும்போது வழங்கப்படவிருக்கின்றன.

''வன்னிப் பகுதி மக்கள் யுத்தத்தின் போது எதிர்கொண்ட துயரங்கள் சொல்லிலடங்காதவை. அவர்களின் வாழ்வாதாரங்கள் அழிந்துள்ளமையை நான் நேரில் கண்டு துவண்டு போனேன். இந்தத் துயரச் சம்பவங்கள் இனிமேலும் நடக்கக் கூடாது என்பதே எமது பிரார்த்தனை. பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உதவுவதற்காகவே'' இந்தப் பாடப் புத்தகங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளோம் என்றும் நூல்களை வழங்கும் [illegible] சீவரத்தினம் தெரிவித்தார். (க-500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடர்பு கொள்ளவும்

இல.119, பாரதிபுரம், கிளிநொச்சி என்னும் முகவரியைச் சேர்ந்த உ.கலாதேவி என்பவரை உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அ.மதிவதனி. தொ.பே.: 0783259677. (108154)

## மரண அறிவித்தல்

### திருமதி அம்பிகா பரராஜசிங்கம்

அநுராதபுரத்தைப் பிறப்பிடமாகவும் மாத்தளையை வசிப்பிடமாகவும் தற்பொழுது கொக்குவில் மேற்கை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி அம்பிகா பரராஜசிங்கம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (28.12.2010) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி (முன்னாள் பிரபல வர்த்தகர்- கெக்கிராவ)- இராசம்மா தம்பதியரின் கனிஷ்ட மகளும் உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த காலஞ் சென்றவர்களான சிவகுரு- செல்லம்மா தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற பரராஜசிங்கம் (முன்னாள் ஓவசியர் P.W.D- அம்பகஸ்வெவ, ஹபரன) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சபாரட்ணம் (முன்னாள் சிறாபர், CGR), மனோன்மணி (வெள்ளவத்தை), தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான S.K. பொன்னுச்சாமி, பரமேஸ்வரி (நாரஹேன்பிட்டி), ரட்ணராஜா (முன்னாள் சிறாப்பர்), துரைராஜசிங்கம் (முன்னாள் உத்தியோகத்தர் கச்சேரி, மாத்தளை), சரஸ்வதி, பூலோகரட்ணம் மற்றும் சத்தியவதி (சிங்கப்பூர்), ஜெயராஜசிங்கம் (முன்னாள் உத்தியோகத்தர்- சுங்கத்திணைக்களம் -UK) ஆகியோரின் மைத்துனியும் ஸ்ரீகாந்தா (முன்னாள் பொறியியலாளர், பரந்தரன் இரசாயனக் கூட்டுத்தாபனம் -UK), சந்திரகாந்தி (ஓய்வுபெற்ற சிங்கள ஆசிரியர், கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயும் சாயா (சட்டத்தரணி-UK), சிவகுமாரன் (முன்னாள் உத்தியோகத்தர், சிலோன் தியேட்டர்ஸ் லிமிடெட்) ஆகியோரின் அன்பு மாமியும் ரஜீவஸ்ரீ (கணக்காளர் -UK), கிருஷ்ணகுமாரன் (அஞ்சல் உத்தியோகத்தர்- ஊர்காவற்றுறை), ஹம்சிதா (UK), யசோதா (ஆசிரியை கொக்குவில் C.C.T.M.S.) ஆகியோரின் பேர்த்தியும் அனுஷ்தனின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் செவ்வாய்க்கிழமை (28.12.2010) அன்று அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அப்பையா ஒழுங்கை,
கொக்குவில் மேற்கு,
021 3219427.

தகவல்:
குடும்பத்தினர்.
(108155)

## கணினித் தொகுதி அன்பளிப்பு


வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தால் மேலைப் புலோலி சதாவதானி கதிரவேற்பிள்ளை சிக்கன கடன் கூட்டுறவுச் சங்கத்துக்கு கணினித் தொகுதி ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

இந்தச் சிக்கன கடன் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களின் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகள் அண்மையில் சங்கத்தால் கணினிமயப்படுத்தப்பட்டுள்ளன. இச்செயற்பாட்டைத் துரிதப்படுத்தும் முகமாக கணினித் தொகுதியை வழங்குமாறு சங்கம் கோரிக்கை விடுத்ததற்கிணங்க வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தால் கணினித் தொகுதி வழங்கப்பட்டுள்ளதாக நிறுவன இணைப்பாளர் ஆ. அருள்நாயகம் தெரிவித்தார். (ஒ-190)

## திருவாசக முற்றோதல்

சுன்னாகம் மேற்கு, பருத்திக்கலட்டி ஞான வைரவர் ஆலயத்தில் திருவாசக முற்றோதல் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது. தொடர்ந்து விசேட பூசையும், மகேஸ்வர பூசையும் இடம்பெறவுள்ளன. (ற)

## மரண அறிவித்தல்



### சிவஞானம் நல்லைநாதன் (நடுவில்)

சந்தை வீதி, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவஞானம் நல்லைநாதன் (நடுவில்) 27.12.2010 திங்களன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.12.2010) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சந்தை வீதி, உடுப்பிட்டி. (108157) குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## V.K.T. தம்பிமுத்து- நயினாதீவு

(உரிமையாளர் - தாமோதர விலாஸ், ஸ்ரீஇராமகிருஷ்ணா, முன்னாள் தலைவர் - நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை, முன்னாள் அறங்காவலர் - ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில், நயினாதீவு)



நயினாதீவைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், கொழும்பை வசிப்பிடமாகக் கொண்டவருமான V.K.T. தம்பிமுத்து நேற்று (29.12.2010) புதன்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சொர்ணம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தம்பையா- இராமாசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - செல்லம்மா தம்பதியரின் மருமகனும் சச்சிதானந்தன் (பட்டயக் கணக்காளர்), சிவானந்தன் (தலைவர், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை), அருளானந்தன் (தாமோதர விலாஸ்), அம்பிகை, குகானந்தன் (பிளாசா, கொழும்பு - 06), அம்பாலிகை, அமுதாம்பிகை ஆகியோரின் பாசமிகு தந்தையும் பரமேஸ்வரி, குருகுலராணி, சகுந்தலாதேவி, Dr. இராமச்சந்திரன், வெள்ளி வீதியார் செஞ்சுடர் Dr. மருதையினார் (அரசினர் வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), கருணாரட்ணம் ஆகியோரின் பாசமிகு மாமனும் அனுசியா, சுமங்கலை, நரேந்திரகுமார், ஆரணி, பிரணவன், சாம்பவி, வர்ஜிதா ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், சோமசுந்தரம், கிருஷ்ணசாமி, நாகம்மா, இரத்தினசபாபதி ஆகியோரின் சகோதரனும். காலஞ்சென்றவர்களான பாலசுந்தரம், இராமச்சந்திரன், தனலெட்சுமி மற்றும் சாந்தலிங்கம் (ஓய்வுபெற்ற அதிபர்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 02, இரஞ்சன் வீதி,
புகையிரத நிலைய வீதி, வெள்ளவத்தை.
011 2594677.

தகவல்:
த. அருளானந்தன்
(மகன்).
(சி/573773)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை-இந்திய கடற்படைகள் கூட்டுப் பயிற்சிக்கு இணக்கம்

கொழும்பு, டிசெ.30

இலங்கை இந்திய நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பினை மேம்படுத்தும் தொடரான முனைப்புக்களின் ஓரங்கமாக அடுத்த ஆண்டு கூட்டுக் க்டற்படைப் பயிற்சிகளை மேற்கொள்ளுவதற்கு இந்தியாவும் இலங்கைவும் திட்டமிட்டிருக்கின்றன.

ஆண்டுதோறுமான இருதரப்புப் பாதுகாப்பு மாநாடு, இருநாட்டு இராணுவங்கள் மற்றும் கடற்படை அதிகாரிகளுக்கிடையிலான பேச்சுக்கள் என்பன அடுத்த ஆண்டு முதல் ஆரம்பிக்கும் என இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டிருக்கும் செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

கொழும்பில் இடம்பெற்ற இரண்டு நாடுகளினதும் பாதுகாப்புச் செயலாளர் மட்டச் சந்திப்பிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவின் பாதுகாப்புச் செயலாளர் பிரதீப்குமார் மற்றும் இலங்கைப் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இந்திய விமானப்படைத் தளபதி எயார் மார் சல் பிரதீப் நெய்க் அடுத்த மாதம் இலங்கைக்கு வருவார் என்ற முடிவும் இந்தச் சந்திப்பில் எடுக்கப்பட்டதாகத் தெரிகிறது.

முப்படைகளின் மூத்த அதிகாரிகள், கடலோரக் காவல் படையின் அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு அமைச்சு, வெளிவிவகார அமைச்சினது அதிகாரிகள் ஆகியோர் இந்தியாவின் சார்பில் இந்தச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பின்போது இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாயவுடன் முப்படைகளின் தளபதிகளும் உடனிருந்திருக்கிறார்கள்.

"கடல்வழித் தொடர்பாடலின் பாதுகாப்பு உள்ளிட்ட முக்கியமான, பொதுவான பாதுகாப்புக் கரிசனைகள் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் உள்ளன. இந்தப் பொதுவான கரிசனைகளை இருதரப்புப் பரிமாற்றங்கள் ஊடாக இணைந்து முகம்கொடுக்க வேண்டும் என்பதை இந்தச் சந்திப்பில் இரண்டு நாடுகளும் ஏற்றுக் கொண்டன" என இந்திய பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. (த)

# இலங்கைக்கு இரகசியமாக வந்திருந்த பஞ்சாப் மாநில ஆளுநர் நெருக்கடியில் ·

கொழும்பு, டிசெ.30

இலங்கைக்கு இரகசியமாக வந்திருந்த பாகிஸ்தானின் பஞ்சாப் மாநில ஆளுநர் சல்மான் தாஸீரைப் பதவி நீக்கம் செய்யுமாறு லாகூர் மேல் நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஆளுநர் வெளிநாடு செல்வது குறித்து பாகிஸ்தான் அரசிற்கு அறிவிக்கவில்லை எனவும் அவர் நாட்டில் இல்லாதவேளையில் பதில் ஆளுநர் ஒருவரை நியமிக்கத் தவறியுள்ளார் நௌஸாப் கான் எனும் சட்டத்தரணி தாக்கல் செய்த மனுவில் தெரிவித்துள்ளார். இதனால் 3 நாள்கள் ஆளுநர் பதவி காலியாக இருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

டிசெம்பர் 5 ஆம் திகதி சல்மான் தாஸீர் பாகிஸ்தானிலிருந்து மர்மமாகக் காணாமல் போனார். 3 நாள்களின் பின் பஞ்சாப் சட்டசபையில் இதுகுறித்து உறுப்பினர் ஒருவர் கேள்வி எழுப்பியிருந்தார்.

அதன்பின் கராச்சியிலுள்ள ஜின்னா சர்வதேச விமானநிலையத்தில் கொழும்பிலிருந்து வந்த விமானமொன்றிலிருந்து அவர் இறங்கியமை தெரியவந்தது.

அனைத்து விடயங்கள் குறித்தும் சுதந்திரமாகப் பேசும் மேற்படி ஆளுநர் தான் பாகிஸ்தானில் இல்லாதிருந்தமை குறித்துப் பேசுவதற்கு மறுத்துள்ளார்.

ஆனாலும் இவர் எதற்காக இலங்கைக்கு இரகசியமாகப் பயணம் மேற்கொண்டார் என்பது தெரியவரவில்லை. (த)

# இந்த வருடம் 2 இலட்சம் பேருக்கு வெளிநாட்டில் வேலைவாய்ப்பு

கொழும்பு, டிசெ.30

இந்தவருடம்இரண்டுஇலட்சம் பேர் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பெற்று நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக வெளிநாட்டு அமைச்சு தெரிவிக்கின்றது.

மொத்தம் 2 இலட்சத்து 3 ஆயிரத்து 488 பேர் வெளிநாட்டு வேலை வாய்ப்பைப் பெற்றுள்ளதாகவும், இவர்களில் 1 இலட்சத்து ஆயிரத்து 140 பேர் ஆண்களும், 89ஆயிரத்து 409 பேர் பெண்களும் ஆவர்.

90 ஆயிரம் பேர் சவூதி அரேபியாவில் வேலை பெற்றுள்ளதாகவும் தற்போது சவூதி அரேபியாவில் 56 ஆயிரத்து 100 இலங்கையர்கள் தொழில் புரிவதாகவும் அமைச்சு தெரிவிக்கின்றது.

இலங்கையிலிருந்து சென்றுள்ள ஏனையவர்கள் பஹ்ரைன், ஓமான், கட்டார், குவைத், இஸ்ரேல், சிங்கப்பூர், மலேசியா, ஜோர்தான், சைப்பிரஸ், மாலைதீவு, தென்கொரியா போன்ற நாடுகளில் பணிபுரிகின்றனர். (த)

# தென்னை அபிவிருத்தியில் ஜனவரி முதல் படையினர்

கொழும்பு, டிசெ.30

தென்னைச் செய்கை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குச் சிவில் பாதுகாப்புப் படையினர் ஈடுபடுத்தப்படவுள்ளனர். இதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது.

இந்த நடவடிக்கைகளுக்குத் தேவையான அறிவுறுத்தல்களைப் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ வழங்கியுள்ளார் என்று சிவில் பாதுகாப்புத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் ரியர் அட்மிரல் ஆனந்த பீரிஸ் தெரிவித்தார்.

பராமரிப்பு அற்ற நிலையில் காணப்படும் தெங்குச் செய்கை நிலங்களை அமைச்சு எமது பொறுப்பில் தரும்பட்சத்தில் அவற்றைச் சிறந்த முறையில் மேம்படுத்திக் கொடுப்பதுடன் தெங்குச் செய்கையை மேலும் அபிவிருத்தி செய்ய முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சர் ஜகத் புஷ்பகுமாரவுடன் இது தொடர்பாகப் பேச்சு நடத்தப்பட்டதாகவும் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார்.

இதற்கான நடவடிக்கையை ஜனவரி முதல் ஆரம்பிக்கத் தயார் நிலையில் உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை தெங்கு அபிவிருத்திச் சபையின் பாதுகாப்புக்குச் சிவில் பாதுகாப்புப் படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளன ரென்றும்ரியர் அட்மிரல் ஆனந்த பீரிஸ் தெரிவித்தார். (த)

# ஆளும் கட்சிக்கு மீண்டுமொரு தோல்வி

கொழும்பு, டிசெ.30

கொழும்பின் புறநகர் மஹரகம நகரசபை வரவு செலவுத்திட்டம் நேற்று முன்தினம் இரண்டாவது முறையாக கவும் தோல்வியடைந்துள்ளது.

இது மஹிந்த ராஜபக்ஷவின் ஆளும் அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ள மற்றுமொரு தோல்வியாகும்.

மத்தியில் ஆளும் ஐக்கிய முன்னணியின் ஆட்சியில் உள்ள இந்த நகரசபையின் வரவு செலவுத்திட்டம் கடந்த வாரம் வாக்கெடுப்புக்கு வந்த போதும் தோல்வியடைந்தது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் வரவு செலவுத்திட்டம் ஒரு வாக்கினால் தோல்வியடைந்துள்ளது.

வாக்கெடுப்பின்போது ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி மற்றும் ஆளும் கட்சியின் இரண்டு உறுப்பினர்கள் ஆகியோர் எதிராக வாக்களித்தனர்.

இதன் போது நகரசபையில் அமைதியற்ற சூழ்நிலையும் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# தனியார் வகுப்புகள் பக்கம் கல்வியமைச்சின் கவனம்

கொழும்பு, டிசெ.30

தனியார் வகுப்புக்களின் மூலம் மாணவர்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் குறித்து ஆராய்வதற்குக் கல்வி அமைச்சின் தலைமையில் தேசிய குழுவொன்று நியமிக்கப்பட வேண்டுமென தேசிய கல்வி ஆணைக்குழு பரிந்துரை செய்துள்ளது.

தேசிய கல்வி ஆணைக்குழு 15 மாவட்டங்களில் முன்னெடுத்த ஆய்வுகளையடுத்தே இந்தப் பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளது. இந்தத் தேசிய குழுவில் மாகாணக் கல்வி அலுவலகம், தேசியக் கல்வி நிறுவனம், சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை என்பன உள்ளடக்கப்படவேண்டும் எனவும் தேசிய கல்வி ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

10ஆம் ஆண்டு மாணவர்களில் 91.84 வீதமானவர்களும் 12ஆம் ஆண்டு மாணவர்களில் 98 வீதமானவர்களும் உயர்தர பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் நூறு வீதமானவர்களும் மேலதிக வகுப்புகளுக்குச் செல்வதாக தேசிய கல்வி ஆணைக்குழுவின் ஆய்வு மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

10ஆம் ஆண்டில் கற்கும் மாணவர்களிடையே பாடசாலை பற்றிய நம்பிக்கை இல்லாமை, ஆசிரியர் பற்றாக்குறை, ஆசிரியர்கள் அடிக்கடி விடுமுறை பெறுவது, பாடத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமை என்பனவே மாணவர்கள் மேலதிக வகுப்புகளுக்குச் செல்வதற்கு பிரதான காரணமாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

பாடத்திட்டத்தில் விடயதானம் அதிகமாக உள்ளதால் மேலதிக வகுப்புகளுக்குச் செல்வது கட்டாயம் எனவும் மேலதிக வகுப்பு மூலம் பிரதான பரீட்சைகளில் கூடுதலான மாணவர்கள் சித்தியடைவதாகவும் மேலதிக வகுப்புகளின் மூலம் அழுத்தம் வழங்கப்படுகிறது எனத் தெரியவந்துள்ளது.

இந்த ஆய்வின் அடிப்படையில் பாடசாலை மாணவர்கள் தனியார் வகுப்புக்களுக்குச் செல்வது தொடர்பில் மாற்றுக் கொள்கைத் திட்டமொன்றை அறிமுகப்படுத்துவது தொடர்பாக பரீட்சைத் திணைக்களத்தில் மாநாடொன்று நடத்தப்பட உள்ளது. (த)

# பாதாள உலகத் தலைவன் கைது

கொழும்பு, டிசெ.30

5 கோடி ரூபாய்க்கு மேல் கொள்ளையடித்துப் பல கொலைகளை மேற்கொண்டு வந்த பாதாள உலகத் தலைவனை அளவத்து கொட பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கொலைக் குற்றத்துக்காகக் கொழும்புப் பொலிஸ் நிலையம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது கூண்டின் கூரையை உடைத்துக் கொண்டு தப்பிச் சென்று தலைமறைவாக இருந்த போதே பொலிஸார் மீண்டும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை மேலதிக விசாரணைக்காக குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் கையளிக்கப்பட உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நபர், கொழும்பில் மிகப் பிரபலமான சீனி முதலாளி என்றழைக்கப்படும் முருகேசு என்ற வியாபாரியை 25 இலட்சம் ரூபா ஒப்பந்த அடிப்படையில் கொலை செய்துள்ளார்.

அத்துடன் கொழும்பில் பணப் பரிமாற்றம் செய்யும் இடம் ஒன்றிலிருந்து இரண்டரைக் கோடி ரூபாய்களைத் துப்பாக்கி முனையில் கொள்ளையடித்து உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (த)

# 2000 கிலோ கடத்தல் இரும்புகளுடன் 6 சந்தேகநபர்கள் புத்தளத்தில் கைது

புத்தளம், கருவலகஸ்வெள பகுதியினூடாகப் பயணித்துக் கொண்டிருந்த லொறியொன்றில் சட்டவிரோதமாகக் கடத்தப்பட்ட 12,000 கிலோகிராம் நிறையுடைய ரயில் தண்டவாள இரும்புகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் சந்தேகநபர்கள் அறுவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியாவிலிருந்து வத்தளைப் பிரதேசத்தை நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த லொறியிலிருந்தே மேற்படிக் கடத்தல் இரும்புகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக கருவலகஸ் வெளப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தின் போது கைது செய்யப்பட்டவர்களில் ஐவர் புத்தளப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் ஏனையவர் வவுனியாவைச் சேர்ந்தவரென்றும் பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கருவலகஸ் வெளப் பொலிஸார் மேற்கொண்டு வருவதுடன் சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (த)

# வெறும் அபிவிருத்திகளால் மட்டும் சமாதானத்தை வென்றுவிட முடியாது

## கூட்டமைப்பு எம்.பி. பொன்.செல்வராசா

கொழும்பு, டிசெ.30

தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றாமல் வெறும் அபிவிருத்திகளால் மட்டும் சமாதானத்தை வென்று விட முடியாது. வளமான சமாதானத்தைக் கட்டியெழுப்ப வேண்டுமாக இருந்தால் அரசாங்கம் இலங்கையில் தமிழர்களுடன் உள்ள இனப்பிரச்சினையை ஏற்றுக்கொண்டு அதற்கான தீர்வினைத் தரவேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு [illegible] நேற்றுக் காலை மட்டக்க[illegible] நடைபெற்ற வறிய மாணவர்களுக்குப் பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் உரையாற்றிய பொன். செல்வராசா, இனப்பிரச்சினைக்கான தீர்வினை, தமிழர்களின் அபலாசைகளை நிறைவேற்றும் வகையில் முன்வைப்பதன் மூலமே வளமான சமாதானத்தைக் கட்டியெழுப்ப முடியும்.

வெறுமனே இப்போது நடைபெற்று வருகின்ற அபிவிருத்திகளை வைத்து சமாதானத்தைப் பெற்றுவிடலாம் என நினைத்தால் அது ஒரு கனவுக்குச் சமமானதாகும் எனத் தெரிவித்தார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/ யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் தரம்1 இல் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் **செல்வி ரதீதயாளக் குருக்கள் வைஷ்ணவி** திருக்குறள் மனனப் போட்டியில் வெற்றிபெற்று 'தங்கப் பதக்கம்' பரிசில் பெற்றுள்ளமையைப் பாராட்டுவதோடு, அவர் மேலும் கல்வியில் சிறந்தோங்கிப் பல கலைகளையும் பெற்று நீடூழி வாழ வீரகத்தி விநாயகரின் பாதார விந்தங்களை வணங்கி வாழ்த்துகின்றோம்.

(108115)

30, சீனியர் லேன்,
கலட்டிச் சந்தி,
யாழ்ப்பாணம்.

**தகவல்:** பொன்குமார் குடும்பம் (யாழ்ப்பாணம்), ஜெயக்குமார் குடும்பம் (லண்டன்), வசந்தி மாமி குடும்பம் (கொழும்பு).

## பிறந்தநாள் வாழ்த்து




ஜெயக்குமார்- பபிலா தம்பதியரின் செல்வப்புதல்வன் **கோகுல்நாத்** இன்று (30.12.2010) வியாழக்கிழமை தனது இரண்டாவது பிறந்தநாளை லண்டனில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை லண்டனில் வசிக்கும் அன்பு அப்பா, அம்மா, மாமா மற்றும் யாழ்ப்பாணத்தில் வசிக்கும் பூட்டன், பூட்டிமார், அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, சித்தி, வைஷ்ணவி அக்கா, சங்கவி அக்கா மற்றும் மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார் அனைவரும் வீரகத்தி விநாயகர் அருள்பெற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ்க என வாழ்த்துகிறார்கள்.

*தகவல்:*
அம்மப்பா- இ.பொன்குமார்.
யாழ்ப்பாணம்.

(108114)

# உடுவில் சுகாதாரப் பிரிவின் நடப்பாண்டு நிர்வாகிகள்

வலி. வடக்கு, டிசெ. 30

உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட சுகாதாரக்கழக தொடக்க நிகழ்வுக் கூட்டம் சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி அ.ஜெயக்குமார் தலைமையில் உடுவில் சுகாதார வைத்தியதிகாரி பணிமனையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் பின்வருவோர் நடப்பாண்டுக்கான நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

தலைவர் ம.இராமலிங்கம், உபதலைவர் க.மகாதேவன், செயலாளர் நா.நவரத்தினராசா, உப செயலாளர் வைத்திய கலாநிதி கிருஷ்ணராசா.

நிர்வாகக்குழு ஐ.இராமசாமி, ந.காசிவேந்தன், மு.கந்தசாமி, சி.லட்சுமிகாந்தன், திருமதி ம.சிவனேஸ்வரி, சி.அபூர்வசிங்கம், வி.குமாரவேள், திருமதி க.உசாந்தினி.

போசகர் உடுவில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அ.ஜெயக்குமார். இணைப்பாளர் பொது சுகாதாரப் பரிசோதகர் சோதீஸ்.

இக் கூட்டத்தின் அடுத்த கட்டமாக சுகாதார விழிப்புணர்வு நடவடிக்கைகளை பாடசாலைகள், சனசமூக நிலையங்கள் உட்பட ஏனைய பொது அமைப்புகளிலும் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம-86)

## கணினி விற்பனைக்கு

P-IV, 2.4GHZ *முழுமையான கணினி ஒரு வருட உத்தரவாதத்துடன் விற்பனைக்குண்டு. விலை 18,750/= மற்றும் கணினி சம்பந்தமான* Printer, UPS, Dongle, Pendrive, 1-3 LapTop, 1-3 Desktop, Dualcore *கணினிகள் என்பனவும் மலிவு விலையில் 3 வருட உத்தரவாதத்துடன் விற்பனைக்குண்டு.*

*தொடர்பு:* **Sky Computer System**
162, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(டேவிட் பீரிஸ் முன்பாக) 021 222 1417.

## CO- OP- INFO- TECH

**கூட்டுறவுத் தகவல் தொழில்நுட்பமையம் சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம், கண்டி வீதி, சாவகச்சேரி**

O/L பெறுபேற்றுக்காகக் காத்திருக்கும் மாணவர்களுக்கான **இலவச கணினிக் கருத்தரங்கு**

இதற்கான விண்ணப்பப் படிவத்தையும், விவரங்களையும் சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக்கிளைகளிலும் கூட்டுறவுத் தகவல் தொழில் நுட்ப மையத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

**பொதுமுகாமையாளர்,**
சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம்.

(சி/573733)

## பெயர் மாற்றம்

**சுப்பாஸோ டிஜிற்றல் கலர் லாப் அன்ட் ஸ்ருடியோ** என இயங்கி வந்த எமது ஸ்தாபனம் 01.01.2011 தொடக்கம் **பெஸ்ட் லைன் டிஜிற்றல் கலர் லாப் அன்ட் ஸ்ருடியோ** எனப் பெயர் மாற்றம் செய்யப்படுகின்றது என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

**198/6, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

(சி/573752)

## களஞ்சிய உதவியாளர் களஞ்சியப் பணியாளர்கள் தேவை

எமது நிறுவனத்தின் களஞ்சியத்தில் பணியாற்றுவதற்கு பொருத்தமான ஆள்கள் தேவைப்படுகின்றனர்.

இப்பதவிகளில் சேர விரும்புவோர் 04.01.2011 முற்பகல் 10 மணியளவில் **இல.53, பிரப்பங்குள வீதி, (காங்கேசன்துறை வீதியிலுள்ள பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில்)** யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் உள்ள எமது காரியாலயத்தில் நடைபெறவுள்ள நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

**முகாமையாளர்,**
**நாராயணா கட்டடப் பொருள் வர்த்தகர்,**
**87, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

(108126)

## O/L, A/L மாணவர்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்

GATEWAY CfiCT

- Diploma in Microsoft Office
- Diploma in Desktop Publishing
- Diploma in Multimedia Graphic
- Diploma in Accounting Package
- Diploma in Hardware & Networking
- International Computer Driving Licence
- e-Citizen

உங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்



FAST TRACK Training Programme

மற்றும்

| | |
|---|---|
| Fundamentals of IT | Computer Hardware |
| Windows XP | Adobe Pagemaker |
| Word Processing MS Word 2007 | Adobe Photoshop |
| Spreadsheet Ms Excel 2007 | Adobe Premiere |
| Database Ms Access 2007 | Corel Draw |
| Presentation Ms PowerPoint 2007 | Internet & e Mail |

e-Kids



ஆரம்பம் 01.01.2011

## IT ISLAND GATEWAY CENTRE

| | | |
|---|---|---|
| 347, Kasthuriyar Road, Jaffna | Luxmee Theatre Lane, Nelliyady | New Market Building, Chavakachcheri |
| 021 567 5555 / 222 7967 | 021 226 2593 | 021 227 0323 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாவட்டத்தில் இதுவரை பதிவான வாக்காளர்கள் 5 இலட்சம் பேர் மட்டுமே

## பதியாதவர்கள் ஜன. 3 முதல் பெப். 1 வரை பதிவு செய்ய முடியும்

யாழ்ப்பாணம், டிசெ.30

2009 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலில் இருந்து 4 லட்சம் வாக்களார்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட செயலக தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. இருப்பினும் இவை தொடர்பாக உத்தியோகபூர்வமான சரியான இறுதித் தகவல்கள் மே மாதம் 25ஆம் திகதிக்குப் பின்னரே வெளியாகும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

2010ஆம் ஆண்டு தேர்தல் திணைக்களத்தினால் வாக்காளர் பதிவு மேற்கொள்ளப்பட்டது. இதனடிப்படையில் யாழ். மாவட்டத்தில் அண்ணளவாக 5லட்சம் வாக்காளர்களே இதுவரை பதிவு செய்துள்ளனர்.

2009 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலிலிருந்து 4 லட்சம் வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன. இந்த வருடத்தில் புதிதாக 83 ஆயிரம் வாக்காளர்களின் பெயர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

வாக்காளராகப் பதிவு செய்யாதவர்கள் ஜனவரி 3முதல் பெப்ரவரி 1ஆம் திகதி வரை பதிவு செய்யமுடியும்.

இதேவேளை ஜனவரி 3ஆம் திகதி தற்போதைய வாக்காளர் பட்டியல்களைக் காட்சிப்படுத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்து விட்டன. அவை நேற்று முன்தினம் முதல் ஒவ்வொரு தேர்தல் தொகுதிக்கும் அனுப்பப்பட்டு வருகின்றன.

ஜனவரி 3ஆம் திகதி முதல் உள்ளூராட்சிச் சபைகள், தபாலகங்கள், பிரதேச செயலகம், கிராம உத்தியோகத்தர் பிரிவு என்பவற்றில் அந்தந்தப் பகுதிக்கான வாக்காளர் பெயர்ப்பட்டியல் காட்சிப்படுத்தப்படும். அவ்வாறு காட்சிப்படுத்தப்படாவிட்டால் உடனடியாக மாவட்ட செயலக தேர்தல் திணைக்களத் துடன் தொடர்பு கொண்டு தெரிவிக்க முடியும்.

காட்சிப்படுத்தப்படும் வாக்காளர் பெயர்ப்பட்டியல்களில் புதிதாகச் சேர்க்கப்பட்டவரின் பெயர்கள், நீக்கப்பட்டவர்களின் பெயர்கள் என்பனவும் காட்சிப்படுத்தப்படும். இவற்றில் பெயர்கள் ஏதும் விடுபட்டிருப்பின் அல்லது நீக்கப்பட வேண்டியவர்களின் பெயர்கள் சேர்க்கப்பட்டிருப்பின், குறிப்பிட்ட தேர்தல் தொகுதியில் வர வேண்டிய பெயர் வேறொரு தேர்தல் தொகுதியில் சேர்க்கப்பட்டிருப்பின் இவை தொடர்பான முறைப்பாடுகளை கிராம சேவையாளரிடமுள்ள முறைப்பாட்டு விண்ணப்பப் படிவம் ஊடாகவோ அல்லது நேரடியாகவோ தெரிவிக்க முடியும். இதற்கான கால எல்லை ஜனவரி 3 முதல் பெப்ரவரி 1வரை மட்டுமே.

இதன் போது வாக்காளர் பட்டியலில் பெயர்ப் பதிவை மேற்கொள்ளாதவர்கள் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பிக்கும் போது முன்னர் பதியாமைக்கான காரணத்தைச் சமர்ப்பிப்பது அவசியம்.

இதனிடையே தற்போது மீளக்குடியமர்ந்துள்ள முஸ்லிம் குடும்பங்கள் வாக்குரிமைக்காக விண்ணப்பிக்கும் போது அவர்கள் தொடர்பில் வாக்காளர் பட்டியல் ஆராயப்பட்டு வாக்காளர் பதிவு மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-15)

## வாழ்வாதார சுழற்சிக்கடன் 30 பேருக்கு 9 இலட்சம்.

யாழ்ப்பாணம், டிசெ.30

நயினாதீவு தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு வாழ்வாதார சுழற்சிக் கடன் திட்டத்தின் 8ஆவது சுற்றில் 30 பயனாளிகளுக்கு வேலணைப் பிரதேச செயலாளர் மு.நந்தகோபாலன் ரூபா 9 லட்சம் நிதியை வழங்கியுள்ளார்.

கடந்த வாரம் இடம் பெற்ற இந்த நிகழ்வில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ந.செல்வச்சந்திரன், கிராம அலுவலர் செல்வி வினோதினி, சமுர்த்தி உத்தியோகத்தர் திருமதி சுபாசினி ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-7)




## 20 இலட்சம் தென்பகுதி மக்கள் இதுவரை நயினைத்வு சென்றனர்

யாழ்ப்பாணம், டிசெ.30

தென்பகுதியில் இருந்து நயினாதீவுக்கு இதுவரை சென்ற 20 இலட்சம் மக்களுக்கான நலநோம்பு சேவைகளை வேலணை பிரதேச சபை மேற்கொண்டுள்ளது. இவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு குறிகாட்டுவானில் குடிதண்ணீர், மலசலகூட வசதிகளுடன் இளைப்பாறும் மண்டபங்களை அமைத்துள்ளது. சாட்டியில் இருந்து நாளொன்றிற்கு 20 ஆயிரம் லீற்றர் குடிதண்ணீரும் புங்குடுதீவில் இருந்து மலசலகூட பாவனைக்கென 20 ஆயிரம் லீற்றர் தண்ணீரும் பௌசர் மூலம் எடுத்து வழங்கப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-7)

## மனிதாபிமானம்...



உதவி: யாழ். மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மீள்குடியேற்ற அமைச்சால் அண்மையில் நிவாரணம் வழங்கப்பட்டது. குடாநாட்டுக்கு விஜயம் செய்த மீள்குடியேற்றப் பிரதியமைச்சர் வி. முரளிதரன், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான அப்பாத்துரை விநாயகமூர்த்தி, திருமதி விஜயகலா மகேஸ்வரன், சில்வெஸ்திரி அலன்ரின் ஆகியோர் தென்மராட்சியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குகின்றனர். (207)

## கைப்பணிப் பொருள் விற்பனை நிலையம் யாழ். நகரில் திறந்து வைக்கப்பட்டது

சண்டிலிப்பாய், டிசெ.30

கிராம அபிவிருத்திச் சங்க அங்கத்தவர்களின் வருமானத்தைக் கருத்தில் கொண்டு வலி. தென்மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசம், காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள யாழ். மாவட்ட கிராமிய வங்கிகளின் சமாசக் கட்டடத்தொகுதியில் கைப்பணிப் பொருள்கள் அடங்கிய விற்பனை நிலையம் ஒன்றை ஆரம்பித்துள்ளது. மேற்படி சமாசத்தில் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மகளிர் அபிவிருத்திச் சங்கங்கள் என 40 சங்கங்கள் அங்கம் வகிக்கின்றன. இச் சங்கங்களில் உறுப்பினர்களால் உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருள்கள், தைத்த ஆடைகள், பொம்மைகள் உட்படப் பல கைப்பணிப் பொருள்கள் சந்தைப்படுத்த முடியாமல் தேங்கிக் கிடக்கின்றன.

இந்தப் பொருள்களை சந்தைப்படுத்தி இதனுடன் சம்பந்தப்பட்ட மக்களின் வாழ்வாதரத்தை வளப்படுத்தும் நோக்குடனும் தென்னிலங்கையிலிருந்து வருகை தரும் உல்லாசப் பயணிகளின் நலன் கருதியும் இந்த விற்பனை நிலையம் யாழ். நகரில் திறந்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள சமாசத் தலைவர், இப் பொருள்களைத் தென்னிலங்கைக்கு அனுப்பிச் சந்தைப்படுத்துவதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளார். (204-115)

## மானிப்பாயில் டெங்கு ஒழிப்பு

சண்டிலிப்பாய், டிசெ.30

யாழ்ப்பாணம் சுகாதாரத் திணைக்களத்தின் பூச்சியியல் ஆய்வு உத்தியோகத்தர்கள் வழங்கிய அறிக்கையைத் தொடர்ந்து மானிப்பாய்ப் பிரதேசத்தில் இனம் காணப்பட்ட இடங்களில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் சண்டிலிப்பாய் பிரதேச சுகாதாரப்பரிசோதகர்கள் ஈடுபட்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் மீண்டும் டெங்கு நோயின் அறிகுறிகள் தென்பட்டதைத் தொடர்ந்து, அந்நோயைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் யாழ். சுகாதாரத் திணைக்களத்தின் பூச்சியியல் ஆய்வு உத்தியோகத்தர்கள் ஈடுபட்டுள்ளனர். அந்த வகையில் பல இடங்களுக்குச் சென்று டெங்கு நோயை ஏற்படுத்தும் நுளம்புகளையும் அதன் குடம்பிகளையும் ஆய்வின் மூலம் கண்டுபிடித்து அந்தந்த சுகாதார வைத்திய அதிகாரி களுக்கு அறிக்கையைச் சமர்ப் பித்து வருகின்றனர். இதன் அடிப்படையில் பூச்சியியல் ஆய்வு உத்தியோகத்தர்கள் மானிப்பாய் பிரதேசத்தில் இனம் காணப்பட்ட இடங்களில் நடத் திய ஆய்வின் மூலம் டெங்கு நோயை ஏற்படுத்தும் குடம்பிகள் இருப்பதைக் கண்டு பிடித்தனர்.

இதனைத் தொடர்ந்து சண்டிலிப்பாய் பிரதேச சுகாதாரப் பரிசோதகர்கள் குறிப்பிட்ட இடங்களுக்குச் சென்று நுளம்புகளை அழிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பிரசாரம் செய்தும் வருகின்றனர். இதேவேளை சண்டிலிப்பாய் பிரதேசத்திலும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் சுகாதாரப் பரிசோதகர்கள் ஈடுபட்டுள்ளனர். (201-115)

## கரணவாயில் திறந்த பாடசாலை

பருத்தித்துறை, டிசெ. 30

வடமராட்சி கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவில் கரணவாய் வடக்கில் திறந்த பாடசாலை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தத் திறந்த பாடசாலை கரணவாய் கிராம அபிவிருத்திச் சங்க பொதுநோக்கு மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இப் பாடசாலையில் பாடசாலையை விட்டு வெளியேறியோருக்கு ஆங்கிலம், சிங்களம் அடிப்படைத் தமிழ் ஆகிய பாடங்கள் போதிக்கப்பட்டு வருவதாக முறைசாராக் கல்விப் பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. வே. இராசகுமா ரன் தெரிவித்தார். (ஓ-190)

## யாழ். பிராந்திய மரக்கூட்டுத்தாபனத்தில் கடனடிப்படையில் தளபாடம் பெறலாம்

யாழ்ப்பாணம், டிசெ. 30

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட யாழ். பிராந்திய மரக் கூட்டுத் தாபனத்தின் விற்பனைக் கூடத்தில், இரண்டு அரச ஊழியர்களின் பிணையுடன் நியாய விலையில் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான தளபாடங்களைக் கடனடிப்படையில் கொள்வனவு செய்ய முடியும் என்று கூட்டுத்தாபனத்தின் யாழ் பிராந்தியத் தலைவர் எஸ்.சிறிஸ் கந்தராஜா தெரிவித்துள்ளார்.

யாழ். குடாநாட்டில் யுத்த சூழ்நிலை காரணமாக இதுவரை காலமும் தளபாடக் காட்சி நிலையம் விற்பனைக் கூடம், அலுவலர் சுற்றுலா விடுதி என்பன இல்லாமல் இருந்தன. இவற்றை நிவர்த்தி செய்யும் பொருட்டு 25 கடற்கரை வீதி, குருநகரில் 9 மில்லியன் ரூபா செலவில் யாழ். பிராந்திய மரக்கூட்டுத் தாபனத்திற்கு பிரதேச முகாமையாளர் அலுவலகம், அலுவலர் சுற்றுலா விடுதி, தளபாடக் காட்சி நிலையம் என்பன நேற்றுமுன்தினம் சுற்றாடல் அமைச்சரினால் திறந்து வைக்கப்பட்டன.

இதன் மூலம் குடாநாட்டு மக்கள் இனிவரும் காலங்களில் இலகுவாக அரிந்த மரங்களை நேரடியாகக் கொள்வனவு செய்ய முடியும். அத்துடன் தளபாடங்களினை காட்சிக் கூடத்தில் பார்வையிட்டு அவற்றை நியாயவிலையில் பெற்றுக் கொள்ளவும் முடியும் என்று தெரிவித்தார். ( ம-15)

## ஆழியவளையில் கரை ஒதுங்கியது மூங்கில்வீடு

பருத்தித்துறை டிசெ 30

வடமராட்சி கிழக்கு ஆழியவளையில் மூங்கில் வீடு கரை ஒதுங்கியுள்ளது. சுமார் 40 சதுர அடி விஸ்தீரணத்தைக் கொண்டதாக இந்த மூங்கில் வீடு அமைந்திருந்தது.

மாரியில் கடல் கொந்தளிப்பாக இருக்கும் காலங்களில் கடல் அலையினால் அடித்து வரப்பட்டு இத்தகைய மூங்கில் வீடுகள் முன்னைய காலங்களிலும் கரை ஒதுங்கியுள்ளன. தென்கிழக்காசிய நாடுகளில் ஆறுகளிலும் கடலிலும் மீன்பிடிப் போக்குவரத்துக்காக இவ்வாறான மூங்கில் வீடுகள் பயன்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. [illegible]

## ஆழியவளை கடற்றொழிலாளர் வாழ்வாதாரத்தை மேம்படுத்தக் கோரிக்கை

அல்வாய், டிசெ.30

வடமராட்சி கிழக்கு உடுத்துறை ஆழியவளை கடற்றொழிலாளர்கள் இடம்பெயர்வின் போது தமது வள்ளங்கள், கட்டுமரம் போன்றவற்றின் ஆவணங்கள் (பதிவுச் சான்றிதழ்கள்) மற்றும் காப்புறுதி செய்யப்பட்ட பத்திரங்கள் அனைத்தையும் தவற விட்டுச் சென்று விட்டனர்.

எனவே தற்போது மீளக் குடியமர்ந்த பின் [illegible] உறுதிப் பத்திரங்கள் [illegible] தொழில் செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

ஓய்வூதியத்தில் பணம் கட்டி சேர்ந்தவர்கள் 60 வயது பூர்த்தியாகியும் ஓய்வூதியத்தை பெற முடியாமல் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். ஆகவே இந்த விடயத்துடன் தொடர்புடைய திணைக்களங்கள் கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உடுத்துறை, ஆழியவளை, வெற்றிலைக்கேணி ஆகிய பகுதிக் கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (201-35)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:**

எதிலும் புத்திசாலித்தனமாகச் செயற்படுவீர்கள். தம்பதியர் இடையே ஒற்றுமை அதிகரிக்கும். பிள்ளைகள் பொறுப்போடு நடந்து பெருமை சேர்ப்பர். வியாபாரிகளுக்குக் கடன் மிகுதிகள் வசூலாகலாம். பணிபுரிவோர் நிர்வாகத்தினரின் பாராட்டுக்களைப் பெறலாம். முக்கிய விடயமாகச் சிலரிடம் யோசனை கேட்பீர்கள்.

**இடபம்:**

தர்ம, புண்ணிய காரியங்களுக்காகச் செலவுகள் செய்வீர்கள். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளின் கண்டிப்பிற்கு ஆளாகலாம். உடன் பணிபுரியும் சிலரிடம் வாக்குக் கொடுத்து விட்டு அதைக் காப்பாற்ற முடியாமல் போகலாம். மாற்று மத நண்பர்கள் விடயங்களில் கவனம் அவசியம். வீண் விவாதத்தைத் தவிர்க்கவும்.

**மிதுனம்:**

அலைந்து திரிந்து அல்லது அதிக பிரயாசப்பட்டுச் சில வேலைகளை முடிப்பீர்கள். நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த ஒருவரைப் பாதையில் சந்திக்கலாம். உறவினர்கள் சிலர் உங்கள் மூலம் காரியம் சாதிப்பர். மற்றவர்களின் நிர்ப்பந்தத்தின் பேரில் சிலவற்றைச் செய்வீர்கள். தண்டச் செலவுகள் நேரும்.

**கடகம்:**

எதிர்பார்த்த பணவரவுகள் வரலாம். நண்பர்கள் வழியில் சிறு சுபச் செலவுகளைச் சந்திக்கலாம். குடும்ப உறுப்பினர்களின் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். எந்த விடயத்திலும் தயங்காமல் தெம்பாகச் செயற்படுவீர்கள். பழைய பொருள்களை மாற்றிப் புதிய பொருள்கள் வாங்கத் திட்டம் போடுவீர்கள். எதிர்ப்புகள் விலகும்.

**சிங்கம்:**

குடும்ப உறுப்பினர்கள் இடையே ஏற்பட்ட கோபதாபம் விலகும். அலைச்சல் குறைந்து ஓய்வு எடுக்கும் நாள். விருந்தினர்கள் வருகையால் சில வேலைகளில் தடை ஏற்படலாம். பயணங்களால் அனுகூலம் பெறலாம். வெளியூரில் இருக்கும் ஒருவரைத் தொடர்பு கொண்டு பேச முற்பட்டு அவர்கள் கிடைக்காமல் போகலாம்.

**கன்னி:**

உங்களிடம் வாக்குக் கொடுத்த சிலர் அதைக் காப்பாற்றி பெருமை சேர்ப்பர். நண்பர்கள் இடையே எதிர்பாராத சந்திப்பு நிகழலாம். புதிய முதலீடுகள் விடயங்களில் எச்சரிக்கை அவசியம். பகட்டான ஆடை, ஆபரணங்கள் அணிவீர்கள். சில பிரச்சினைகள் பற்றி குடும்பத்தினருடன் கலந்து ஆலோசிப்பீர்கள். கடன் வாங்கலாம்

**துலாம்:**

சுலபமாக முடியும் என நினைத்த வேலை ஒன்று பல மணி நேரத்திற்கு இழுத்தடிக்கலாம். வியாபாரிகள் இருப்பிலுள்ள பொருள்கள் மூலம் கூடுதல் லாபம் பெறலாம். கடிதங்கள் மூலம் எதிர்பார்த்த முக்கிய செய்திகள் வரலாம். செலவுகளில் சிக்கனம் காட்டி சேமிப்பை அதிகரிக்க வேண்டும். சிலருடன் காரசாரமாக விவாதிக்கலாம்.

**விருச்சிகம்:**

பொழுதுபோக்கு, உல்லாச விடயங்களுக்காகக் கணிசமான பணத்தைச் செலவிடலாம். பெண்களால் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். ஒரு வகையில் வந்த வரவுகள் மற்றொரு வகையில் செலவாகும். அரசியல்வாதிகள் மேலிடத்தை விமர்சிப்பதைத் தவிர்க்கவும். மற்றவர்களுக்கு வாக்குக் கொடுக்கும் முன் யோசித்துச் செய்யவும்.

**தனுசு:**

நினைத்தது நடக்க வேண்டும் எனச் செய்த பிரார்த்தனை பலிக்கும். மற்றவர்கள் உங்களைப் பாராட்டும் வகையிலான காரியங்களைச் செய்வீர்கள். உறவினர்களுக்காக ஒரு குறிப்பிட்ட தொகையைச் செலவிடலாம். நீங்கள் முன்னர் எதிர்பார்த்த போது வராத பணவரவு ஒன்று இன்று திடீரென வரலாம். நல்ல செய்தி கேட்கலாம்.

**மகரம்:**

பெரிய அளவில் எதிர்பார்த்த ஒரு விடயம் பசுபசுத்துப் போகலாம். உடன் பணிபுரிவோர் எதிர்பார்க்கும் உதவிகளைச் செய்ய முடியாமல் அவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். உங்களின் வேலை ஒன்றுக்காக மற்றவர்களையும் கூட்டிக் கொண்டு அலைவீர்கள். இறை வழிபாடுகள் மூலம் அமைதி பெறுவீர்கள்

**கும்பம்:**

சிலருக்காக வெளியிடங்களில் காத்திருக்கலாம். சோர்வு, சோம்பலால் வழக்கமான வேலைகளைத் தள்ளிவைப்பீர்கள். வேலையாள்களால் தொல்லைகளைச் சந்திக்கலாம். நீங்கள் செய்த சிறிய தவறு ஒன்று பெரிய பிரச்சினையாகித் தொந்தரவு கொடுக்கலாம். நன்றி மறந்த ஒருவரை நினைத்து வருத்தம் அடைவீர்கள்.


**மீனம்:** ஆடை, அலங்காரப் பொருள் கள் வாங்கலாம். பெண்கள் அல்லது ஆண்கள் வழியில் மனதிற்கு இனிய உதவிகள் கிடைக்கலாம். தொழில் நிமித்தம் முக்கிய நபர்கள் சிலரைச் சந்திக்கலாம். வெளியூர்ப் பயணங்கள் செல்லப் போட்ட திட்டம் நிறைவேறலாம். நண்பர்கள் மத்தியில் கௌரவம் அதிகரிக்கும். உற்சாகம் குடிகொள்ளும் நாள்.

# யுத்தத்தில் பெற்றோரை இழந்த சிறாருக்கு தாபரிப்புப் பெற்றோர்

## சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை அழைப்பு

கொழும்பு,டிசெ.30

யுத்தத்தால் பாதிக்கபட்டு பெற்றோரை இழந்து தவிக்கும் சிறார்களுக்குத் தாபரிப்பு பெற்றோராக இருக்க விரும்புவோருக்குத் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை அழைப்பு விடுத்துள்ளது.

மேற்படி சிறார்களுக்கு உதவுவதற்கு முன்வரும் கருணை உள்ளம் படைத்தோர் 1929 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தகவல்களை வழங்குமாறு சிறுவர் அதிகாரசபை அறிவித்துள்ளது.

யுத்தத்தால் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்த இவர்கள் பெற்றோருடன் ஒன்றாக வாழும் வயதில் உறவினர்களின் வீடுகளில் பல்வேறு துன்பங்களுக்கு மத்தியில் வாழ்கின்றனர்.

இப்போதுள்ள பொருளாதார நிலைமைகளுக்கு அவர்களால் இச்சிறார்களின் அத்தியாவசியத் தேவைகளை மட்டுமே பூர்த்தி செய்யக் கூடியதாக உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறார்கள் எதிர்காலத் தலைவர்கள் என்பார்கள். ஆனால் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் சிறார்கள் கல்வியைத் தொடர முடியாத நிலையில் உள்ளனர். எனவே இவர்களின் எதிர்காலத்தை நினைத்தாவது உதவ முன்வாருங்கள் எனக் கேட்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் மாத்திரம் பெற்றோரை இழந்த 1,025 சிறார்கள் இருக்கின்றனர் என்றும் இவர்களில் 400 பேருக்குத் தந்தை, தாய் இருவருமே இல்லை என்றும் சுகாதார அமைச்சின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

எனவே, இவர்களுக்குச் சட்டபூர்வமாக உதவிகளை வழங்க விரும்பும் தாபரிப்புப் பெற்றோர் 10 வயதுக்குட்பட்டவர்களுக்கு 1,500 ரூபாவும், 10 வயதுக்கு மேற்பட்டோர்களுக்கு 2,000 ரூபாவும் மாதா மாதம் உதவித் தொகையாக வழங்க முடியும் என்று தேசிய சிறுவர் பாதுகாப்புச் சபைத் தலைவி அனோமா திஸாநாயக்க தெரிவித்தார். (ஒ-சி)

# மனிதனும் பூமியும்



ஒரு கிராமத்து ஆசாமி ''ஐயா! இன்று ஒரு தகவலைச் சொல்லுவது என்னவோ நல்ல விடயமாகத்தான் இருக்கிறது! இருந்தாலும் அதைக் கேட்டு யாரும் தங்கள் பழக்கவழக்கத்தை மாற்றிக்கொள்கின்ற மாதிரித் தெரியவில்லை'' என்றார்.

''அப்படியா சொல்கிறீர்கள்?'' என்றேன்.

''ஆமாம்... இப்போது எங்களுடைய கிராமத்தை எடுத்துக் கொண்டால் நாங்கள் எல்லோரும் நீங்கள் சொல்வதைக் கேட்கின்றோம்... ஆனாலும் எனக்கு ஒரு பிரச்சினை... அதனைத் தீர்க்க இன்னமும் வழி தெரியவில்லை'' என்றார்.

''உங்களுடைய பிரச்சினை என்ன என்று கொஞ்சம் விவரமாகச் சொல்லுங்கள்'' என்றேன்.

''ஐயா நான் ஒரு சாதாரண விவசாயி! எனது கிராமத்தில் 3 ஏக்கர் நிலம் இருக்கின்றது. அவ்வளவுதான்! என் நிலத்திற்கு அருகில் 30 ஏக்கர் நிலம் இருக்கின்றது. அது ஒரு பெரியவருக்குச் சொந்தமானது.

அவர் என்ன செய்கின்றார் தெரியுமா? வருடாவருடம் வரம்பு கட்டும்போது என் பக்கமாகக் கொஞ்சம் கொஞ்சமாகத் தள்ளிக் கொண்டே வருகின்றார். அருகில் வெட்டும் பொழுது சாமர்த்தியமாக அதைச் செய்கின்றார்.

30 ஏக்கர் நிலம் வைத்திருப்பவர் 3 ஏக்கர் வைத்திருப்பவனின் நிலத்தைச் சேர்த்துக் கொண்டே வருவது நியாயமான விடயமா? நீங்களே சொல்லுங்கள்'' என்றார்.

''யாரும் இதை நியாயம் என்று சொல்ல மாட்டார்கள்!'' என்றேன்.

''ஆனால் அவருக்கு அது புரியவில்லை. தினமும் 'தகவல்' கேட்டுக் கொள்கிறார். நீதிக்கதைகளெல்லாம் கேட்டுவிட்டுப் பின்னரும் இப்படி இருக்கிறார் என்றால் என்ன பிரயோசனம்?'' என்று அலுத்துவிட்டார் அந்த விவசாயி.

''சரி கவலைப்படாதீர்கள்... நானே உங்களுடைய கிராமத்துக்கு வந்து அந்தப் பெரியவரைப் பார்த்துப் பேசுகின்றேன்'' என்று கூறினேன்.

ஒருநாள் அவருக்குக் கூறியது போல் சென்று பெரியவரைச் சந்தித்தோம்.

''வாருங்கள் என்ன சாப்பிடுகிறீர்கள்...'' என்று வரவேற்பு- உபசாரம் எல்லாம் நன்றாகத்தான் இருந்தது. பேச்சு வழக்கம் கூட நல்லதுதான்.

ஆனால் சொத்து, சுகம் சேர்ப்பதில் மட்டும் அவருக்கு ஆசை அதிகமாக இருந்தது. அதற்காக நியாயம் தவறி நடப்பதற்குக் கூட [illegible] மட்டும் தான் அவரிடம் இருந்த கெட்டகுணம்.

அப்போது அவரிடம் நான் கேள்விப்பட்ட கதைகள் எல்லாம் சொல்லிப் பேசிக் கொண்டிருந்தேன்.

ஒருநாள் ஒருவர் இப்படித்தான் தனக்கு அதிக நிலம் வேண்டும் என்று ஆசைப்பட்டு கடவுளிடம் மன்றாடினார். கடவுளும் ஒருநாள் திடீரென்று அவன் முன் தோன்றி ''உனக்கு என்ன வேண்டு மானாலும் கேள்! தருகிறேன்'' என்றார்.

அதற்கு அவன் ''எனக்கு இந்த பூமியில் அதிக இடம் சொந்தமாக இருக்க வேண்டும். நிலம் மட்டும் சொந்தமாக இருந்தால் ஏனைய சுகம் எல்லாவற்றையும் நானே தேடிக் கொள்வேன். அதனால் இதற்கு மட்டும் நீங்கள் ஏற்பாடு செய்தால் போதும்!'' என்றான்.

கடவுள் அதற்கு ஒப்புக் கொண்டு அவனை ஒரு வெட்டவெளிக்கு அழைத்துக் கொண்டு சென்று கண்ணுக்கு எட்டிய தூரம் வரைக்கும் ஒரே இடம்தான்! ''இப்போது நீ இங்கேயிருந்து புறப்பட்டு நேராக ஓடவேண்டும். உன்னால் எவ்வளவு தூரம் ஓடமுடியுமோ ஓடி அங்கே ஒரு குச்சியை நட்டுவிட்டு, சூரியன் மறைவதற்குள் திரும்பி இதே இடத்திற்கு வரவேண்டும்.

அப்படி வந்துவிட்டால் நீ எதுவரைக்கும் ஓடிச் சென்றாயோ அதுவரைக்கும் உள்ள பூமி முழுவதும் உனக்கே சொந்தம்!'' என்றார்.

இவனும் அதிக சந்தோசம், அதிக ஆசையுடன் ஓட ஆரம்பித்தான். பலங்கொண்ட மட்டும் ஓடினான். உச்சிவெயில் வந்துவிட்டது. ஒரு இடத்தில் குச்சியை நட்டுவிட்டு வேகமாக ஓடிவந்தான்.

பூமி வேண்டும் என்ற ஆசையால் அவன் சாப்பாட்டை மறந்தான். கடுமையான வெயிலைக் கூடப் பொருட்படுத்தவில்லை. ஓடிவந்து கடைசியாகப் புறப்பட்ட இடத்தில் வந்து விழுந்தான்.

விழுந்தவன் எழுந்திருக்கவே இல்லை. அவன் இறந்து போய்விட்டான். இப்பொழுது கடவுள் கூறினார்.

''இப்பொழுது இந்த மனிதனுக்குத் தேவை இவன் விழுந்து கிடக்கும் இந்த ஆறடி நிலம் தான்'' என்றார்.

இந்தக் கதையைக் கேட்டவுடன் அந்தக் கிராமத்துப் பெரிய மனிதன் ''மனிதனுக்குத் தேவை எவ்வளவு என்பதைப் புரிந்துகொண்டேன்'' என்றார்.

''அப்படி இருக்கும் போது முப்பது ஏக்கர் வைத்திருக்கும் நீங்கள் மூன்று ஏக்கர் வைத்திருக்கும் அவனுடைய நிலத்துப் பக்கமாக வரப்பைத் தள்ளிக் கொண்டு போகலாமா?'' என்றேன்.

அது தப்புத்தான் எடுத்ததைக் கொடுக்கின்றேன். இருந்தாலும் உங்களிடம் ஒரு இரகசியத்தைச் சொல்கிறேன் என்றார்.

''என்னவென்று கேட்டேன்'' ''அருகில் வாருங்கள்'' என்றார். நானும் அவருக்கருகில் போனேன். இந்த முப்பது ஏக்கரில் பெரும் பகுதி கொஞ்சம் கொஞ்சமாக நான் வரப்பை நகர்த்திச் சேர்த்ததுதான்'' என்றார்.

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாருக்கு வெள்ள நிவாரணம்?



வடக்கில் மீளக்குடியமர்ந்த நிலையில் வெள்ளத்தால் பாதிக் கப்பட்ட மக்களுக்கென மீள்குடியேற்ற அமைச்சினால் விநியோகிக்கப்பட்ட வெள்ள நிவாரணம் தொடர்பாக பொது மக்கள் தரப்பிலிருந்து கடும் அதிருப்தி தெரிவிக்கப்பட்டு வருகிறது.

மீள்குடியேற்ற அமைச்சர் குணரட்ண வீரக்கோன், பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் ஆகியோர் கடந்த 21,22,23 ஆம் திகதிகளில் வடபகுதிக்கு வருகைதந்து இந்த நிவாரணப் பொருள்களை மக்களிடம் நேரடியாகக் கையளித்தனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனையின் பிரகாரம், வடக்கில் மீள்குடியமர்த்தப்பட்ட - வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென மீள்குடியேற்ற அமைச்சு வழங்கும் அன்பளிப்பு எனக் கூறியே வெள்ள நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டன.

வடபகுதியில் 10 ஆயிரம் குடும்பங்களுக்கு தலா 4,500 ரூபா பெறுமதியான 15 வகையான பொருள்கள் இவ்வாறு வழங்கப்பட்டுள்ளன என மீள்குடியேற்ற பிரதி அமைச்சரால் வடபகுதியில் தெரிவிக்கப்பட்டது.

### மக்களின் குறை

ஆனால், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் பலர் தமக்கு அந்த நிவாரணப் பொருள்கள் கிடைக்கவில்லை எனக் குறை கூறிவருகின்றனர். நிவாரணப் பொருள் விநியோகம் தொடர்பாகப் பொது மக்கள் குறைகூறுவதற்கும், அதிருப்தி தெரிவிப்பதற்கும் சில நியாயப்பாடுகள் இருக்கத்தான் செய்கின்றன.

மீள்குடியேற்ற அமைச்சினால் விநியோகிக்கப்பட்ட பொருள்களுக்கான பயனாளிகள் தெரிவு எந்த அடிப்படையில் இடம்பெற்றுள்ளது என்பது குறித்து தெளிவற்ற நிலையே உள்ளது.

வடக்கில் மீள்குடியேற்றப்பட்டு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் நிவாரணப் பொருள்கள் கிடைக்கவில்லை என்பது பொது மக்கள் தெரிவித்து வரும் முறைப்பாடுகளிலிருந்து அறிய முடிகிறது. அதே வேளை வெள்ளத்தினால் பெரிதும் பாதிக்கப்படாத சிலரது கைகளுக்கும் நிவாரணப் பொருள்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

கடந்த கால போரின் இறுதிப் பகுதியில் இடம்பெயர்ந்து இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்ட நிலையில் மீளக்குடியமர்த்தப்பட்ட மக்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டுள்ளதா? அல்லது வடபகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்குமே உதவிகள் வழங்கப்பட்டுள்ளதா என்ற தெளிவற்ற நிலை நிவாரணப் பொருள் விநியோகத்தில் உள்ளது.

### பாதிப்பும் உதவியும்

இந்த மாதத்தின் முற்பகுதியில் ஒரு வாரகாலத்துக்கும் மேலாக விடாது கொட்டித்தீர்த்த மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தினால் வடபகுதியில் பல்லாயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டனர்.

அவர்கள் அனைவருக்கும் நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளதா என்றால் அதுவும் இல்லை.

'ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்றது போல் நிவாரணப் பொருள் விநியோகம் தொடர்பாக யாழ்.மாவட்டத்தின் நிலையை நோக்கலாம்.

யாழ்.மாவட்டத்தில் 4 ஆயிரத்து 598 குடும்பங்களைச் சேர்ந்த 15 ஆயிரத்து 770 பேர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 683 குடும்பங்கள் வெள்ளம் காரணமாகத் தமது வாழ்விடங்களிலிருந்து வெளியேறிப் பொது இடங்களில் தங்க வேண்டி ஏற்பட்டது.

**வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களில் பலருக்கு நிவாரணப் பொருள்கள் கிடைக்கவில்லை. நிவாரணப் பொருள் விநியோகம் தொடர்பாகப் பொது மக்கள் குறைகூறுவதற்கும், அதிருப்தி தெரிவிப்பதற்கும் சில நியாயப்பாடுகள் இருக்கத்தான் செய்கின்றன.**

இந்தத் தகவலை யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தினசரி ஊடகங்கள் ஊடாக வெளியிட்டிருந்தார்.

இந்த நிலையில் ஆயிரத்து 744 குடும்பங்களுக்கு மட்டுமே யாழ்.மாவட்டத்தில் மீள்குடியேற்ற அமைச்சினால் வெள்ள நிவாரண உதவிப் பொருள்கள் கிடைத்துள்ளன. யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரச அதிபர் பணிமனைகள் பதினைந்திலும் உள்ள மக்கள் பாதிக்கப்பட்டிருக்க, தெரிவுசெய்யப்பட்ட 10 பிரிவுகளுக்கு மட்டுமே நிவாரணப் பொருள்கள் கிடைத்திருக்கின்றன.

அதில், பாதிக்கப்பட்ட 698 குடும்பங்களைக் கொண்ட யாழ்ப்பாணப் பிரதேச செயலக பிரிவில் 534 குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள் கிடைத்தன. பாதிக்கப்பட்ட 384 குடும்பங்களைக் கொண்டிருந்த வேலணைப் பிரதேச செயலக பிரிவில் 56 குடும்பங்களுக்கும், 872 பாதிக்கப்பட்ட குடும்பங்களைக் கொண்டிருந்த சங்கானைப் பிரிவில் 11 குடும்பங்களுக்கும், பாதிக்கப்பட்ட 210 குடும்பங்களைக் கொண்டிருந்த சண்டிலிப்பாய் பிரிவில் 96 குடும்பங்களுக்கும் நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதேபோல், பாதிக்கப்பட்ட 124 குடும்பங்களைக் கொண்ட தெல்லிப்பழை பிரிவில் 07 குடும்பங்களுக்கும், 64 குடும்பங்களைக் கொண்ட உடுவில் பிரிவில் 102 குடும்பங்களுக்கும், 267 பாதிக்கப்பட்ட குடும்பங்களைக் கொண்ட கோப்பாய்ப் பிரிவில் 129 குடும்பங்களுக்கும் உதவிகள் வழங்கப் பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட 112 குடும்பங்களைக் கொண்டிருந்த பருத்தித்துறை பிரிவில் 37 குடும்பங்களுக்கும், 05 குடும்பங்களைக் கொண்ட சாவகச்சேரிப் பிரிவில் 11 குடும்பங்களுக்கும், 761 பாதிக்கப்பட்ட குடும்பங்களைக் கொண்ட மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் அதே 761 குடும்பங்களுக்கும் நிவாரண உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

### உதவி இல்லை

இவை தவிர ஏனைய பகுதிகளான ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவில் 480 குடும்பங்களும், காரைநகரில் 54 குடும்பங்களும், கரவெட்டியில் 16 குடும்பங்களும், நெடுந்தீவில் 389 குடும்பங்களும் நல்லூரில் 33 குடும்பங்களும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருந்தன.

எனினும் இந்தப் பிரிவுகளிலுள்ள வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்படவில்லை.

அப்படியாயின் மீள்குடியேற்ற அமைச்சு குறிப்பிட்டதுபோல் இந்தப் பிரிவுகளில் இடைத்தங்கல் முகாம்களிலிருந்து மக்கள் மீளக்குடியமர்த்தப்படவில்லையா?

இந்தப் புள்ளி விவரத் தகவலின் பிரகாரம் சில பிரதேச செயலக பிரிவில் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கும் போது, நிவாரணப் பொருள்கள் கிடைக்கப்பெற்ற குடும்பங்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கின்றது என்பதும் மக்களின் அதிருப்திக்கான காரணங்களில் ஒன்றாக உள்ளது.

இந்த நிலைமை யாழ். மாவட்டத்தில் மட்டுமன்றி கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலும் உள்ளது.

### மக்கள் கொந்தளிப்பு

கிளிநொச்சியில் நிவாரண பொருள்கள் தமக்கு கிடைக்கவில்லை என்பதனால் விசனமடைந்த மக்கள் மீள்குடியேற்ற அமைச்சரையும் பிரதி அமைச்சரையும் முற்றுகையிட்டுத் தமது எதிர்ப்பை வெளிக்காட்டியிருந்தமையும் இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டியது.

வழங்கப்பட்ட வெள்ள அனர்த்த நிவாரணப் பொருள்களுக்குரிய பெயர்ப் பட்டியல்கள் வடபகுதியிலுள்ள பிரதேச செயலர்கள், உதவி அரச அதிபர்கள் மூலமே திரட்டப்பட்டிருக்கின்றன. ஆனால், அவர்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் பெயர், விவரங்களை உரிய முறையில் இனங்கண்டு திரட்டவில்லை என்று பாதிக்கப்பட்டவர்களில் சிலர் தெரிவிக்கின்றனர்.

சில பிரதேச செயலர்களிடம் இது தொடர்பாகத் தமது மனுக்களையும் பாதிக்கப்பட்ட மக்கள் தற்போது கையளித்திருக்கிறார்கள்.

நிவாரணப் பொருள் விநியோகம் தொடர்பாகப் பொதுமக்கள் பல்வேறு கருத்துக்களைக் கொண்டிருக்கிறார்கள் என்று யாழ். அரச அதிபரிடம் கேட்ட போது -

''நான் பிரதேச செயலர்கள், உதவி அரச அதிபர்கள் வழங்கியு தரவுகளையே அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்துக்கு வழங்கினேன்'' - என்றார்.

''அது மட்டுமன்றி அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையமானது 'செய்மதி' மூலமாகவும் தரவுகளைப் பெற்றுக் கொண்டது. அவ்வாறு பெறப்பட்ட தரவுகளை முப்படையினர் ஊடாக உறுதிப்படுத்திக் கொண்டு அதன் அடிப்படையில் நிவாரண உதவிகள் வழங்கப்பட்டுள்ளன'' எனவும் மேலும் அவர் தெரிவித்தார்.

### சக்தி

பயனாளிகள் தரவு திரட்டல் எவ்வாறு இடம்பெற்றது எனப் பிரதேச செயலர் ஒருவரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது -

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் அனைவரது பெயர், விவரங்களும் திரட்டப்பட்டு மாவட்ட செயலகத்துக்கு வழங்கப்பட்டதாகக் குறிப்பிட்டார்.

### அதிகாரிகள் அசட்டை

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் எவ்வித பாரபட்சமுமின்றி நிவாரணப் பொருள்கள் கிடைக்க அரச அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும். ஆனால் அது இடம் பெறவில்லை.

எனவே வெள்ள அனர்த்த நிவாரண விநியோகத்தில் இடம்பெற்றுள்ள நிலை தொடர்பாகப் பொது மக்களுக்கு நிலைமையைத் தெளிவுபடுத்த வேண்டிய பொறுப்பு அரச அதிகாரிகளுக்கு உள்ளது. இல்லையேல் எஞ்சியோருக்கும் உடனடியாக உதவிகள் வழங்கப்படவேண்டும்.★



நிவாரணம் பெறக் கூடியிருந்தோர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




## நினைவுகளின் கனவுகள்.....

சின்னஞ்சிறு மனசிற்குள்
சித்திரக் கனவுகள்
நிறம் தீட்ட நினைக்கையில்
நிர்மூலமானதோ என் நினைவுகள்
வெளியே சிரிப்பும்
உள்ளே வேதனையும்
இந்த ஏழை மனசிற்கு என்றுமே
நிரந்தரம்
அன்பின் இலக்கணமும்
பாசத்தின் பிணைப்புகளும்
இந்த உறவிற்கு பாசாங்காய் போனது.....
என் நினைவுகளில் உருவான
கனவுச் சமுத்திரம் வற்றிப் போனது.......

**நிரோ அரிகரன்,**
**கணேஸ்வரம், அளவெட்டி**

## விலாசம்...

போரால் காவு
கொள்ளப்பட்டு,
என்னை விட்டுப்
பிரிந்துபோன,
உறவுகளை
நினைத்தவாறு
அகண்ட வெளியில்
நின்று கொண்டு.... !
இருண்டவானை
நிமிர்ந்து பார்த்தேன்.....!
அங்கே....!
இருளைக் கிழித்தொரு
வெள்ளி சிரித்தது-என்
உறவுகளின் இருப்பிட
விலசாம் தெரிந்தது....!

**து.திலக்,**
**யாழ்ப்பாணம்.**


## கவிக் கலைஞனே....!

இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழை
இனிய தேனாக வார்த்தெடுத்த கவிஞனாம்
இவ்வுலகப் பெருமகனாம்
கலையாத ஞாபகங்களைக் காவியங்களாய்
கவி பாட வைக்கும் கவிக்கலை நாயகனே
கவிக்கூற்றுக் கேட்க ஓடோடி வந்தோம்

உன்திறமையை எண்ணி இவ்வுலகம்
உனக்கான இனிய புகழ் பாடுதப்பா
உள்ளம் மகிழ்ந்து தமிழ் அன்னை
துயில் எழும்ப விண்ணுலகம் வியக்க
துஞ்சுகின்ற வீரர்கள் அச்சமின்றி
துலங்க இனிய கவிபாடு

மக்களின் வாழ்கைக்கு நல்லதொரு காலம் வர
மன்னவனை வணங்கி நின்று
மன்னவனின் ஆட்சியிலே அவலங்களாய்
இரத்தம் சிந்தும் இப் பூமியிலே ஏழைகளாய் திரியும
இளஞ் சிறார் தொடக்கம் கல்விபயிலும் மாணவருக்கும்
இனிய வழி பிறக்க தமிழ்; அன்னை மகிழ கவிபாடு....

ப.அபிரா



# இறுக்கம் நீக்கும் புன்னகை.....

புன்னகை என்றால்.... வேடிக்கை, சம்மதம் அல்லது சந்தோஷத்தைக்காட்ட, இதழ் இலேசாக விரிய மென்மையாகச் சிரிப்பது.. புன்னகை ஒருவரின் உணர்வுகளை மற்றவர்களுக்கு மெளனமாக வெளிப்படுத்துகிறது. புன்னகையால் இகழ்ச்சியை வெளிப்படுத்தலாம் அல்லது அலட்சியத்தையும் வெளிப் படுத்தலாம்.

புன்னகைக்கு இவ்வளவு சக்தியா...? யாரோ ஒருவர் உங்களைப்பார்த்து புன்னகைத்தால் நிம்மதியடைந்து அல்லது சந்தோஷப்பட்டது ஞாபகமிருக் கிறதா..? அல்லது ஒருவர் புன்னகைக்காத போது பயந்து போனது அல்லது மனம் நொந்து போனது ஞாபகமிருக்கிறதா..? புன்னகைக்கு சக்தி உண்டு. அது புன்னகை புரிபவரையும் அவர் யாரைப்பார்த்து புன்னகைக்கிறாரோ அவரையும் சந்தோஷப்படுத்தும் அல்லது சங்கடப்படுத்தும்.

புன்னகை என்றுமே நன்மைகளை அள்ளி வழங்குகிறது. இதமாக இதழ் விரிந்தால் மனதில் மண்டிக்கிடக்கும் பதற்றம் பறந்து விடலாம். மனதில் இறுக்கம் அல்லது ஏமாற்றம் இருந்தால் புன்னகை அந்த இறுக்கத்தை நீக்கிவிடுகிறது, சோர்வும் நீங்கிவிடுகிறது. புன்னகைத்தால் பதற்றங்கள் பதர்களாகப் பறந்து போய்விடும்! புன்னகை மலரை மற்றவர்கள் மீது அள்ளி வீசுங்கள், அது சிநேக தென்றலாக வந்து தழுவும், வாழ்க்கை உண்மையிலேயே ஆனந்தமானது...?

அது அனைவருக்கும் நல்லது. புன்னகைக்கும் நமது உணர்ச்சிகளுக்கும் தொடர்பு உண்டு. நமக்கு நல்ல மனநிலை கிடைக்க புன்னகை உதவும். **(வளரும்)**

## இளவல்கள் வட்டம் வாக்குச்சீட்டு

**குடாநாட்டு மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளில் முக்கிய பங்கு வகிப்பது**

| தனியார் கல்வி நிறுவனங்கள் | | பாடசாலைகள் | |
|---|---|---|---|

பெயர் :-..............................
முகவரி:-..............................
:-..............................
அடையாள அட்டை இல:..............................

உங்கள் தீர்ப்புகளை 27.01.2011ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். இவ் வாக்குச் சீட்டுடன் அனுப்பப்படும் வாக்குகள் மாத்திரமே [illegible]




# எமது இளையோரிடம் 'எய்ட்ஸ்' பற்றிய விழிப்புணர்வு.....

### இருக்கிறது

இலங்கையில் முதன்முதலாக 'எய்ட்ஸ்' நோயாளி கண்டுபிடிக்கப்பட்டது 1986ஆம் ஆண்டு. இந்த 'எய்ட்ஸ்' நோயாளி வெளிநாட்டைப் பூர்வீகமாகக் கொண்டவர்தான். அதேபோல் யாழ்.மாவட்டத்தில் 42 பேர் மட்டுமே 'எய்ட்ஸ்' நோயாளிகள் ஆவார்.

ஏனைய பிரதேசங்களை விட யாழ்.மாவட்டம் கல்வி சார்ந்த துறைகளில் முன்னேற்றம் கண்ட பிரதேசம் ஆகும். அதனால் 'எய்ட்ஸ்' நோய் தொடர்பான பாதகமான விளைவுகள் பற்றி அனைவரும் அறிந்து வைத்துள்ளனர். இதனால் 'எய்ட்ஸ்' நோய் தொடர்பான கருத்தரங்குகள், விழிப்புணர்வுகள் என்பவற்றைச் சமூகத் தொண்டு நிறுவனங்கள் மக்களுக்கு வழங்கி வருகின்றன.

இள வயதினரிடத்தில் பாலியல் தூண்டல்கள் அதிகம் இருப்பதால் அவர்களிடத்தில்தான் அதிகம் 'எய்ட்ஸ்' நோய் பரவக் கூடிய வாய்ப்புகள் அதிகம் இருப்பதாக ஒரு கருத்து நிலவினாலும்-

யாழ்ப்பாணக் கலாசார, பண்பாட்டு விழுமியங்களில் சிக்குண்டுள்ள எமது சமுதாயம் தவறான தவறான வழிகளுக்குச் செல்லக்கூடிய வாய்ப்புகள் மிகக் குறைவு. தென்னிலங்கையைப் போன்ற பாலியல் சார்ந்த திரைப்படங்கள் யாழ்ப்பாணப் பிராந்தியத்தில் காண் பிக்கப்படுவதில்லை. இதனால் இளம் சமுதாயத்தினர் குடும் பத்தினருடன் கலந்து பேசிப் பலதரப்பட்ட கருத்துகளைப் பெறுவதற்கு வாய்ப்புகள் அதிகம்.

குடும்பமும், சமுகமும் பாலியல் சார்ந்த நல்ல கருத்துக்களை மக்களிடத்தில் சொல்வதால் 'எய்ட்ஸ்' விழிப்புணர்வு எம்மவர் மத்தியில் உள்ளது எனலாம்.

**கு.நிஸா.**

### இல்லை

எமது யாழ்ப்பாணத்தில் ஒப்பீட்டு ரீதியில் 'எயிட்ஸ்' நோயாளர் தொகை குறைவாகவே உள்ளது. அதற்கு 'எயிட்ஸ்' பற்றிய விழிப்புணர்வு எம்மவர்க்கு உண்டு என்பதைக் காரணமாகக் கருத முடியாது. எமது கலாசாரத்தில் உள்ள கட்டுப்பாடுகளும் இறுக்கமுமே காரணம். குடாநாட்டில் கலாசாரச் சீரழிவுகள் எல்லை மீறி உள்ள நிலையில் 'எய்ட்ஸ்' பற்றிய விழிப்புணர்வு அவசியமானதாகும்.

'எய்ட்ஸ்' என்ற நோய் உண்டு என்பதை அறிந்திருத்தல் 'எய்ட்ஸ்' பற்றிய விழிப்புணர்வு அல்ல 'எய்ட்ஸ்' எவ்வாறு ஏற்படுகின்றது? 'எய்ட்ஸ்' நோயாளிகளுடன் எவ்வாறெல்லாம் நடந்து கொள்ள வேண்டும்? என்பது தொடர்பான முழுமையான விளக்கம் இருந்தாலே 'எய்ட்ஸ்' தொடர்பான விழிப்புணர்வாகக் கூறமுடியும்.

குடாநாட்டில் திருமணம் முடித்து வைக்கும் பெற்றோர்கள் ஜாதி, மதம், இனம்,தொழில், அந்தஸ்து இவற்றையெல்லாம் கருத்தில் கொள்வார்கள். மணமகனுக்கோ அல்லது மணப்பெண்ணுக்கோ 'எய்ட்ஸ்' உள்ளதா? என்பது குறித்து மருத்துவ அறிக்கையை சமர்பித்த பின்னரே திருமணப் பேச்சைத் தொடங்க வேண்டும் என்று அவர்கள் ஒருபோதும் நினைத்ததில்லை.

வெளிநாட்டு மாப்பிள்ளையைத் திருமணம் செய்பவர்கள் அவருக்கு 'எய்ட்ஸ்' உள்ளதா என்ற மருத்துவ அறிக்கையைக் கேட்க வேண்டும். வெளிநாட்டு மாப்பிள்ளையை திருமணம் செய்தால் நன்றாக வாழலாம் என கருதுபவர்களே நீங்கள் 'எய்ட்ஸ்' உள்ள நபரை திருமணம் செய்தால் எந்த நாட்டிலும் நன்றாக வாழமுடியாது.

தமிழர்களாகிய நாம் ஒருவனுக்கு ஒருத்தியென்ற பண்பாட்டில் வாழ்வதாலேயே 'எய்ட்ஸ்' நோயிலிருந்து பாதுகாப்பாகத் தப்ப முடிகிறது. இதனூடாக 'எய்ட்ஸ்' பற்றிய விழிப்புணர்வை மேம்படுத்தலாம் 'எய்ட்ஸ்' இல்லாத சமுதாயத்தைக் கட்டியெழுப்புதலே அனைவரினதும் விருப்பமும் எதர்பார்ப்புமாகும்.

**தி.வைதேகி**
**யாழ்ப்பாணம்.**

## விவாதமேடை

இளைய சமூகத்தின் விவாதத்திறனுக்குக் களம் அமைத்துக் கொடுப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. எனவே

**குடாநாட்டு மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளில் முக்கிய பங்கு வகிப்பது தனியார் கல்வி நிறுவனங்களா? பாடசாலைகளா?**

என்ற விவாதத்தில் உங்கள் கருத்துக்களை முன்வைத்து மோதுங்கள். வெற்றியைத் தீர்மானிப்பதும் நீங்களே. வெற்றிபெறும் என நீங்கள் கருதும் அணிக்கு வாக்களிக்க முடியும். வெற்றி பெறும் அணிக்கு வாக்களித்தவர்களில் மூவர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்குப் பரிசில் வழங்கப்படும். அத்துடன் சிறந்த விவாதம் அனுப்புவோரில் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுப் பரிசில் வழங்கப்படும்.

**இளைஞர், யுவதிகளே!**

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும், பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங்கள் படைப்புகளையும், ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர் :-..............................
முகவரி:-..............................
:-..............................
.................... ....................
திகதி கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி.கிழக்கு பிரதேச செயலகம்




ஆங்கிலேயரது ஆட்சிக் காலத்தில் இலங்கையில் ஒருங்கமைக்கப்பட்ட நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்கும் வகையில் மகாண, மாவட்ட பிரிவுகள் என்கின்ற கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டதோடு சிவில் நிர்வாக நிதி நடைமுறைகளைப் பேணுவதற்கு ஏதுவாக மாவட்டங்கள் மணியகாரர் பிரிவுகளாகவும் ஒவ்வொரு மணியகாரர் பிரிவு பல கிராமத்தலைமைக்காரர் பிரிவுகளாகவும் பிரித்து நிர்வாக நடைமுறை களை மேற்கொண்டனர்.

ஆங்கிலேயர் ஆட்சியில் இருந்து விடுபட்ட பின்னரும் அதே நிர்வாக அலகு முறைகளை அடியொற்றிய வகையில் காலத்துக்குக் காலம் நிர்வாகப் பிரிவு களுக்கான பெயர்களும் அதிகார அலகுகளும் வகைப்பாடுகளும் நடைமுறைக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றன. மாவட்ட நிர்வாகத்துக்கு அடுத்த நிலையில் மணியகாரர், காரியஅதிகாரி, உதவி அரச அதிபர், பிரதேச செயலர் பிரிவு என்ற வகையில் காலத்துக்குக் காலம் பெயர் மாற்றம் பெற்ற போதிலும் குறித்த ஒரு நிர்வாக அலகுக்கு உரியனவே அந்த நாமங்கள்.

மேற்கண்ட பிரிவுக்கு அடுத்த நிலையில் கிராமத் தலைமைக்காரர், கிராம சேவையாளர், கிராம அலுவலர் என்ற பெயருடன் நிர்வாகக் கட்டமைப்பும் அதிகார நடைமுறையும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தவகையில் இலங்கை 9 மாகாணங்கள், 25 மாவட்டங்கள், 235 பிரதேச செயலர் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு நிர்வாக நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. யாழ். மாவட்டம் 12 பிரதேச செயலர் பிரிவுகளையும் 3 உதவி அரச அதிபர் பிரிவுகளையும் உள்ளடக்கி 15 பிரிவுகளைக் கொண்டதாகவும் 435 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட தாகவும் உள்ளது. ஆங்கிலேயர் ஆட்சியில் ஆரம்ப நிர்வாகக் கட்டமைப்பில் வலிகாமம் கிழக்கு மணியகாரர்பிரிவு என்றும் தற்பொழுது வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவு என்றும் அழைக்கப்படும்.

**ஞான ஆதவன்**

இப்பிரதேசம் மேற்கே வலிகாமம் வடக்கு, வலிகாமம் தெற்கு பிரிவுகளையும், கிழக்கே தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவையும், தெற்கே நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவையும், வடக்கே வலிகாமம் வடக்கு, வடமராட்சி தெற்கு, மேற்குப் பிரதேச செயலர் பிரிவையும் எல்லைகளாகக் கொண்டது. 104.36 சதுர கிலோ மீற்றர் பரப்பளவையும், 1981 ஆம் ஆண்டு குடிசனக் கணக்கெடுப்பின் பிரகாரம் 73,143 பேர் கொண்ட பிரதேசமாகும்.

கிணற்று நீர்பாசனத்துடன் கூடிய பயிர்ச்செய்கை, மீன்பிடி, சிறுகைத்தொழில், வர்த்தக நடவடிக்கை உள்ளிட்ட பல்வேறு தொழில் முயற்சியைக் கொண்டு பெரும் பகுதி செம்மண்ணும் மற்றும் இருவாட்டி, களி, மணல், மணலும் களியும் கலந்த நரைமண் எனப்பல்வேறுபட்ட மண்கொண்ட பிர தேசமாகும். இங்கு இந்துக்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் நிரந்தமாகவும், பல்வேறு கடமை மற்றும் வியாபார நடவடிக்கை என்பன தொடர்பாகப் பௌத்தர்களும் வாழும் வளமான பிரதேசமாகும்.

(தொடரும்...)

# நீர்வேலி காமாட்சி அம்பாள் சனசமூக நிலையம்

**கு.எழிலன்**



நீர்வேலி வடக்குப் பிரதேசத்தில் வாழும் மக்களின் கலை, கலாசார, கல்வி மற்றும் தொடர்பாடல் வளர்ச்சியை மையமாகக் கொண்டு சிறப்புறச் சேவையாற்றி வருகிறது நீர்வேலி காமாட்சி அம்பாள் சனசமூக நிலையம். இந்த நிலையம் நீர்வேலி, புன்னாலைக்கட்டுவன் றோ.க.த.க. பாடசாலைக்கு முன்னாக அமைந்துள்ளது. 1936 ஆம் ஆண்டு காமாட்சியம்பாள் இந்து வாலிபர் சங்கம் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிறுவனம், ஒவ்வொரு வாரமும் வெள்ளிக் கிழமைகளில் கூட்டம்கூடி இளையோர்களின் கல்வி வளர்ச்சிக்கும் சமூகச் செயற்பாட்டிற்கும் ஊக்கம் அளிக்கப் பல்வேறு ஆதரவை நல்கி வருகிறது.

காலஞ்சென்ற சின்னப்பு தர்மலிங்கத்தினால் அவரது வளவில் ஆரம் பிக்கப்பட்ட இந்த நிறுவனம் வளர்ந்துவந்து பின்னர் நீர்வேலி வடக்கு சந்தைக் காணியில் தற்காலிகக் கொட்டில் அமைத்துச் சேவையாற்றி வளர்ந்து வந்தது. இதன் ஆரம்பகால முன்னோடி நிர்வாகிகளாக இருந்தவர்கள் என்றும் நினைவு கூரப்பட வேண்டியவர்கள்.

காலஞ்சென்ற சி.தர்மலிங்கம், அ.கார்த்திகேசு, நா.தம்பிராசா(J.P), கவிஞர் சபா. கதிரவேலு, க.வல்லிபுரம், கு.இராசரத்தினம், வே.பாலசிங்கம் ஆகியோரே ஆரம்ப கால முன்னோடிகளாவர்.

காலம் உருண்டோடத் தற்போதைய காமாட்சியம்பாள் கோயிலுக்கு முன்னால் காமாட்சியம்பாள் வாசிகசாலை என்னும் பெயரில் இயங்கி வந்துள்ளது.

1950 ஆம் ஆண்டு அரசாங்க உள்ளூராட்சி அமைச்சின் திட்டத்திற்கமைய புனரமைக்கப்பட்ட இந்த வாசிகசாலைக்கு காமாட்சியம்பாள் சனசமூக நிலையம் எனப் பெயர் சூட்டப்பட்டது. 26.06.1950 ஆம் ஆண்டில் 132A என்னும் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டது.

நிலையத்தின் வளர்ச்சி சிறப்புற பொதுமக்களின் ஆதரவோடு நடைபெற்று வந்தது. அந்த நிலையில் 10ஆவது ஆண்டு நிறைவுவிழா வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

1969 ஆம் ஆண்டளவில் தனக்கென இருமாடிக்கட்டடம் கொண்டதாக இந்த வாசிகசாலை உருப்பெற்றது. வாசிகசாலையின் சிறந்த வளர்ச்சியினை அடுத்து ஆசிய நிறுவனத்தின் உதவியுடன் நூலகம் ஒன்று மேல்மாடியில் இயக்கத் தொடங்கியது. இந்த நூல்நிலையத்தில் பல்வேறு அரிய நூல்கள் பேணப்பட்டு வந்தன.

இவற்றில் புராண, இதிகாச, இலக்கண, இலக்கிய மற்றும் விஞ்ஞான அறிவு சார் நூல்கள் அத்துடன் ஆங்கில இலக்கிய நூல்கள் போன்றனவும் பேணப்பட்டு வந்தன.

இதன் மூலம் வலி.கிழக்கில் சிறந்ததொரு நூலகமாக மிளிர்ந்தது. அத்துடன் ஒரு சமூக அமைப்பால் நடத்தப்படும் இந்த நூலகம் இரவல் கொடுக்கும் பகுதியையும் தொடங்கிப் பெருமளவு அங்கத்தவர்களைத் தன்னகத்தே இணைத்துக் கொண்டது.

இந்த நிலையத்தின் உப அங்கங்களாக இந்துசமய விருத்திச்சங்கம்,பாலர் கல்வி நிலையம், கலை மன்றம், விளையாட்டுக்கழகம், தமிழ்மன்றம் என்பனவும் சேவையாற்றின.

இதன் ஒரு சிறப்பு அங்கமாகப் பாலர் பாடசாலை வளர்ச்சியடைந்து தற்போது 'யுனிசெப்' அமைப்பின் உதவியுடன் நிரந்தரக் கட்டடம் அமைக்கப்பட்டு இப்பிரதேசப் பாலர்களின் கல்வி வளர்ச்சிக்குப் பெரும் உறுதுணையாக இருந்து வருகிறது.

இவ்வாறு இந்த நிலையம் சேவையின் திருப்தியில் 1975 ஆம் ஆண்டில் வெள்ளிவிழாவை வெகுசிறப்பாகக் கொண்டாடியது. அந்த நிறைவுவிழாவை முன்னிட்டுப் பல்வேறு சிறப்பு நிகழ்வுகள் நடத்தப்பட்டன. அவற்றில் இன்றும் மக்களின் நினைவில் இருக்கக்கூடியதாகத் தமிழக அறிஞர் கி.வா.ஜெகந்நாதன் அவர்கள் நிலையத்தைப் பற்றி வெளிப்படுத்தியமை பெருமையுானதாகக் கொள்ளப்படுகிறது. இதன் மூலம் அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் முதன்மையான, முன்மாதிரியான நிலையமெனப் பலராலும் பாராட்டப்பட்டது.

பின்னர் ஏற்பட்ட யுத்த அனர்த்தத்தில் 1987ஆம் ஆண்டில் விமானத்தாக்குதலில் இக்கட்டடம் முற்றாகச் சிதைந்தது. இதன்போது பல லட்சம் பெறுமதியான கிடைத்தற்கரிய சிறப்பு நூல்கள் அழிவடைந்தன. கட்டடப்பகுதியும் பொலிவிழந்தது செயற்பாடுகள் முடக்கம் பெற்றன.

இருந்தபோதிலும் பிரதேசப் பொதுமக்களின் பேராதரவினாலும் நிர்வாக சபையினரின் விடாமுயற்சியினாலும் மறுசீரமைக்கப்பட்டு இயங்கி வந்தது. மீண்டும் சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையில் பெரும்சேதம் இந்த நிலையத்திற்கு ஏற்பட்டது.

பின்பு ஐக்கியநாடுகள் அகதிகள் புனர்வாழ்வுப் பகுதியினரால் மறு சீரமைக்கப்பட்டது. மீண்டும் 1998 இல் மினி சூறாவளியினால் கூரைகள் பல அழிவடைந்தன. இருந்தபோதிலும் பொதுமக்களின் தளராத முயற்சியினால் மீண்டும் புதுப்பொலிவு பெற்று இயங்கி வருகிறது. இந்த நிலையம் காலத்திற்குக் காலம் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி, விளையாட்டு போட்டி, சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம் என்பனவற்றைப் பண்டிகைக் காலத்தோடு இணைந்ததாக நடத்தி வருகின்றது.

இந்த நிலைய வளர்ச்சியில் தம்மை ஈடுபடுத்திய க.வல்லிபுரம், ச.வடிவேலு, க.பத்மநாதன், சி.அருந்தவநாதன், நா.சுப்பிரமணியம், கு.கனகசுந்தரம், வி.பாலகிருஷ்ணன், த.பரராஜசிங்கம் உள்ளிட்ட பலர் குறிப்பிடக் கூடியவர்கள்.

தற்போது இந்தச் சங்கத்தின் தலைவராக வே.மகேந்திரன், செயலாளராகத் து.ரதீபன், பொருளாளராக மு.தங்கராசா ஆகியோர் உள்ளிட்ட நிர்வாகத்தினர் சிறப்புற இந்தச் சங்கத்தினை நடத்தி வருகின்றனர்.

அந்தவகையில் வலி.கிழக்கின் குறிப்பிடக்கூடிய சனசமூக நிலையத்தில் தொன்மையானதும் முதன்மையானதுமாக விளங்கும் இந்த நிலையம் சிறப்பு வாய்ந்ததாகப் பலராலும் போற்றப்படுகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி.தெற்கு பிரதேசசபை-சுன்னாகம் பொது அறிவித்தல் - 2011

**1. படவரைஞராகப் பதிவு செய்தல் - 2011**

2011 ஆம் ஆண்டு படவரைஞராகப் பதிவு செய்வதற்கு விரும்புவோரும், ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2011 ஆம் ஆண்டு ஜனவரி 15ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளைச் செய்து கொள்ளவும் புதுப்பித்துக் கொள்ளவும் முடியும். மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் அறிந்து கொளளலாம்.

**2. வியாபார உரிம அனுமதிப்பத்திரம் - 2011**

இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் 2011 ஆம் ஆண்டுக்கான அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்கான விண்ணப்பப்படிவத்தினை 2011 ஆம் ஆண்டு ஜனவரி 15 ஆம் திகதிக்குள் பெற்று அதனைப் பூரணப்படுத்திச் சுன்னாகம்/ உடுவில்/ஏழாலை உப அலுவலங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 31.01.2011 ஆம் திகதிக்குள் செலுத்தி உரிமத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**3. வீடமைப்பு நகர சீர்திருத்தக்கட்டளைச் சட்டம் பிரிவு - 268 பிரகாரமான அறிவித்தல்**

3.1 வலி. தெற்குப் பிரதேசசபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் அரச, தனியார் கட்டடங்கள், மதில், மலசலகூடங்கள், குழாய்க்கிணறுகள் என்பவற்றை அமைத்தல், புதுப்பித்தல் வேலைகள் செய்தல் போன்றன சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றமாகுமென்பதை அறியத்தருகின்றேன்.

எனவே வலிகாமம் தெற்கு பிரதேசசபையால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப்படிவத்தின்மூலம் விண்ணப்பம் செய்து சபையின் முன்னங்கீகாரம் பெறப்படாது கட்டப்படும் மேற்படி கட்டடங்கள் யாவும் எதுவித நட்ட ஈடும் வழங்கப்படாது சபையினால் அகற்றப்படும்.

3.2 ஏற்கனவே அனுமதிபெற்றுக் கட்டடம் கட்டி முடிக்கப்படாத பட்சத்தில் அனுமதியைப் புதுப்பித்தல் வேண்டும்.

3.3 அனுமதி பெற்றுக் கட்டடம் கட்டி முடித்தவர்கள், கட்டி முடிக்கப்பட்டமை தொடர்பாக அலுவலகத்துக்கு அறியத்தந்து உரிய அமைவுச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளல்வேண்டும்.

**4. துவிச்சக்கர வண்டி, மிருகங்களின் உரிமம் பெறல்**

2011 ஆம் ஆண்டுக்கான துவிச்சக்கர வண்டி, மிருகங்களின் உரிமத்தை பங்குனி மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுச் சபையின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**5. சுன்னாகம்/ உடுவில்/ ஏழாலை உப அலுவலக ஆதன வரி அறிவித்தல் 2011**

1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின்கீழ் உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி நடப்பு வருடம் அறவிடப்பட்ட ஆதனவரி வீதத்தின் பிரகாரம் 2011 ஆம் ஆண்டுக்கான ஆதனவரி அறவீடு செய்யப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. 2011 ஆம் ஆண்டுக்கான ஆதனவரியை 31.01.2011 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துவோருக்கு அவ்வருட மொத்த வரியில் 10% கழிவு வழங்கப்படும். ஒவ்வொரு காலாண்டுக்குமுரிய வரியை அந்தந்தக் கந்தாயத்தின் முதல் மாத முடிவிற்குள் செலுத்துவோருக்கு காலாண்டு வரியில் 5% கழிவு வழங்கப்படும். குறிப்பிட்ட திகதிக்குள் ஆதனவரியைச் செலுத்தத் தவறின், வசிப்பிடங்களுக்கும் வெற்றுக்காணிகளுக்கும் முறையே 15%உம் ஏனைய ஆதனங்களுக்கு 20%உம் விறாந்துக் கட்டணமாக வரியுடன் சேர்த்து அறவிடப்படும். எனவே தங்கள் ஆதனங்களுக்குரிய வரியை 31.01.2011 ஆம் திகதிக்குமுன் அந்தந்த உப அலுவலகங்களில் முழுமையாகச் செலுத்தி வரிக்கழிவுகளைப் பெற்றுச் சபையின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வரியிறுப்பாளர்களைக் கேட்டுக் கொள்கின்றேன். மேலும் எமது சபை எல்லைக்குள் ஆதனங்களைக் கொள்வனவு செய்பவர்களும் ஏற்கனவே கொள்வனவு செய்து பெயர் மாற்றத்தினை மேற்கொள்ளாதவர்களும் எமது உப அலுவலகங்களுடன் தொடர்புகொண்டு பெயர்மாற்றத்தினை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

**6. சூழல் பாதுகாப்பு உரிமம்**

மத்திய சூழல் அதிகாரசபைத் தலைவரின் 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்கத் தேசிய சூழல் பாதுகாப்புச் சட்டத்தின் 26ஆம் பிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் அடிப்படையில் எனக்குக் குறித்தொதுக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் வலி.தெற்குப் பிரதேச சபையின் நிர்வாகப் பிரதேசத்தில், 1533/16 இலக்க 2008.01.25 ஆம் திகதிய மற்றும் 1534/18 இலக்க 2008.02.01 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகைகளில் விதந்துரைக்கப்பட்ட வியாபாரத்தை/ தொழிலை நடத்துகின்ற உரிமையாளர்களுக்குச் சூழல் பாதுகாப்பு உரிமம் வழங்கப்படுகின்ற பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆகவே சம்பந்தப்பட்டவர்கள் வலி. தெற்கு பிரதேசசபையின் தலைமைப்பணிமனையுடன் தொடர்பு கொண்டு சூழல் பாதுபாப்பு உரிமத்தைப்பெற நடவடிக்கை எடுக்கவும். இவ்வாறு உரிமம் பெறாத எவரும் 2011 ஆம் ஆண்டு மேற்குறிப்பிட்ட தொழில்களை நடத்த அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதையும் இத்தால் அறியத்தருகின்றேன். விதந்துரைக்கப்பட்ட தொழில் முயற்சிகள் பற்றிய விவரங்கள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தல்கள் சுன்னாகம்/ உடுவில்/ ஏழாலை உப அலுவலகங்களில் பார்வையிட முடியும்.

**7. வீதி ஒழுங்கைப் பேணுதல்**

வலிகாமம் தெற்குப் பிரதேசசபையின் சுன்னாக நகர மையப்பகுதியில் அதிகரித்த போக்குவரத்துக் காரணமாக நெருக்கல் அதிகரித்துள்ளது. எனவே விபத்தை தவிர்ப்பதன் நோக்கமாக வீதி ஒழுங்கைப் பேணும் சைகை குறியீட்டுப் பலகைகள் முக்கிய இடங்களில் நிறுத்தப்பட்டுள்ளன. அவற்றை அனுசரித்து நடக்கும்படி பொதுமக்களைத் தயவுடன் வேண்டுகின்றேன். மீறுவோர்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

**8. விளம்பரங்களை அமைத்தல்/ காட்சிப்படுத்தல்**

இப்பிரதேச சபையில் நிர்வாகப்பரப்பிலுள்ள பொது வீதிகளின் இருமருங்கும் அத்துடன் வர்த்தக நிலையங்களின் முகப்பக்கங்களிலும் பொருத்தப்பட்டும்/ காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களை 31.01.2011 திகதிக்குமுன் உரிய கட்டணத்தைச் செலுத்திச் சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். இவ்வாறு அனுமதிபெறப்படாத முகவர்கள்/நிறுவனங்கள்/ வர்த்தக நிலைய உரிமையாளர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு சகல விளம்பரங்களும் உரிய நிலையங்களில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

வலி.தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.
27.12.2010

திருமதி பு.சுலோச்சனா,
செயலாளர்,
வலி.தெற்கு பிரதேசசபை.

(சி/573770)

## ரூபா 5லட்சம் பெறுமதிமிக்க வெளிநாட்டு சிகரெட்டுடன் யாழ்.வர்த்தகர் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 30

சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுக்களை விற்பனைக்காக மறைத்து வைத்திருந்த யாழ். நகர வர்த்தகர் ஒருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுங்கத்தீர்வையைச் செலுத்தாமல் இந்த சிகரெட்டுக்கள் சீனாவிலிருந்து தருவிக்கப்பட்டுள்ளன எனவும் தங்களுக்குக் கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையிலேயே அவை மீட்கப்பட்டன எனவும் யாழ். பிராந்திய குற்றத் தடுப்புப்பிரிவின் பொறுப்பதிகாரி எம்.ஆர்.குணசேகர தெரிவித்தார். இது சம்பந்தமாகச் சுங்கத்திணைக்களத்துக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-23-5)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் யோக்கியசிங்கம் சுதர்சன்

மலர்வு: 15.12.1976
உதிர்வு: 30.12.2008



ஆண்டுகள் இரண்டுதான்
ஓடிப் போனது
ஆறாத துயர் மட்டும்
இன்னும் ஓய்ந்ததில்லை
மாறாத பந்தமும் நீங்காத
நினைவுகளும்
அலை கொண்டு போனாலும்-
அண்ணா
எங்களோடுதான்
வாழ்ந்திடுவாய்
வருடங்கள் பலவானாலும்.

என்றும் நினைவுடன்:
**அன்பின் தங்கை.**

4ஆம் கட்டை,
ஆனைக்கோட்டை.

(108152)

# மரண அறிவித்தல்

## திருமதி கனகம்மா நல்லையா



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகம்மா நல்லையா கடந்த (28.12.2010) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம்நல்லையா(இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர், சந்திரதீபம் ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் ஞானசுந்தரம் (கொழும்பு), கணேஸ்வரி கந்தவனம் (கவி போட்டோ- இணுவில்), யோகச்செல்வன் (பரணி ஸ்ரோர்ஸ்- மல்லாகம்), சிவகுமார் (France), ஞானப்பூங்கோதை (France), தெய்வநாயகி, யோகதாசன் (Canada), கங்கேஸ்வரி (Norway) ஆகியோரின் அன்புத் தாயும் தவஞானலக்சுமி , கணேசமூர்த்தி (நீதிமன்ற ஓய்வூதியர்), தவமணிதேவி (நவாலி), காலஞ்சென்ற நாகரஞ்சினி மற்றும் யோகேஸ்வரி (France), சோதிநாதன் (France), குமாரசாமி (அளவெட்டி), றாதிகா (Canada), இளவழகன் (Norway) ஆகியோரின் அன்பு மாமியும் சந்திரதீபன், கோகுலதீபன், தீபாலினி (London), ராஜ்மோகன், கவிதா, செந்தூரன் (France), சுதனன் (Commercial Bank- Manipay), அனுஜன் (France), காயத்திரி, காலஞ்சென்ற செல்வதர்ஷிகா மற்றும் அம்பிகேசன், சுந்தரேசன், மாதங்கி (கொக்குவில் இந்துக் கல்லூரி), பிரியங்கா, பிரசன்னா, பிருந்தா (France), கஜனன், நித்திலா (France), நிவேஜா, லோகசுதன் (Jaffna Hindu College ), நிருபனா, கார்த்திகா, ஜோதிகா (Canada), பிரணவன், காங்கேயன், பார்கவன், றிசன் (Norway) ஆகியோரின் பேர்த்தியும் விகாஷ்னி, திபாகன், மாதுழன், இலக்கியா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2010) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியை களுக்காக கரையாம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற் றுக்கொள்ளவும்.

தகவல்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
தொ.பே.: 021 3209419, 021 4902919.

(108149)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு உதவ அகில இலங்கை இந்து மாமன்றம் வேண்டுகோள்

## பொதுச் செயலாளர் கந்தையா நீலகண்டன் அறிக்கை

மட்டக்களப்பு, டிசெ.30

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தினால் 55 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்திற்கும் மேலானோர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், அல்லலுறும் எங்கள் உடன் பிறப்புகளுக்கு எம்மாலான நிவாரண உதவிகளைச் செய்வது எமது தலையாய கடமை என்று அகில இலங்கை இந்து மாமன்றப் பொதுச் செயலாளர் கந்தையா நீலகண்டன் தாம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் குறிப்பிட்டிருப்பவை வருமாறு:-

இந்த நாட்டின் இந்து அமைப்புக்களின் ஒன்றியமான அகில இலங்கை இந்து மாமன்றம் அதன் அங்கத்துவ சங்கமான மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றம் மூலம் நிவாரண உதவிகளை வழங்க ஆரம்பித்துள்ளது.

இந்தப் பணிகளின் முதற்கட்டமாக முகாம்களில் இருக்கும் சுமார் 750 குடும்பங்களுக்கு உடனடியாக நிவாரணப் பொதிகளை வழங்க மாமன்றம் அம்மன்றத்திற்கு நிதி உதவியை அனுப்பி வைத்திருக்கின்றது.

மேலும் கடும் மழை தொடர்கிறது. இதனால் முகாம்களில் மக்கள் தஞ்சம் அடையும் நிலை ஏற்படலாம் என வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றோம். இந்த நிவாரண உதவிக்கு உதவுபவர்கள் பணமாகத் தந்து உதவலாம். இந்த நிதி உதவியிலிருந்து தேவையான நிவாரணப் பொருள்களை வாங்கி அனர்த்தத்தினால் வாடும் மக்களுக்கு உதவ முடியும்.

உதவி செய்பவர்கள் அகில இலங்கை இந்து மாமன்றம் (தொலைபேசி : 0112434990) பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபம், (தொலைபேசி: 01125 85975) ஆகிய இடங்களிலும், நல்லூர் கோயில் வீதி, இல. 211/7,இல் இருக்கும் யாழ்ப்பாண மாமன்ற அலுவலகத்திலும், (தொலைபேசி: 021222 1075) வழங்கலாம்.

உடனடியாகத் தேவையான நிவாரணங்களை வழங்குமாறு அரசை வற்புறுத்தி ஜனாதிபதிக்கும் ஓர் அவசர வேண்டுகோளை மாமன்றம் விடுத்திருக்கிறது. (9)




## புதையல் தோண்ட முற்பட்டவர்கள் நவகொடையில் கைது

அம்பாறை,டிசெ.30

அம்பாறை நவகொடை பிரதேசத்தில் புதையல் தோண்ட முற்பட்டவர்களை பொலிஸார் கடந்த திங்கட்கிழமை கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர்கள் புதையல் தோண்டுவதற்குப் பயன்படுத்திய உபகரணங்கள் மற்றும் வான், முச்சக்கர வண்டி ஆகியவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் அம்பாறை பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து தீவிரமடைந்த பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து சந்தேகநபர்களை மடக்கிப் பிடித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ளி)

## இறக்காமத்தில் வீடு தீப்பற்றி உடைமைகள் நாசம்

அம்பாறை,டிசெ.30

இறக்காமம் பிரதேசத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 7.30 மணியளவில் மின் ஒழுக்கின் காரணமாக வீடொன்றில் பற்றிய தீ பகீரதப் பிரயத்தனத்தின் பின்னர் அணைக்கப்பட்டுள்ளது. எனினும் வீட்டுக் கூரையின் ஒரு பகுதி முற்றாகச் சேதமடைந்துள்ளது. அத்துடன் பல லட்சம் ரூபா பெறுமதியான உடைமைகளும் தீக்கிரையாகியுள்ளன.

வீட்டுக்குப் பக்கத்திலுள்ள தமது கடைக்குள் வீட்டுச் சொந்தக்காரர்கள் சம்பவ தினம் இருந்த சமயம், வீட்டுக் கூரையில் தீப்பற்றியுள்ளது. இதை அயல் வீட்டுச் சிறார்கள் அவதானித்து வீட்டுச் சொந்தக்காரர்களிடம் அறிவித்துள்ளனர்.

வீட்டுச் சொந்தக்காரர்கள் அயலவர்களைக் கூவி அழைத்து அவர்களின் உதவியோடு ஒரு மணித்தியாலமாகப் போராடி பகீரதப் பிரயத்தனத்தால் தீயை அணைத்துள்ளனர்.

சுமார் நான்கு லட்சம் ரூபா பெறுமதியான உடைமைகள் அழிந்து விட்டன என வீட்டுச் சொந்தக்காரர்கள் தெரிவித்தனர்.

வீட்டுக்குளிருந்த தொலைக்காட்சிப் பெட்டி, 50 ஆயிரம் ரூபா பண நோட்டுக்கள், தங்க நகைகள், ஆடைகள், கதிரைகள், மேசைகள் ஆகியவையே தீக்கிரையாகியுள்ளன.

இறக்காமம் பிரதேச செயலாளர் திருமதி ஆர்.யூ.அப்துல் ஜலீல் இங்கு பயணம் செய்து சேதமுற்ற வீட்டைப் பார்வையிட்டுச் சென்றுள்ளார். (ளி)

## நிலக்கடலையை உரிய விலையில் சந்தைப்படுத்த முடியாத அவலம்

### திருமலை விவசாயிகள் கவலை தெரிவிப்பு

திருகோணமலை,டிசெ.30

திருகோணமலை மாவட்டத்திலுள்ள மூதூர் கிழக்கு, ஈச்சிலம்பற்று ஆகிய பிரதேசங்களில் நிலக்கடலை அமோக விளைச்சலைத் தந்துள்ளது. இருப்பினும் நிலக்கடலையை சந்தைப்படுத்த முடியாமல் விவசாயிகள் நட்டத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்துள்ள மூதூர் கிழக்கிலுள்ள அம்மன் நகர், கணேசபுரம், இந்திக்குளம், தங்கபுரம், கடற்கரைச்சேனை, பள்ளிக்குடியிருப்பு ஆகிய இடங்களில் அதிகளவில் நிலக்கடலை செய்கை பண்ணப்பட்டுள்ளன.

இப்பகுதிகளில் அமோக விளைச்சலில் கிடைக்கும் நிலக்கடலையை உரிய விலைக்கு சந்தைப்படுத்த முடியாமல் விவசாயிகள் தவிக்கின்றனர். ஒரு கொத்து நிலக்கடலை 40 தொடக்கம் 50 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது. உற்பத்தி செய்யப்படும் நிலக்கடலையை உரிய விலைக்கு விற்பனை செய்ய முடியாதுள்ளது என விவசாயிகள் கவலை தெரிவிக்கிறார்கள். (ளி)

## கோதுமை, தேங்காய் விலை அதிகரிப்பால் தோட்டத் தொழிலாளர்களுக்கு பெரும் பாதிப்பு

### இ.தொ.ஐ.மு. தலைவர் சதாசிவம் ஜனாதிபதிக்குக் கடிதம்

கொழும்பு, டிசெ.30

தோட்டத் தொழிலாளர்கள் பயன்படுத்துகின்ற முக்கிய உணவுப் பொருள்களான கோதுமை மா மற்றும் தேங்காய் ஆகியவற்றின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரித்துள்ளதால் தோட்டத் தொழிலாளர்கள் பொருளாதார ரீதியாகப் பாதிப்படைந்துள்ளனர் - என்று இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் தலைவரும், மத்திய மாகாண சபை உறுப்பினருமான எஸ்.சதாசிவம் ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அந்தக் கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிட்டிருப்பவை வருமாறு:-

கூட்டு ஒப்பந்தத்தின் மூலமாகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு உழைப்புக்கேற்ற சம்பளம் கிடைப்பதில்லை. இந்த நிலையில் அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதால் தோட்டத் தொழிலாளர்கள் தொடர்ந்து வறுமை நிலையை எதிர்நோக்கி வருகின்றனர்.

தோட்டப் பகுதிகளில் ஒரு கிலோ கோதுமை மா 94 ரூபாவுக்கும், தேங்காய் ஒன்று 60 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றன.

இந்நிலையில் 2011ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு குறிப்பிட்டளவு சம்பள உயர்வு வழங்கப்படவுள்ள அதேவேளை வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவான 600 ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

எனினும், தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைச் செலவுப் பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் இந்த வரவு - செலவுத் திட்டத்தில் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

எனவே, தற்போதைய வாழ்க்கைச் செலவு அதிகரிப்பைக் கருத்திற் கொண்டு வரவு - செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவான 600 ரூபாவை தோட்டத் தொழிலாளர்களுக்கும் வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அக்கடிதத்தில் சதாசிவம் குறிப்பிட்டுள்ளார். (ளி)




## கல்விச் சீர்திருத்தம்...



கலந்துரையாடல்: புதிய கல்விச் சீர்திருத்தம் குறித்து சிறுபான்மைச் சமூகங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் கண்டி அல்ஹம்ரா முஸ்லிம் வித்தியாலயத்தில் இடம்பெற்ற கருத்தரங்கில் கலந்துகொண்ட துறைசார் அறிஞர்கள் அமர்ந்திருக்கின்றனர்.

## பதுளையில் சிறிய நீர்ப்பாசனங்களின் புனரமைப்பிற்கு 5 கோடி ரூபா நிதி

பதுளை,டிசெ.30

பதுளை மாவட்டத்திலுள்ள 79 சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களின் புனரமைப்புக்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஐந்துகோடி ரூபா நிதியை ஒதுக்கியுள்ளது.

'கிராம எழுச்சி' திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட புனரமைப்புத் திட்டத்தின்மூலம் ஏற்கனவே ஐம்பது நீர்ப்பாசனத் திட்டங்கள் பூர்த்தியாகி உள்ளன எனப் பதுளை விவசாய அபிவிருத்தி அமைச்சின் உதவி ஆணையாளர் சமரக்கோன் தெரிவித்தார்.

பதுளை விவசாய அபிவிருத்தி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற மாவட்ட விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்ட விவரங்களைத் தெரிவித்தார்.

வெலிமடை, ஊவா பரணகம போன்ற பகுதிகளில் இந்த அபிவிருத்திப் பணிகளுக் கான கருங்கற்கள் கிடைப்பதில்லை. அதனால் தெமோதரை கற்குவாரியில் இருந்து கற்கள் தருவிக்கப்படுகின்றன.

இந்த அபிவிருத்திப் பணிகள் சில அதிகாரிகளின் அசிரத்தையால் தாமதப்படுத்தப்படுகின்றன. இந்நிலை நீடிக்குமானால், அவர்களுக்குப் பதிலாக திறமை மிக்க அதிகாரிகள் நியமிக்கப்படுவர் - என அவர் மேலும் கூறினார். (ளி)

## தேயிலைக் கொழுந்து நிறுவையில் மோசடி செய்த 4 வியாபாரிகள் கைது

அகலவத்தை, பதுரலிய பிரதேசத் திலுள்ள சிறு தேயிலைத் தோட்டங்களில் வாங்கும் கொழுந்துகளை கள்ளத் தராசுகள் மூலம் நிறுத்து குறைவான கொடுப்பனவுகளை வழங்கி வந்த நான்கு வியாபாரிகள் நிறுவை, அளவை திணைக்கள அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

திணைக்கள அதிகாரிகள், கொழுந்து கொள்வனவுக்குப் பயன்படுத்தப்பட்ட நான்கு லொறிகளில் மேற்கொண்ட திடீர் சோதனையின்போது அவர்கள் பாவித்த கள்ளத் தராசுகள் பிடிபட்டதையடுத்தே மேற்படி மோசடி அம்பலத்திற்கு வந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாகவே தேயிலைக் கொழுந்துகள் குறைவாக எடைபோடப்பட்டு வருகின்றன எனத் தோட்டத் தொழிலாளர்கள் சார்பில் களுத்துறை அளவை நிறுவைத் திணைக்களத்திற்குக் கிடைத்த முறைப்பாடுகளின் அடிப்படையிலேயே இந்த அதிரடிச் சோதனை நடத்தப்பட்டுள்ளது. (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொர்க்கம் சென்ற சோற்றுமூடை




நேற்றைய தொடர்ச்சி...

''குருவே! நீங்கள் இல்லாத சமயத்தில் கூட, நாங்கள் புத்திசாலித்தனமான செயல் செய்துள்ளோம்'' என்று பெருமையோடு சொன்னான் மண்டு. உங்கள் ''குருநாதரான சோற்று மூடை சுவாமிக்கு இனி கவலையே இல்லை!'' என்றான் மூடன்.

''சொர்க்கத்தில் இருந்து ஆள் அனுப்பி இருந்தார். அவரிடம் உங்கள் குருவுக்குத் தேவையானதை எல்லாம் கொடுத்து அனுப்பினோம்!'' என்று முட்டாள் சொன்னான்.

பரமார்த்த குருவுக்கோ ஒன்றும் விளங்கவில்லை. தாங்கள் செய்த காரியத்தை சீடர்கள் விளக்கியதும், ''அடப்பாவிகளா! ஏன் இப்படிச் செய்தீர்கள்?'' எனக் குதித்தார்.

''நாங்கள் நல்லது தானே செய்தோம்? உங்கள் குருநாதர் பசியால் வாடலாமா?'' என்று மட்டி கேட்டான்.

''முட்டாள்களே! எனக்குக் குருநாதரே யாரும் கிடையாது! இது தெரியாதா உங்களுக்கு? எவனோ உங்களை நன்றாக ஏமாற்றி விட்டுப் போய் விட்டானே!'' என்று பரமார்த்தர் சொன்னதும், சீடர்கள் எல்லோரும்''திரு திரு'' என்று விழித்தார்கள்.

''சீடர்களே! நீங்கள் ஏமாந்ததும் ஒரு வகையில் நல்லதுதான்! அதே திட்டத்தைப் பயன்படுத்தி, நம் ஊர் அரசனை நாம் ஏமாற்றி விடலாம்!'' என்றார் பரமார்த்தர்.

அப்போதே குருவும், சீடர்களும் அரண்மனைக்குப் போனார்கள்.

''மன்னா! நாங்கள் நேற்று இராத்திரி சொர்க்கம் போய் வந்தோம். அங்கே எல்லோரும் நன்றாக இருக்கிறார்கள். ஆனால் உங்கள் தாத்தா மட்டும் பிச்சை எடுத்துத் திரிகிறார்!'' என்று புளுகினர்.

"ஆமாம் அரசே! ராஜ குடும்பத்தில் பிறந்தவர் இப்படிப் பிச்சை எடுக்கலாமா?" என்று மட்டி கேட்டான்.

மடையனோ, ''அவரைப் பார்த்தால் பரிதாபமாக இருக்கிறது!'' என்றான்.

''நாங்கள் மறுபடியும் நாளைக்குச் சொர்க்கலோகம் போகப் போகிறோம். ஏராளமாகப் பணமும் துணியும் உங்களிடம் இருந்து வாங்கி வரச் சொன்னார்!'' என்று புளுகினான் முட்டாள்.

''அப்படியே உயர்ந்த இனக் குதிரையாக இரண்டு வாங்கி வரச் சொன்னார்'' என்று அள்ளி விட்டான் மண்டு.

''எல்லாவற்றையும் எங்களிடம் தந்து விடுங்கள். நாங்கள் பத்திரமாகக் கொண்டு போய்க் கொடுத்து விடுகிறோம்!'' என்றார் பரமார்த்தர்.

அரசனுக்கோ, கோபம் கோபமாக வந்தது. ''யாரங்கே! இந்த ஆறு முட்டாள்களையும், ஆறு நாளைக்குச் சிறையில் தள்ளுங்கள்!'' என்று கட்டளை இட்டான்.

''அரசே! நாங்கள் என்ன தவறு செய்தோம்? செத்துப்போன உங்கள் தாத்தாதான் எங்களை அனுப்பினார்!'' என்று ஏமாற்ற நினைத்தார், பரமார்த்த குரு.

அரசனோ, ''யாரை ஏமாற்றப் பார்க்கிறீர்கள்? இன்னும் என் தாத்தா சாகவே இல்லையே! இதோ உயிரோடு தான் இருக்கிறார்!'' என்று சொன்னபடி பக்கத்தில் அமர்ந்திருந்த தாத்தாவைக் காட்டினான்.

''ஐயையோ! அரசரின் தாத்தா செத்து விட்டாரா இல்லையா என்று தெரிந்து கொள்ளாமலேயே இப்படி வந்து மாட்டிக் கொண்டோமே!'' என்று குருவும் சீடர்களும் அழுதனர்.

(முற்றும்).

## மாணவர்களின் அறிவுக்குச் சில

1. 1947ஆம் ஆண்டு யானைக்கால் நோய் ஒழிப்புத் திட்டம் ஆரம்பமானது
2. 1949 ஆம் ஆண்டு காசரோகத்தைத் தடுப்பதற்கான B.C.G தடுப்பு மருந்து அறிமுகமாக்கப்பட்டது.
3. 1954 ஆம் ஆண்டு குஷ்ரரோக ஒழிப்புத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.
4. 1961 இல் தொண்டைக்கரப்பான், குக்கல், சின்னமுத்து என்பனவற்றிற்கான தடுப்பு மருந்து அறிமுகமாக்கப் பட்டது.
5. 1965 இல் அம்மை நோய் ஒழிக்கப்பட்டது.
6. 1966 இல் முதன் முதலாகப் பரவிய டெங்குக் காய்ச்சலுக்கான சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அந்நோய் ஒழிப்பு நடவிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.
7. 1969 இல் கர்ப்பிணித்தாய்மாருக்கான ஏற்புவலி தடை மருந்து அறிமுகமானது.
8. 1970 இல் மலேரியா நுளம்பு ஒழிப்பிற்கான மலத்தியோன் பாவனை தொடங்கப்பட்டது.
9. 1972 இல் அரச மருந்துக் கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கப்பட்டது.

- சிலையூர் தனம்

## விடுகதைகளும் விடைகளும்

1. பாடல் இல்லாத ஆட்டம்; பணம் பறிக்கும் ஆட்டம் அது என்ன? — சூதாட்டம்
2. திரி இல்லாத விளக்கு திரிலோகம் எல்லாம் தெரியும் அது என்ன? — சூரியன்
3. பகைவனை வெல்லும் பூ என்ன பூ? — அம்பு
4. கையில்லாமல் நீந்தும்; கொம்பில்லாமல் போகும் அது என்ன? — படகு
5. வெள்ளைச் சால்வை கிழிந்து கிடக்கு ;தைக்க நேரம் இல்லை அது என்ன? — முகில்
6. ராஜாமகள் கோபித்துக் கொண்டு போகிறாள்; கூப்பிட நேரமில்லை அது என்ன? — மின்னல்
7. றோஜாப்பூ கொட்டிக் கிடக்கின்றது, கூட்ட விளக்குமாறு இல்லை அது என்ன? — நட்சத்திரம்
8. தொட்டால் பிடித்துக் கொள்ளும், பசை அல்ல; அது என்ன? — மின்சாரம்
9. தச்சன் செய்யாத பெட்டி; தானே திறந்து மூடும் அது என்ன? — கண்
10. மீனவனிடம் உள்ள பூ அது? — துடுப்பு

வி. கௌதமி,
தரம் 9,
யா/வேம்படி மகளிர்
உயர்தரப் பாடசாலை.




## அகராதிச் சொற்கள்...

**அங்கலாய்ப்பு**
மனதிற் குறைபட்டு வருந்துதல்.
**அங்கவஸ்திரம்**
அடுக்கடுக்காக மடிப்புக் கொண்டு ஆண்கள் தரிக்கும் மேல் துண்டு.
**அங்குமிங்குமாக**
பரவலாகயிருத்தல்.
**அங்கங்கே**
முன்னும் பின்னுமாய்.
**அசகாய சூரன்**
திறமையுள்ளவன்.
**அசடுவழிதல்**
முட்டாள்த் தனம்.
**அசட்டை**
மதியாமை.
**அசத்துதல்**
திணரச் செய்தல்.
**அசந்தர்ப்பம்**
பொருத்தமற்ற நிலை.

கௌதமி

## மாணவர்களுக்குச் சில தகவல்கள்...

**4 .கொலம்பஸ் அமெரிக்காவை கண்டு பிடிப்பதற்கு முன்**

கொலம்பஸ் 1492 இல் அமெரிக்காவிற்குப் போக முதலே அமெரிக்காவில் ஆதிவாசிகள் இருந்துள்ளனர். போர்த்துக்கேயர்கள் 1424 இல் அங்கு சென்றுள்ளனர். அதுமட்டுமன்றி மேலும் பல ஆதாரங்கள் கொலம்பஸ் அமெரிக்காவை கண்டு பிடிக்க முன்னர் அங்கு பலர் சென்றுள்ளனர் அல்லது வசித்துள்ளனர் எனக் கூறுகின்றன.

**5 . மின்குமிழ்கள் கண்டு பிடிப்பு**

எடிசனுக்கு முதலிலேயே 22 இற்கும் மேற்பட்ட வேறுபட்ட வகை மின் விளக்குகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக 19ஆம் நூற்றாண்டு தொடக்கப் பகுதியில் அவை கண்டு பிடிக்கப்பட்டன. ஆனால் எடிசன் 1879, இல் அன்றாட வாழ்கையில் நீண்ட காலம் பாவிக்கக் கூடிய மின் விளக்குகளையே கண்டு பிடித்துள்ளார்.

**6 .வெளவால்கள் குருடா?**

இதுவரையில் கண்டு பிடிக்கப்பட்ட 1,100 இற்கும் மேற்பட்ட வெளவால் வகைகளில் அனைத்துக்குமே பார்வைத் திறன் உள்ளன. அவை எதிரொலியைப் பிரதானமாகப் பயன்படுத்தினாலும் சிலவகை கண்களையே பிரதானமாகப் பாவிக்கின்றன. அவற்றின் கண்களால் வடிவம், நிறம் என்பவற்றைக் கூட வேறுபடுத்திக் காட்ட முடியும் .

## நெருப்புக்கோழி



நெருப்புக் கோழி
எவ்வளவு பெரிசு
உனக்குத்
தெரியுமா?
நெருங்கிப்
போனா
கண்ணைக்
குத்தும்
விலகி
நில்லம்மா?

கழுத்துப் பெருசா வளைஞ்சிருப்பது
அழகுதானம்மா!
கண்ணு ரெண்டும் தீப்பிழம்பா தெரியுது
சின்ன்ம்மா!

வாலு குட்டை வாலு மேலேநீண்டு விரியுது!
ரெக்கை ரெண்டு அகலமாக
அடர்ந்து இருக்குது!

காலு ரெண்டும் சிவப்புக் குச்சி
போல நீட்டம்தான்!
இறகு எல்லாம் பெரிசு பெரிசா
வெள்ளை நிறம்தான்!
தத்தித் தாவி நடக்குது பாரு
நெருப்புக் கோழிதான்!

## மரபுத் தொடர்கள்

* அகட விகடம்-தந்திரம்.
* அழி வழக்கு-வீண் வழக்கு.
* இரண்டுபடுத்தல்-பிரிவுபடுத்தல்.
* இடித்துரைத்தல்-வ ற்புறுத்திக்கூறுல்.
* ஆழம் பார்த்தல்-ஒருவரைப் பற்றி ஆராய்தல்.
* அறை கூவுதல்-போருக்கு அழைத்தல்.
* இழுத்துப்பறித்தல்-முயன்று செய்தல்.
* நாக்கு நீளுதல்-மிதமிஞ்சிப் பேசுதல்.
* பூசி மெழுகுதல்-செய்த குற்றத்தை மறைக்க முயலுதல்.
* வத்தி வைத்தல்-கோள் சொல்லி சண்டை மூட்டுதல்.

ப.ஜெயப்பிரகாஷ்,
தரம் 6 A,
வைத்தீஸ்வராக்கல்லூரி.

## அரங்கேறும் நாட்டியம்...



தெளிவானமுத்திரை: ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற கலாச்சார நிகழ்வின் போது திருமதி நித்தியகலா வேகா வனத்தின் நெறியாழ்கையில் ஒட்டுசுட்டான் இந்து த.க.பாடசாலை மாணவி செல்வி சர்வாணிகா கீர்த்திவாசக் குருக்களின் பரதநாட்டியம் அரங்கேறுகிறது. (500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் பேக்போ பதவி விலகுவதில் சர்ச்சை ஐவரிகோஸ்ட்டில் ஆபிரிக்கத் தலைவர்கள்



யமோக்ரோ, டிசெ.30

ஆபிரிக்க நாடான ஐவரிகோஸ்ட்டில், அதன் தற்போதைய அதிபர் லாரன் பேக்போ பதவி விலகுவது குறித்து பேச்சுவார்த்தை நடத்த மேற்கு ஆபிரிக்க நாடுகளின் தலைவர்கள் அந்நாட்டுக்கு சென்றுள்ளனர். அதனால் அங்கு மேலும் பதற்றம் அதிகரித்துள்ளது.

ஆபிரிக்காவின் மேற்கு பகுதியில் உள்ள நாடான ஐவரிகோஸ்ட், உலகிலேயே கொக்கோ அதிகமாக விளையும் நாடாகும். 2000ஆம் ஆண்டு முதல் அந்நாட்டின் அதிபராக லாரன் பேக்போ இருந்து வருகிறார். 2000க்குப் பின் கடந்த நவம்பர் 28ஆம் திகதி அங்கு அதிபருக்கான பொதுத்தேர்தல் நடந்தது. அதில் எதிர்க்கட்சி தலைவரான அலசான் வட்டாரா வெற்றி பெற்றார். எனினும் சதி மூலம் தான் தேர்தலில் எதிர்க்கட்சி வெற்றி பெற்றுள்ளது என்று கூறிய பேக்போ, பதவி விலக மறுத்து விட்டார். இதையடுத்து அங்கு உள்நாட்டு கலவரம் மூளும் அபாயம் ஏற்பட்டது. தேர்தலின் போது ஏற்பட்ட கலவரங்களில் 173 பேர் பலியாகினர். 14 ஆயிரம் பேர் ஐவரிகோஸ்ட்டின் மேற்கு பகுதியில் இருந்து வெளியேறி, பக்கத்து நாடான லைபீரியாவில் தஞ்சம் புகுந்தனர். அங்கிருந்த தனது நாட்டவர் அனைவரும் வெளியேற வேண்டும் என பிரான்ஸ் நாடு உத்தரவிட்டது.

ஐ.நா. தனது 10 ஆயிரம் வீரர்களை அங்கு பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தியுள்ளது.

மேற்கு ஆபிரிக்க நாடுகள் கமிஷன் தலைவரும், தென்னாபிரிக்க அதிபருமான தபோ பெக்கி மேற்கொண்ட சமரச முயற்சி தோல்வியடைந்த நிலையில், மேற்கு ஆபிரிக்க நாடுகள் பொருளாதாரக் குழு (எக்கோவாஸ்), "பேக்போ உடனடியாகப் பதவி விலக வேண்டும், இல்லையென்றால் எக்கோவாசின் படைகள் ஐவரிகோஸ்ட்டுக்குள் நுழைய வேண்டி வரும்' என எச்சரிக்கை விடுத்திருந்தது.

இதற்கிடையில் நேற்று வட்டாரா அங்கு நாடு தழுவிய முழு அடைப்புக்கு அழைப்பு விடுத்தார். இப்பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு நேற்று அந்நாட்டுக்கு வந்த மேற்கு ஆபிரிக்க நாடுகளான சியெரா லியோன், பெனின் மற்றும் கேப் வெர்டே ஆகியவற்றின் தலைவர்கள், பேக்போவுடன் பேச்சுவார்த்தை நடத்தும் பிரதிநிதியாக கென்யப் பிரதமர் ரைலா ஒடிங்கா பெயரை அறிவித்தனர். எனினும், எக்கோசுவாடன், பேக்போ நடத்தும் பேச்சுவார்த்தைக்கு பின்புதான், தான் பேச முடியும் என கென்ய பிரதமர் ஒடிங்கா தெரிவித்துள்ளார். (த)

# இஸ்ரேல் மொஸாட்டுக்காக உளவு பார்த்த ஈரானியருக்குத் தூக்குத் தண்டனை

தெஹ்ரான், டிசெ. 30

இஸ்ரேலிய புலனாய்வுச் சேவையான மொஸாட்டுக்கு உளவு பார்த்த குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டமையினால் ஈரானிய நபரொருவருக்கு அந்நாட்டில் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

1979 ஆம் ஆண்டு அங்கு இடம்பெற்ற இஸ்லாமிய புரட்சிகளுக்கு பின்னர் ஈரானில் அமுல்படுத்தப்பட்ட சட்டத்திட்டங்களுக்கமைய உளவு பார்த்தல் மற்றும் கடவுளுக்கெதிரான போரைத் தூண்டல் ஆகியன மரணதண்டனையை வழங்கக்கூடிய குற்றங்களாகும்.

அதை வலியுறுத்தும் முகமாக இத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இத்தண்டனையானது தெஹ்ரானிலுள்ள எவின் சிறைச்சாலையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஈரானிய பிரஜையான அலி அக்பர் இஸ்ரேலிய உளவுச் சேவைக்கு பல வருடங்களாக உளவு பார்த்ததாக குற்றஞ்சாட்டப்படுகிறது.

மேலும் இஸ்லாமிய தேசத்திலிருந்து கொண்டு அதனை எதிர்க்கும் வகையில் யூத நாடொன்றினை பலப்படுத்த முயன்றதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவர் இதற்காக மொஸாட்டிடம் இருந்து 60,000 அமெரிக்க டொலர் பணத்தையும் தகவல் வழங்குவதற்காக மடிக் கணினியொன்றையும் பெற்றுக்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அவர் ஈரானிய இராணுவத் தளங்கள், போர் விமானங்கள், இராணுவ ஒத்திகைகள் , மற்றும் ஏவுகணைத் தொகுதிகள் தொடர்பான தகவல்களை இஸ்ரேலுக்கு வழங்கியதாக குற்றஞ்சாட்டப்படுகின்றது. (த)

# இந்திய இளைஞன் கொலை; அமெரிக்காவில் இருவர் கைது

ஹூஸ்டன், டிசெ.30

அமெரிக்காவில், கலிபோர்னியா மாகாணத்தில் இந்திய இளைஞர் படுகொலையான வழக்கில், அப்பகுதிப் பொலிஸார் இரண்டு பேரைக் கைது செய்து, அவர்கள் மீது வழக்கு பதிவு செய்துள்ளனர்.

அமெரிக்காவில் கலிபோர்னியா மாகாணத்தில், பசடெனா நகரில் உள்ள ஒரு கடையில், இந்தியாவின் ஆந்திரா மாநிலத்தை சேர்ந்த ஜெயச்சந்திரா (வயது 22) என்ற இளைஞர் பணியாற்றி வந்தார். கடந்த கிறிஸ்துமஸ் தினத்தன்று, அதிகாலையில் முகமூடி அணிந்த கொள்ளையன் ஒருவன் திடீரென கடைக்குள் நுழைந்து, ஜெயச்சந்திராவை சுட்டுக் கொன்று விட்டு, அங்கிருந்த பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றான். இதுகுறித்து, அக்கடையில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரிவியில் பதிவான காட்சிகளை அப்பகுதி பொலிஸார் பத்திரிகைகளுக்கு அனுப்பி விசாரித்து வந்தனர்.

இந்நிலையில், இப்படுகொலை தொடர்பாக டேனியல் ஜேக்கப் ஸ்டினர் மற்றும் மிக்கேல் ரேய் மோரிஸ் என்ற இருவரை பொலிஸார் கைது செய்தனர். (த)

# ஒபாமா, ஹிலாரிக்கு அதிக மதிப்பு



வாஷிங்ரன், டிசெ.30

இந்த ஆண்டில் அமெரிக்க மக்களால் மிகவும் மதிக்கப்பட்டவர்களாக அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவும், அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளிங்ரனும், இணையதள வாக்கெடுப்பில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

அமெரிக்காவில் இயங்கி வரும் gallup.com இணையதளம், இந்தாண்டில் மக்களால் மதிக்கப்பட்டவர்கள் குறித்து, அமெரிக்காவில் கடந்த 10ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரை, 1,000 பேரிடம் தொலைபேசி மூலம் வாக்கெடுப்பு நடத்தியது. அதில் 10 பேர்களை தரவரிசைப்படுத்தியது. அதில் ஆண்களில் 22 சதவீதம் வாக்குகள் பெற்று முதலிடத்தை பிடித்துள்ளார் அதிபர் ஒபாமா. இரண்டாமிடத்தில் முன்னாள் அதிபர் ஜோர்ஜ் புஷ், மூன்றாவது இடத்தில் பில் கிளிங்ரன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். நான்காவதாக நெல்சன் மண்டேலாவும், பில்கேட்ஸ் ஐந்தாமிடத்திலும், பத்தாவது இடத்தில் புத்த மதத் தலைவர் தலாய்லாமாவும் இடம் பெற்றுள்ளனர்.

பெண்களில் 17 சதவீதம் வாக்குகள் பெற்று ஹிலாரி கிளிங்ரன் முதலிடத்தைப் பிடித்தார். அவரையடுத்து, அதிபர் வேட்பாளர் சாரா பாலின், நான்காவது இடத்தில் ஒபாமா மனைவி மிச்சேல், எட்டாம் இடத்தில், மார்கிரெட் தாட்சர், ஒன்பதாமிடத்தில் ஆங் சான் சூகி ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். (த)

# ஐக்கிய அரபுக் குடியரசின் விசா விதிகளில் தளர்வு

துபாய், டிசெ.30

ஐக்கிய அரபு எமிரேட்ஸ், அடுத்தாண்டு முதல் அமுல் படுத்த உள்ள புதிய வேலை அனுமதிச் சட்டப்படி அங்குள்ள தொழிலாளர்களுக்கு விசா வழங்க ஏற்கனவே நடைமுறையில் இருக்கும் ஆறு மாத காலத் தடை ரத்துச் செய்யப்படும்.

ஐக்கிய எமிரேட்ஸ் நாடுகளில் இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் இருந்து தொழிலாளர்கள் வேலை பார்க்கின்றனர். அங்குள்ள வெளிநாட்டவர்களில் பெரும்பான்மையினராக 17 லட்சம் இந்தியர்கள் உள்ளனர். ஏற்கனவே உள்ள வேலை அனுமதிச் சட்டப்படி ஒரு தொழிலாளர் தான் வேலை பார்க்கும் நிறுவனத்திடம் இருந்து இன்னொரு நிறுவனத்துக்குச் செல்ல வேண்டுமானால் அவருக்கு ஆறு மாத காலம் தடை விதிக்கப்படும்.

ஆனால் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் அமுல்படுத்தப்பட உள்ள புதிய வேலை அனுமதிச் சட்டப்படி, அந்தத் தடை ரத்து செய்யப்படும்.

இதனால் தான் வேலை பார்க்கும் நிறுவனத்திடம் இருந்து புதிய நிறுவனத்துக்குச் செல்ல உடனடியாக விண்ணப்பம் அனுப்பி, தனது வேலையைத் தொழிலாளர் மாற்றிக் கொள்ளலாம். இதற்குக் குறைந்தபட்சத் தகுதியாக, ஒரு தொழிலாளர் ஒரு நிறுவனம் அல்லது தொழில் வழங்குவோரிடம் குறைந்தது இரண்டு ஆண்டுகள் வேலை செய்திருக்க வேண்டும். (த)

# பழங்குடியினர் படையால் பாகிஸ்தானுக்குத் தலைவலி

பாகிஸ்தான், டிசெ.30

பாகிஸ்தானில் தலிபான்களை ஒடுக்க, உருவாக்கப்பட்ட பழங்குடியினர் படைகள் தற்போது அரசுக்கு எதிராகச் செயல்படுகின்றன.

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா தாக்குதல் நடத்திய பின் ஏராளமான தலிபான்கள் பாகிஸ்தானில் தஞ்சம் புகுந்தனர். பாகிஸ்தானின் வடமேற்கு பகுதியில் உள்ள பழங்குடி பகுதிகளில் இவர்கள் ஊடுருவியுள்ளனர். தலிபான்களால் பாகிஸ்தான் அரசுக்குத் தலைவலி ஏற்பட்டுள்ளதால் அவர்களை ஒடுக்கவும், விரட்டவும் பழங்குடி மக்களை போர் குழுவாக உருவாக்கி அவர்களுக்கு ஆயுதப் பயிற்சி அளித்துள்ளது பாகிஸ்தான் அரசு ராணுவம் நுழைய முடியாத பகுதிகளில், இந்த பழங்குடி மக்களை கொண்டு தலிபான்களுடன் மோதச் செய்து அதில் ஓரளவு வெற்றியும் பெற்றுள்ளது பாகிஸ்தான் அரசு. இதே போன்ற நடைமுறையை ஈராக்கிலும், ஆப்கானிஸ்தானிலும் அமெரிக்கா பின்பற்றியது.




பழங்குடி மக்களுக்கு ஆயுத பயிற்சி அளித்து ஆயுதங்களை அளித்து வரும் பாகிஸ்தான் தங்களுக்கு போதிய அளவுக்கு உதவவில்லை எனப் பழங்குடி வீரர்கள் அதிருப்தியடைந்து வருகின்றனர்.

தலிபான்களுக்கு எதிராகச் சண்டையிடும் போது தங்கள் உறவினர்களை இழக்க நேரிடுகிறது. அதுமட்டுமல்லாது அரசே தங்கள் மீது சந்தேகம் கொண்டு தங்கள் பகுதியைச் சோதனையிடுகிறது, என இந்த பழங்குடி வீரர்கள் புலம்பி வருகின்றனர். கணிசமான பணமும், ஆயுதங்களும் அளித்தால் தான் இனி அரசுடன் ஒத்துழைக்கப் போவதாக இந்தப் பழங்குடி தலைவர்கள் தெரிவித்துள்ளனர். ஏற்கனவே இது போன்ற பழங்குடி வீரர்கள் காஷ்மீரில் இந்திய ராணுவத்துக்கு எதிராகச் சண்டையிட பாகிஸ்தான் அரசு பயிற்சி அளித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிநவீன தொடர்பாடல் வசதியுடன் கம்பியில்லா கணினி சாதனம் Samsung Galaxy Tab அறிமுகம்



சம்சுங் எலக்ரோனிக்ஸ் நிறுவனம் தனது முதலாவது கம்பியில்லா கணினிச் சாதனமான Samsung Galaxy Tab இனை இலங்கையிலே அறிமுகம் செய்துள்ளது.

மிகவும் நவீன Android™ தொழிற்பாட்டுத் தொகுதி 2.2 உடன் வலுவூட்டப்பட்டுள்ள Samsung Galaxy Tab மிக உயர்ந்த தொடர்பாடல் யதார்த்தத்துடனான மொபைலாக ஆக்கப்பட்டுள்ளது. வெறுமனே ஒரு மொபைல் அல்லது பிரத்தியேகக் கணினி என்ற தன்மைக்கும் அப்பாலே முற்றிலும் புதியதொரு வகையாக இணைந்ததொரு தொழில்நுட்ப மட்டத்தை இது வழங்குகின்றது.

பாவனையாளர்கள் எங்கு இருந்தாலும் நுகர்ந்து, உருவாக்கி மற்றும் தொடர்பாடலை மேற்கொள்வதற்கு தற்போது இதன் மூலமாகப் புதிய வலிமையைப் பெறுகின்றனர்.

பாவனையாளர்கள் பயணித்துக்கொண்டிருக்கின்ற சமயங்களிலே அவர்களுக்கு மேலதிக கொள்ளளவுகளை வழங்கி Sam-sung இனது அனைத்து முன்னணி புத்தாக்கங்களையும் ஒருங்கே கொண்டுவந்து Samsung Galaxy Tab அவர்களுக்கு வழங்குகின்றது. நுகர்வோர் எங்கு சென்றாலும் பிரத்தியேகக் கணினியைப் போன்ற இணைய உலாவலுக்கு வழிகோலிக் கச்சிதமான 7 அங்குல முகத்திரை அளவுடன் மல்டிமீடியாவின் அனைத்து வடிவங்களையும் அவர்கள் அனுபவித்து இன்புற முடிகின்றது.

அவர்கள் பயணித்துக்கொண்டிருக்கும்போதே Word, Excel மற்றும் Power Point போன்ற அனைத்து Office ஆவணங்களையும் உருவாக்கி பதிப்புசெய்துகொள்ள முடிகின்றது.

அதனது மிகச் சிறந்த 7 அங்குல TFT-LCD முகத்திரைத் தோற்றத்தின் ஒவ்வொரு சதுர அங்குலத்தையும் மிக உயர்ந்த துல்லியத்துடன் வெளிக்கொணருவதுடன், திரைப்படங்களைப் பார்த்தல், புகைப்படங்களைப் பார்த்தல், மின்முறை வாசித்தல் அல்லது ஆவணங்களைப் பகிர்ந்துகொள்ளுதல் ஆகியவற்றிலே வியக்கவைக்கும் மொபைல் அனுபவத்தைத் தருகின்றது.

இவை எல்லாவற்றையும் விட பாவனையாளர்கள் அதியுச்சமாக்கப்பட்டுள்ள பாவனையாளர் உள்முகத்துடன் மின்னஞ்சல், குரல் மற்றும் வீடியோ அழைப்புகள், குறுஞ்செய்திச் சேவை/மல்டிமீடியா செய்திச்சேவை அல்லது சமூக வலையமைப்புக்கள் மூலமாகத் தொடர்ச்சியான தொடர்பாடல்களை மேற்கொள்ளவும் முடிகின்றது.

1,00,000 இற்கும் அதிகமான Android சந்தைப் பிரயோகங்களை Galaxy Tab இனூடாக அடைய முடியும். அது நுகர்வோர் தங்களது தேவைகளுக்கேற்றவாறு தமது Galaxy Tab இனை வடிவமைத்துக்கொள்ளக் கூடிய மகத்தான வாய்ப்பையும் அவர்களுக்கு வழங்குகின்றது.

மிகவும் நவீனமான Adobe Flash Player 10.1 இற்கு துணைபுரிகின்ற Samsung Galaxy Tab இணையத்தின் ஒவ்வொரு பக்கத்தினதும் வேகமான மற்றும் தொடர்ச்சியான பார்வைக்கு முற்றிலுமாகத் துணை போகின்றது.

# மலிவு விலை கார் நானோவுக்கு இந்த ஆண்டின் சர்வதேச விருது




இந்தியாவின் டாடா மோட்டார் நிறுவனத்தின் தயாரிப்பான நானோ மலிவு விலைக் காருக்கு சிறந்த வடிவமைப்புக்காக 2010 ஆம் ஆண்டின் சர்வதேச விருது வழங்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் சிகாகோ அதெனியம் அமைப்பு சிறந்த கட்டமைப்பு மற்றும் வடிவமைப்புக்காக ஆண்டுதோறும் விருது வழங்குகிறது.

மோட்டார் வாகனப் பிரிவில் குறைந்த விலையில் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட சிறிய ரக நானோ கார் 2010 ஆம் ஆண்டின் சர்வதேச விருதுக்குத் தேர்வானது.

நான்குபேர் வசதியாக அமர்ந்து செல்லும் வகையில் வடிவமைக்கப்பட்ட நானோ கார், 3.1 மீட்டர் நீளம், 1.5 மீட்டர் அகலம், 1.6 மீட்டர் உயரம் கொண்டது. தற்போது இந்தியாவில் 12 மாநிலங்களில் நானோ கார் கிடைக்கிறது. 2011ஆம் ஆண்டு மார்ச் மாதத்துக்குள் நாடு முழுவதும் கிடைக் கும் என்று அதன் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# ஜிமெயிலில் அற்புதமான புதிய வசதி

கூகுள் தேடுதல் சாதனம் மூலம் தேடலை மேற்கொள்கையில், நாம் ஏதேனும் எழுத்துப் பிழை ஏற்படுத்தினால், உடனே கூகுள் "Did you mean" எனக் கேட்டுச் சரியான எழுத்துக்களுடன் அந்தத் தேடலுக்கான சொல் அல்லது சொற்றொடர்களை அமைக்கும்.

அல்லது இப்படி அமைத்துத்தான் தேட விரும்புகிறீர்களா? என்று பொருள்பட, நமக்கு சில காட்டப்படும். பெரும்பாலும் கூகுள் அமைத் திடும் சொற்கள் சரியாகவே அமையும். இதன் மூலம் நாம் தவறு செய்தாலும் சரியான தேடலுக்கு இது உதவுகிறது.

இப்போது இந்த வகை உதவி ஜீமெயில் தேடலுக்கும் வழங்கப்படுகிறது.

இமெயில் இன்பாக்ஸ் அல்லது மற்ற பெட்டிகளில் நாம் காண விரும்பும் டெக்ஸ்ட் உள்ள இமெயில்களைப் பார்த்திட, சில சொற்களை அமைத்துத் தேடுகையில் இதுதானா நீங்கள் தேடுவது என வேறு சில சொற்களும் காட்டப்படுகின்றன.

சொற்களில் எழுத்துப் பிழை இருக்கையில் சரியான எழுத்துக்களுடன் சொற்கள் காட்டப்படுகின்றன. இதனால் நம் தவறுகள் திருத்தப்படுகின்றன. தேடல்கள் விரைவுபடுத்தப்படுகின்றன.





LOLC
அபிவிருத்திப் பாதையின் முன்னோடி

உங்கள்
வெளிநாட்டு நாணயத்திற்கு
புதியதோர் பரிமாணம்

- ஒரு மாத காலத்திற்கு பின் உங்களுடைய வைப்பினை எந்நேரத்திலும் மீளப்பெற்றுக்கொள்ளலாம்.
- முந்திய மீளப்பெறலுக்கு கழிவுகள் எதுவும் இல்லை
- வைப்புத்தொகையை புதிய வைப்புகளின் மூலம் அதிகரிக்கலாம்
- முதிர்வின் போது வட்டி வழங்கப்படும்

$(US) Up to 5.25% p.a £(GBP) Up to 5.00% p.a
€(EUR) Up to 5.00% p.a $(AU) Up to 5.50% p.a

* Conditions Apply

லங்கா ஓரிக்ஸ் பினான்ஸ் கம்பனி லிமிடெட்.
LOLC கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளில் ஒன்று
100/1 ஸ்ரீ. ஜெயவர்தனபுர மாவத்தை, இராஜகிரிய. தொலைபேசி 011 5880880

அழையுங்கள்: 0773815602

இலங்கை மத்திய வங்கியின் நிதி சபையின் கீழ் 2001 டிசம்பர் 13ல் உருவாக்கப்பட்ட நிதிக் கம்பனிகளின் சட்ட இல. 1988 இன் 78 இற்கு அமைவாக பதிவு செய்யப்பட்ட FITCH Ratings லங்கா லிமிடெட் இனால் லங்கா ஓரிக்ஸ் பினான்ஸ் கம்பனி லிமிடெட் இற்கு தரப்படுத்தலில் A-(lka) சான்று வழங்கப்பட்டுள்ளது.

Rediffusion Y&R


# மூன்றாவது ஆண்டாக ஜனசக்தியின் மாணவர் மெய்வல்லுநர் அனுசரணை 8 பேர் தெரிவு

ஜனசக்தி காப்புறுதி நிறுவனம் 2011ஆம் ஆண்டுக்கான வருடாந்த மெய்வல்லுநர் அனு சரணை நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பித்துள்ளது. இதன்மூலம் இந்த நிகழ்ச்சித்திட்டத்தை மூன்றாவது தொடர்ச்சியான ஆண்டாகவும் நிறுவனம் முன்னெடுக்கின்றது.

இத்திட்டத்தின் கீழ் 8 வெளியிடங்களைச் சேர்ந்த மாணவ மெய்வல்லுநர்கள் மாதாந்த அனுசரணையைப் பெறுவர். ஒவ்வொருவரினதும் தனிப்பட்ட திறமையைக் கருத்திற் கொண்டு ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் வழங்கப்படுவதுடன், 2011ஆம் ஆண்டில் அவர் கள் தெரிவுசெய்யப்படும் சர்வதேச போட்டி களுக்கான வெளிநாட்டுப் பயண உதவிகளும் வழங்கப்படும்.

இவற்றுக்கும் மேலதிகமாக அவர்களின் முயற்சிகளை மேம்படுத்துவதற்கான பயிற்சி வழிகாட்டல்கள், தொழில்நுட்பப் பயிற்சிகள் போன்றவையும் வழங்கப்படும்.

தெரிவுசெய்யப்பட்ட மெய்வல்லுநர்களின் விவரங்கள் வருமாறு:-

1. இஷாரா தயானந்த (18 வயது, ஃபெர் கியூசன் பெண்கள் பாடசாலை, இரத்தினபுரி - ஓட்ட வீராங்கனை/தடைதாண்டல் வீராங்கனை)
2. நயோமிகா ஜயதிலக (17 வயது, சுமனா பெண்கள் பாடசாலை, இரத்தினபுரி - 400 மீ. ஓட்டவீராங்கனை/தடைதாண்டல் வீராங்கனை)
3. மெதனி விக்கிரமநாயக்க (14 வயது, ஸ்ரீ சங்கமித்த பெண்கள் தேசியப் பாடசாலை, மாத்தளை - கனிஷ்ட ஓட்ட வீராங்கனை)
4. எஸ். தனுஷா (18 வயது, அளவெட்டி அருணோதயா கல்லூரி - கோலூன்றிப் பாய்தல்)
5. நிமேஷா சிறிவர்தன (15 வயது, கலென் பிந்துனுவெவ மத்திய கல்லூரி, கலென்பிந்துனுவெவ - உயரப் பாய்தல்)
6. சாமிகா ஜயமினி (17 வயது, சுமனா பெண்கள் பாடசாலை, இரத்தினபுரி - நெடுந்தூர ஓட்ட வீராங்கனை)
7. பபசரா சேனாநாயக்க (16 வயது, புனித ஜோசப் பெண்கள் கல்லூரி, கேகாலை - ஓட்ட வீராங்கனை)
8. துரைலிங்கம் பாலகுமாரன் (19 வயது, ஹாட்லி கல்லூரி, பருத்தித்துறை - கோலூ ன்றிப் பாய்தல்)

இஷாரா தயானந்த, நயோமிகா ஜயதிலக, சாமிகா ஜயமினி, நிமேஷா சிறிவர்தன, எஸ்.தனுஷா மற்றும் மெதனி விக்கிரமநாயக்க ஆகியோரின் அனுசரணை நீடிக்கப்பட்டுள்ளதுடன், 2010இல் தனது செயற்பாடுகள் மற்றும் பொருளாதார சவால்களைக் கருத்திற்கொண்டு துரைலிங்கம் பாலகுமாரன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.




ஜனசக்தி காப்புறுதியின் உயர் அதிகாரிகளுடன் (அமர்ந்திருப்பவர்கள்) 2011 ஆம் ஆண்டு மெய்வல்லுநர் அனுசரணைக்குத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களும், முன்னர் வழங்கப்பட்ட அனுசரணை நீடிக்கப்பட்ட மாணவர்களும் படத்தில் காணப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக மீனவர்களைச் சுட்டுக்கொன்ற இலங்கைக் கடற்படைக்குப் பயிற்சியா?

## இந்தியப் பாதுகாப்புச் செயலரின் அறிவிப்புக்கு சீமான் கண்டனம்

சென்னை, டிசெ.30

இலங்கை - இந்திய உறவை மேம்படுத்தும் வகையில் 2011 ஆம் ஆண்டு இரு நாட்டுக் கடற்படையினர் இணைந்து இலங்கைக் கடற்பரப்பில் பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளனர். இந்தியப் பாதுகாப்புச் செயலாளரின் இந்த அறிவிப்புக்கு நாம் தமிழர் கட்சி கடும் கண்டனங்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

இது குறித்து நாம் தமிழர் கட்சித்தலைவர் சீமான் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இலங்கை ஜனாதிபதியுடன் பேச்சு நடத்திய பின்பு இருநாட்டுக் கடற்படை உறவை மேம்படுத்தும் வகையில் 2011 ஆம் ஆண்டு இலங்கை - இந்திய கடற்படையினர் இணைந்து இலங்கைக் கடற்பரப்பில் பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளனர் என்றும் இலங்கைப் படையினருக்கு மேலும் பயிற்சிகள் அளிக்கப்படும் எனவும் இந்தியப் பாதுகாப்புச் செயலாளர் பிரதீப்குமார் தெரிவித்துள்ளார்.

இந்தியப் பாதுகாப்புச் செயலாளரின் இந்த அறிவிப்புக்கு நாம் தமிழர் கட்சி கடும் கண்டனங்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

இலங்கையில் கடந்த ஆண்டு நடைபெற்ற தமிழர்கள் படுகொலை தொடர்பாக இலங்கையின் மீது விசாரணை நடத்த சர்வதேசம் ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் நிலையில் - இது தொடர்பாக ஐ.நா. குழு இலங்கைக்குச் செல்ல உள்ள நிலையில் - இலங்கை கடற்படைக்கு பயிற்சி என்ற இந்திய பாதுகாப்புச் செயலாளரின் இந்த அறிவிப்பு உலகின் கவனத்தைத் திசை திருப்பும் உத்தியாகும்.

இங்கோ தமிழ்நாட்டில் இதுவரை 500 இற்கும் மேற்பட்ட மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டபொழுதும் இந்தியக் கடற்படை இதுவரை கைகட்டி வாய் பொத்தி வேடிக்கை மட்டுமே பார்த்துக் கொண்டிருக்கிறது.

தமிழ் மீனவன் படகிலும், இந்தியக் கடற்படையின் கப்பலிலும் ஒரே இந்திய தேசியக் கொடி பறந்தாலும் தமிழ் மீனவன் கொல்லப்படும் பொழுதோ இந்தியக் கடற்படை செயலற்று உல்லாசமாக இருக்கிறது.

இந்தியப் பாதுகாப்புச் செயலர் இலங்கையில் உள்ள நிலையில் கூட தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படை தாக்குதல் நடத்தியுள்ளது. ஆனால் நம் மீனவனைக் காப்பாற்ற எதிர்த்தாக்குதலோ, இலங்கைக் கடற்படைக்கு ஒப்புக்குக் கூட கண்டனமோ தெரிவிக்காத இந்தியக் கடற்படை யாரைக் காப்பாற்ற ரோந்துப் பயிற்சியை இணைந்து மேற்கொள்ளப் போகிறது?

ஏற்கனவே ஈழத்தமிழர்களைக் கொன்றதற்கு மறைமுகமாக ஆயுதங்கள் உட்பட அனைத்து உதவியையும் செய்த இந்திய அரசு இன்னும் மீதமிருக்கும் அங்குள்ள தமிழர்களையும், இங்குள்ள தமிழ் மீனவனையும் கொல்வதற்கு இலங்கைக்கு தொடர்ந்து ஆலோசனை வழங்கப் போகின்றதா என்று தெரியவில்லை. இந்தியக் கடற்படையின் தமிழர் விரோதப்போக்கு வெந்த எமது புண்ணில் வெந்நீரைப் பாய்ச்சுவதாக இருக்கிறது.

- இப்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜோஷி அல்லது சுஷ்மா பதவி விலகவேண்டும்

## காங்கிரஸ் கட்சி வற்புறுத்து

டில்லி,டிசெ.30

2ஜி அலைக்கற்றை விற்பனை விவ காரத்தை நாடாளுமன்றக் கூட்டுக்குழு தான் விசாரிக்க வேண்டும் என்று கோரும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா ஸ்வராஜ், அந்தக் கருத்தை ஏற்காமல் விசாரணையைத் தொடங்கிய நாடாளுமன்ற பொதுக்கணக்குக் குழுத் தலைவர் முரளி மனோகர் ஜோஷி ஆகியோரில் ஒருவர் இராஜினாமாச் செய்யவேண்டும்.

- இவ்வாறு காங்கிரஸின் செய்தித் தொடர்பாளர் ஷகீல் அகமது தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு -

இந்த விவகாரத்தை பொதுக் கணக்குக் குழு (பி.ஏ.சி.) விசாரித்தாலே போதும் என்று அரசு தரப்பு கூறிவருகிறது. ஆனால் முக்கிய எதிர்க்கட்சியான பாரதிய ஜனதா கட்சியும் பிற கட்சிகளும் நாடாளுமன்றக் கூட்டுக்குழுதான் (ஜே.பி.சி.) விசாரிக்க வேண்டும் என்று அடம் பிடிக்கின்றன.

இந்த நிலையில் பொதுக் கணக்குக் குழுவின் தலைவரும் பா.ஜ.கவின் மூத்த தலைவருமான முரளி மனோகர் ஜோஷி இந்த விவகாரத்தை விசாரிக்கத் தொடங்கி விட்டார். இந்தக்குழு முன் ஆஜராகி சாட்சியம் அளிக்கவும் தயார் என்று பிரதமர் மன்மோகன் சிங் பகிரங்கமாக அறிவித்துவிட்டார்.

இந்த நிலையிலும் நாடாளுமன்ற கூட்டுக்குழு வேண்டும் என்ற கோரிக்கையை பா.ஜ.க. தலைவர்கள் விடாப்பிடியாக வலியுறுத்துகின்றனர்.




எனவே அந்தக் கட்சித் தலைமை தார்மீக அடிப்படையில் இரண்டு முடிவில் ஏதாவது ஒன்று தவறானது என்று ஒப்புக் கொண்டு, இரு தலைவர்களில் ஒருவரை இராஜினாமா செய்யச் சொல்ல வேண் டும்.

- இப்படி அவர் தெரிவித் தார்.

# ராசா, நீரா ராடியாவிடம் மீண்டும் விசாரணை நடத்த சி.பி.ஐ. முடிவு



டில்லி, டிசெ. 30

2-ஜி அலைக்கற்றை ஒதுக்கீட்டு முறைகேடு தொடர்பாக தொலைத் தொடர்புத் துறை முன்னாள் அமைச்சர் ஆ.ராசா மற்றும் அரசியல் தரகர் நீரா ராடியாவிடம் மீண்டும் விசாரணை நடத்த சி.பி.ஐ. முடிவு செய்துள்ளது எனத் தெரிகிறது.

ராசாவிடம் கடந்த வெள்ளி, சனிக்கிழமைகளில் மொத்தம் 16 மணி நேரம் விசாரணை நடத்தப்பட்டது.

இந்த விசாரணையில் சில கேள்விகளுக்கு ராசா திருப்தியான பதில் அளிக்காததால் மீண்டும் அவர் விசாரிக்கப்படலாம் என்று தெரிகிறது.

ராடியாவின் தொலைபேசி உரையாடல் குறித்தும் ராசாவிடம் விளக்கம் கேட்க சி.பி.ஐ. முடிவு செய்துள்ளது எனத்தெரிகிறது.

அரசியல் தரகர் நீரா ராடியாவிடம் கைப்பற்றிய கணினியில் உள்ள விவரங்கள் தொடர்பாக மீண்டும் விசாரணை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது எனவும் கூறப்படுகிறது.ராடியாவிடம் கடந்த செவ்வாய்க் கிழமை விசாரணை நடத்தப்பட்டது.

இவர்கள் இருவர் தவிர முன்னாள் அதிகாரிகள் மற்றும் ஹவாலா தரகர்களிடமும் விசாரணை நடத்த முடிவு செய் யப்பட்டுள்ளது.



இந்தியாவில் சிறைவைக்கப்பட்டிருந்த, பாகிஸ்தானைச் சேர்ந்த 76 கைதிகளின் தண்டனைக் காலம் முடிந்து விடுவிக்கப்பட்டனர். அட்டாரி வாகா எல்லை வழியாக தாயகம் செல்வதற்கு அமிர்தசரசிலிருந்து அவர்கள் புறப்பட்டனர்.

# பா.ஜ.க. தலைவர்களிடையே கருத்து வேறுபாடு மக்களவை கூட்டுக் குழு விவகாரத்தில் திருப்பம்

டில்லி,டிசெ.30

ஸ்பெக்ட்ரம் முறைகேட்டை நாடாளுமன்றக் கூட்டுக் குழு விசாரிக்க வேண்டும் என்ற பா.ஜ.கட்சித் தலைவர்களின் நிலைப்பாட்டில் திடீர் திருப்பம் ஏற்பட்டுள்ளது. இந்த விவகாரத்தில் பா.ஜ.க. மூத்த தலைவர்கள் முரளிமனோகர் ஜோஷிக்கும், சுஷ்மா சுவராஜுக்கும் இடையே ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடு காரணமாக கட்சிக்குள் மோதல் முற்றியுள்ளது.

2 ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டில் நடந்த முறைகேடு காரணமாக அரசுக்கு ஒரு லட்சத்து 76 ஆயிரம் லட்சம் கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது என மத்திய கணக்குக் குழு அலுவலகம் அளித்த அறிக்கை, தேசிய அரசியலில் பெரும் புயலைக் கிளப்பியது. இதன் காரணமாக, மத்திய தொலைத் தொடர்புத்துறை அமைச்சராக இருந்த ராஜா, பதவி விலகினார். இருந்தாலும், எதிர்க்கட்சியினர் தங்கள் போராட்டத்தை தொடர்ந்து தீவிரப்படுத்தினர்.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடர், வரும் பெப்ரவரி மூன்றாம் வாரத்தில் தொடங்கவுள்ளது. பட்ஜெட் கூட்டத்தொடரிலும், நாடாளுமன்றக் கூட்டுக் குழு பிரச்சினையை எழுப்ப எதிர்க் கட்சிகள் திட்டமிட்டுள்ளன.

இதனால், பட்ஜெட் கூட்டத்தொடரும் முடக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதைத் தவிர்ப்பதற்கான முயற்சியில் லோக்சபா சபாநாயகர் மீராகுமார் ஈடுபட்டுள்ளார். நாடாளுமன்றக் கூட்டத் தொடரை சுமுகமாக நடத்துவதற்காக இன்று டில்லியில் அனைத்துக் கட்சிக் கூட்டத்துக்கு அவர் அழைப்பு விடுத்துள்ளார். இந்தக் கூட்டத்தில் பங்கேற்கப் போவதாக பா.ஜ.க. நேற்றுமுன்தினம் அறிவித்தது.

இதற்கிடையே, ஸ்பெக்ட்ரம் விவகாரம் தொடர்பாக பா.ஜ.க. மூத்த தலைவர்களுக்கு இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது.

நாடாளுமன்ற பொதுக் கணக்கு குழு தலைவரும், பா.ஜ.க. மூத்த தலைவருமான முரளிமனோகர் ஜோஷி கூறியவை வருமாறு -

பொதுக் கணக்கு குழுவின் அதிகாரம், சில வரம்புகளுக்கு உட்பட்டது எனக் கூறுவது சரியல்ல. ஸ்பெக்ட்ரம் விவகாரம் தொடர்பாக விரிவான விசாரணையை பொதுக் கணக்கு குழுவால் நடத்த முடியும். குறிப்பாக, இந்த விவகாரத்தில் கடந்த 2001இல் இருந்து மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகள் குறித்து விசாரிக்க முடியும். பொதுக் கணக்கு குழு முன், நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்கத் தயாராக இருக்கிறார் என பிரதமர் மன்மோகன் சிங் கடிதம் எழுதியுள்ளார்.

இதுகுறித்து சரியான நேரத்தில், சரியான முடிவு எடுக்கப்படும் - என்றார்.

ஆனால், பா.ஜ.கவின் மற்றொரு மூத்த தலைவரும், லோக்சபா எதிர்க் கட்சி தலைவருமான சுஷ்மா சுவராஜ், முரளிமனோகர் ஜோஷி கூறியதற்கு முற்றிலும் மாறான கருத்தைத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் இணையதளத்தில் தெரிவித்துள்ளவை வருமாறு -

ஸ்பெக்ட்ரம் முறைகேட்டை நாடாளுமன்றக் கூட்டுக் குழு விசாரிக்க வேண்டும் என்ற எங்கள் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை. பொதுக்கணக்கு குழுவின் அதிகாரம் வரைமுறைகளுக்கு உட்பட்டது. கணக்கு குறித்த விவரங்களை மட்டுமே பொதுக் கணக்கு குழு விசாரிக்க முடியும். நாடாளுமன்றக் கூட்டுக்குழுதான், அரசு பொறுப்பாகச் செயற்பட்டுள்ளதா என்பதை விசாரிக்க முடியும். எனவே, நாடாளுமன்றக் கூட்டுக் குழு விசாரித்தால்தான், ஸ்பெக்ட்ரம் முறைகேடு குறித்த மர்மங்கள் வெளிச்சத்துக்கு வரும். பொதுக் கணக்கு குழு முன் ஆஜராக தயார் என பிரதமர் கூறியுள்ளதில் எந்த அர்த்தமும் இல்லை. பொதுக் கணக்கு குழுவால் அமைச்சர்களையே நேரில் அழைத்து விசாரிக்க முடியாது என்கிறபோது, பிரதமரை எப்படி நேரில் அழைத்து விசாரிக்க முடியும்.

- இப்படி அவர் தெரிவித்துள்ளார்.

ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் பா.ஜ.க. மூத்த தலைவர்களுக்கு இடையே ஏற்பட்டுள்ள இந்த மோதல், பா.ஜ.கவுக்குள் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தக் குழப்பத்தால் , சபாநாயகர் நடத்தும் கூட்டத்தில் முட்டுக்கட்டை நிலை முடிவுக்கு வரும் வாய்ப்பு உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமநாதன் கல்லூரி வெற்றி

வலி.வடக்கு, டிசெ. 30

இணுவில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியின புதிய கூடைப்பந்தாட்டத் திறப்பு விழாவையொட்டி நடைபெற்ற நட்பு ரீதியான கூடைப்பந்தாட்டப் போட்டியில் இராமநாதன் கல்லூரி வெற்றி பெற்றது.

நட்பு ரீதியான போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் இராமநாதன் கல்லூரி அணியும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகிய ஆரம்பத்தில இரு அணிகளும் சம பலத்துடன் விளையாடிய போதும் முதல் பாதி ஆட்ட நிறைவில் இராமநாதன் கல்லூரி அணி 14:10 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலையில் இருந்தது.

இரண்டாவது பாதி ஆட்ட முற்பாதியில் கொக்குவில் இந்துக் கல்லூரி முன்னிலை பெற்றபோதும் ஆட்ட நிறைவில் இராமநாதன் கல்லூரியின் ஆதிக்கம் மைதானத்தில் காணப்பட்டது.

ஆட்ட நிறைவில் இராமநாதன் கல்லூரி 25:19 என்ற புள்ளிகள் என்ற அடிப்படையில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை வென்றது. (த-86)

# லலித் மோடி குறித்த பிரச்சினையில் இந்திய கிரிக்கெட் சபைக்கு பின்னடைவு

மும்பை, டிச. 29

லலித் மோடி மீதான ஊழல் குறித்த முறைப்பாட்டை விசாரிக்க, அமைக்கப்பட்ட குழுவின் நடவடிக்கைகளுக்கு விதிக்கப்பட்ட இடைக்காலத் தடையை நீக்க வேண்டும் என்ற இந்திய கிரிக்கெட் சபையின் கோரிக்கையை மும்பை உயர்நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

ஐ.பி.எல். அமைப்பின் முன்னாள் தலைவரான லலித் மோடி, பலகோடி ரூபாய் ஊழல் செய்தார் என்ற குற்றச்சாட்டு எழுந்தது.

இதையடுத்து, ஐ.பி.எல். தலைவர் பதவியிலிருந்து மோடி நீக்கப்பட்டார். இவர் மீதான முறைப்பாட்டை விசாரிக்க சிரயு அமீன், அருண் ஜெட்லி, ஜோதிராதித்யா சிந்தியா அடங்கிய 3 பேர் கொண்ட ஒழுங்கு நடவடிக்கைக் குழுவை இந்திய கிரிக்கெட் அமைத்தது.

இந்தக் குழுவின் நடவடிக்கையை எதிர்த்து மும்பை உயர்நீதிமன்றில் மோடி சார்பாக வழக்குத் தொடுக்கப்பட்டது. இதனை விசாரித்த மும்பை உயர்நீதிமன்றம், ஒழுங்கு நடவடிக்கைக் குழுவின் செயற்பாடுகளுக்கு இடைக்காலத் தடை விதித்தது.

இந்தத் தடையை நீக்குமாறு கோரி இந்தியக் கிரிக்கெட் சபை சார்பான மேன்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது. இதனை விசாரித்த மும்பை உயர்நீதிமன்றம், தள்ளுபடி செய்ய உத்தரவிட்டது.

இதனால், மோடி குறித்த பிரச்சினையில், இந்தியக் கிரிக்கெட் சபைக்குப் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே, ஐ.பி.எல். அணிகளான ராஜஸ்தான் றோயல்ஸ், பஞ்சாப் கிங்ஸ் லெவன் அணிகள் விடயத்திலும் இந்தியக் கிரிக்கெட் சபைக்குப் பெரும் பின்னடைவு ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

# சாதிக்கக் காத்திருக்கும் இந்தியாவின் சோம்தேவ்



சென்னை, டிசெ.30

சென்னை ஓபன் ரெனிசில் சாதிக்கத் தயாராக இருக்கிறார் இந்தியாவின் இளம் வீரர் சோம்தேவ் தேவ்வர்மன்.

சென்னையில் அடுத்த மாதம் சென்னை ஓபன் ரெனிஸ் தொடர் (ஜனவரி 3ஆம் திகதி தொடக்கம் 9 திகதிவரை) நடக்க உள்ளது. இதில், உலகின் முன்னணி வீரர்கள் கலந்து கொள்கின்றனர். இந்தியா சார்பில் பங்கேற்கும் சோம்தேவ் மீது இம்முறை அதிக எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

அசாமில் பிறந்த இவர், சென்னையில் தான் அதிக காலம் வளர்ந்தார். கடந்த 2009 இல் சென்னை ஓபன் தொடரின் இறுதி ஆட்டம் வரை முன்னேறினார். இந்த ஆண்டு கொமன்வெல்த் மற்றும் ஆசிய விளையாட்டில் தங்கம் வென்ற இவர் நல்ல நிலையில் உள்ளார். எனவே, இவர் சம்பியன் பட்டம் வெல்ல வாய்ப்பு உள்ளது. (த)

# சச்சினுக்கு மும்பையில் பாராட்டுவிழா




டெஸ்ட் போட்டியில் 50 சதம் அடித்துள்ள அதிரடித் துடுப்பாட்ட வீரர் சச்சினுக்குப் பாராட்டு விழா நடத்த மும்பை மாநகராட்சி முடிவு செய்துள்ளது.

தென்னாபிரிக்கா தொடர் முடிந்த பிறகு பாராட்டு விழாவுக்கான திகதியை ஒதுக்குமாறு வேண்டுகோள் விடுத்து மும்பை மாநகராட்சி ஆணையாளர் ஸ்வாதின் சத்ரியா, சச்சினுக்கு விரைவில் கடிதம் எழுதவுள்ளார்.

2010 ஆம் ஆண்டில் இருந்தே சச்சினின் சாதனையைப் பாராட்டி நடத்தப்பட இருந்த பல விழாக்கள் இதுவரை நிலுவையில் உள்ளன என மாநகராட்சி அதிகாரிகள் தெரிவித்தனர்.

'சச்சின் 50 ஆவது சதம் அடித்தபோது அவருக்கு ஆணையாளர் வாழ்த்துத் தெரிவித்ததோடு, பாராட்டு விழாவுக்குத் திகதி ஒதுக்குமாறும் கேட்டுள்ளார். மும்பை திரும்பியவுடன் திகதியைச் சொல்வதாகச் சச்சின் தெரிவித்துள்ளார் என்று கூடுதல் ஆணையாளர் மனிஷா மாய்ஸ்கர் தெரிவித்தார். (த)






நியூஸிலாந்தில அடுத்த வாரம் நடைபெறவுள்ள ஏ.எஸ்.பி. ரெனிஸ் தொடரில் பங்கேற்க, ஆக்லாந்து வந்த ரஷ்ய ரெனிஸ் நட்சத்திரம் மரியா ஷரபோவா

# 'சிலிப்' திசையில் பிடி இலகுவானது அல்ல

## — டிராவிட்



'சிலிப்' திசையில் பிடி எடுப்பது இலகுவானது இல்லை என இந்திய அணியின் வீரர் ராகுல் டிராவிட் தெரிவித்துள்ளார்.

டெஸ்ட் போட்டிகளில் 'சிலிப்' திசையில் 200 பிடி எடுப்புகள் தொடர்பாக அவர் அளித்துள்ள பேட்டி ஒன்றிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்கா மற்றும் இந்தியா அணிகளுக்கு இடையிலான 2 ஆவது டெஸ்ட் போட்டி டர்பனில் நடைபெற்று வருகின்றது. இரண்டாம் நாளான நேற்றுமுன்தினம் ஹர்பஜன் பந்து வீச்சில் ஸ்டேல் ஸ்டெயின் 'சிலிப்' திசையில் டிராவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இதன் மூலம் டிராவிட் டெஸ்ட் போட்டிகளில் சிலிப் திசையில் 200 பிடிகளை பிடித்த முதல் வீரர் என்ற பெருமையைப் பெற்றார். (த)

# கொச்சி அணிக்கு ஜெப் லாசன் பயிற்சியாளராகும் வாய்ப்பு

நான்காவது ஐ.பி.எல்., தொடரில் புதியதாக பங்கேற்கும் கொச்சி அணிக்கு, பாகிஸ்தான் அணியின் முன்னாள் பயிற்சியாளர் ஜெப் லாசன் பயிற்சியாளராக நியமிக்கப்படலாம் என்று தெரிகிறது. அணியை நிர்வகிப்பது தொடர்பாக, உரிமையாளர்களுக்குள் ஏற்பட்ட மோதலில் இருந்து, சமீபத்தில் தான் கொச்சி மீண்டது. இந்நிலையில் விரைவில் ஆரம்பமாகவுள்ள நான்காவது தொடருக்காகப் பயிற்சியாளர் தேர்வில் இறங்கியுள்ளனர் நிர்வாகத்தினர்.

இதுகுறித்து கேரள கிரிக்கெட் சங்கச் செயலர் டி.சி.மாத்யூ கூறுகையில், பயிற்சியாளர் போட்டியில் ஐந்து பேர் இருந்தாலும், இதில் ஜெப் லாசன் முதலிடத்தில் உள்ளார். இருப்பினும் இதுகுறித்து அணி உரிமையாளர்கள் தான் இறுதி முடிவு எடுப்பார்கள்- என்றார்.(த)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தென்னாபிரிக்காவை வீழ்த்தியது இந்தியா



கலிஸின் விக்கெட்டை வீழ்த்திய மகிழ்ச்சியில் இந்திய வீரரான ஸ்ரீசாந்த்...

டர்பன், டிச. 30

தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய அணி வெற்றிபெற்றுள்ளது.

இந்திய - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் தென்னாபிரிக்காவில் நடைபெற்றுவருகிறது.

முன்னர் நடந்து முடிந்த முதல் போட்டியில் தென்னாபிரிக்க அணி அபார வெற்றி பெற்றிருந்தது.

இந்நிலையில், இரண்டாவது போட்டி டர்பனில் கடந்த ஞாயிறன்று ஆரம்பமாகியது.

முத்லில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுகளையும் இழந்து 205 ஓட்டங்களையே சேர்த்தது.

தொடர்ந்து தனது இனிங்ஸை ஆரம்பித்த தென்னாபிரிக்க அணி, இந்திய பந்துவீச்சைத் தாக்குப் பிடிக்க முடியாமல் 131 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

பின்னர் இந்திய அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 228 ஓட்டங்களைச் சேர்த்தது.

பின்னர், 303 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கி நேற்றுமுன்தினம் மாலை தனது ஆட்டத்தைத் தொடங்கிய தென்னாபிரிக்க அணியை இந்தியப் பந்துவீச்சாளர்கள் மிரட்டினர்.

ஸ்மித் (37), பீற்றர்சன் (26), அம்லா (16) ஆகியோர் தம்மாலான ஓட்டங்களைச் சேர்த்து ஆட்டமிழந்து சென்றனர். நேற்றுமுன்தினம் ஆட்ட நேரம் முடியும்போது தென்னாபிரிக்க அணி 111 ஓட்டங்களுக்குள் 3 விக்கெட்டுகளை இழந்து தடுமாற்றதுடன் காணப்பட்டது.

கலிஸ் 12 ஓட்டங்களுடனும் டி வில்லியர்ஸ் 17 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

மீண்டும் நேற்றுத் தனது இன்னிங்ஸைத் தொடர்ந்த தென்னாபிரிக்க அணி, இந்தியப் பந்துவீச்சுக்கு முகம்கொடுக்க முடியாமல் தடுமாறியது. நேற்றுமுன்தினம் 12 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்த கலிஸ், நேற்று மேலதிகமாக 5 ஓட்டங்களைச் சேர்த்து மொத்தமாக 17 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்து ஆட்டமிழந்தார்.

அவரைத் தொடர்ந்து டி வில்லியர்ஸ் 33, பௌச்சர் (1), ஸ்ரைன் (10), ஹரிஸ் (7), மோர்கல் (20), டிசொட்சோபே (0) ஆகியோரும் ஆட்டமிழந்து சென்றனர்.

இறுதியில் தென்னாபிரிக்க அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 215 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இதன்மூலம் 87 ஓட்டங்களால் இந்திய அணி வெற்றிபெற்றது.

பிரின்ஸ் 39 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தார்.

இந்திய அணி சார்பாக பந்துவீச்சில், ஸ்ரீசாந்த், சஹீர்கான் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும், ஹர்பஜன் சிங் 2 விக்கெட்டுகளையும் இஷாந்த் ஷர்மா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக இந்திய வீரரான லக்ஷ்மன் தெரிவுசெய்யப்பட்டார்.

இந்தப் போட்டியில் வெற்றிபெற்றதன் மூலம் 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரை 1-1 என்ற கணக்கில் இந்திய அணி சமனிலைப்படுத்தியுள்ளது. அடுத்த போட்டி எதிர்வரும் 2ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

# சரியான முறையில் பதிலடிகொடுத்து ஆஸியை பழிதீர்த்தது இங்கிலாந்து

மெல்பேர்ண், டிச. 30

மெல்பேர்ண் களத்தில் நடந்துவந்த நான்காவது ஆஷஸ் சமரில், இங்கிலாந்து அணி ஓர் இனிங்ஸ் மற்றும் 157 ஓட்டங்களால் ஆஸ்திரேலியாவை வீழ்த்தி, மூன்றாவது போட்டியில் கண்ட தோல்விக்குச் சரியான அடிகொடுத்து தக்க முறையில் பழிதீர்த்துக்கொண்டது.

இங்கிலாந்து - ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான 5 போட்டிகளைக் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடர் ஆஸ்திரேலியாவில் நடைபெற்றுவருகிறது.

முன்னர் நடந்து முடிந்த 3 போட்டிகளின் அடிப்படையில் 1-1 என்ற கணக்கில் தொடர் சமனிலையில் உள்ளது.

இந்நிலையில், தொடரில் முன்னிலை வகிப்பது யார் என்பதைத் தீர்மானிக்கும் போட்டியாக நான்காவது மோதல் கடந்த ஞாயிறன்று ஆரம்பமாகியது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி, 42.5 ஓவர்களில் 98 ஓட்டங்களுக்குள் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து தனது இனிங்ஸை சுருட்டிக்கொண்டது.

பின்னர் தனது இனிங்ஸைத் தொடங்கிய இங்கிலாந்து அணி, சகல விக்கெட்டுகளையும் இழந்து 513 ஓட்டங்களைக் குவித்தது.

பின்னர், 415 ஓட்டங்கள் பின்னிலையுடன் தனது



இரண்டாவது இன்னிங்ஸைத் தொடங்கிய ஆஸ்திரேலிய அணி, இங்கிலாந்து அணியின் பழிவாங்கல் நடவடிக்கையைத் தடுக்க முடியாமல் திணறியது.

பேர்த் டெஸ்டில் ஆஸ்திரேலியாவிடம் வாங்கிய பலத்த அடிக்கு மெல்பேர்ண் களத்தில் வைத்து இங்கிலாந்து கடுமையாகத் தாக்கியது.

இதனால், நேற்றுமுன்தினம் ஆட்ட நேரம் முடியும்போது ஆஸ்திரேலிய அணி, 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 169 ஓட்டங்களை மட்டுமே பெற்று, இனிங்ஸ் தோல்வி நோக்கி நகர்ந்துகொண்டிருக்கிறது.

ஹடின் 11 ஓட்டங்களுடனும், ஜோன்சன் 6 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

மீண்டும் நேற்று 246 ஓட்டங்கள் பின்னிலையுடன் தனது ஆட்டத்தைத் தொடர்ந்த ஆஸ்திரேலிய அணி, ஆட்டம் ஆரம்பித்த சிறிது நேரத்திலேயே ஜோன்சனை (6) இழந்தது. அவரைத் தொடர்ந்து வந்த சிடில் (40), ஹில்பனாஸ் (0) ஆகியோரும் ஆட்டமிழந்து செல்ல, ஆஸ்திரேலிய அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 258 ஓட்டங்களைப் பெற்றது.

இதனடிப்படையில் இங்கிலாந்து அணி, ஓர் இன்னிங்ஸ் மற்றும் 157 ஓட்டங்களால் வெற்றிபெற்று, மூன்றாவது போட்டியில் கண்ட தோல்விக்கு தக்க முறையில் பழிதீர்த்துக்கொண்டது.

இங்கிலாந்து அணி சார்பாக பந்துவீச்சில் பிரெஸ்னன் 4 விக்கெட்டுகளையும், ஸ்வான் 2 விக்கெட்டுகளையும், அன்டர்சன், டிரெம்லெட் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக இங்கிலாந்து வீரரான டிராட் தெரிவுசெய்யப்பட்டார்.

இந்தப் போட்டியில் வெற்றிபெற்றதன் மூலம் 5 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் 2-1 என்ற கணக்கில் இங்கிலாந்து முன்னிலை பெற்றுள்ளது.

இதனால், சொந்த மண்ணில் இம்முறை ஆஷஸ் தொடரைக் கைப்பற்றமுடியாத நிலையில் ஆஸ்திரேலிய அணி உள்ளது.




## ஹர்பஜன், யுவராஜ் இருவரும் முழுமையாக வரி கட்டவில்லை

### உடன் செலுத்துமாறு உத்தரவு



லூதியானா, டிச. 30

இந்தியக் கிரிக்கெட் அணியின் அதிரடித்துடுப்பாட்ட வீரரான யுவராஜ் சிங் மற்றும் முன்னணி சுழற்பந்து வீச்சாளரான ஹர்பஜன்சிங் இருவரையும் சேவை வரியை முழுமையாகச் செலுத்துமாறு இந்திய மத்திய கலால் மற்றும் சுங்க வரித் திணைக்களத் தலைவர் ஹிரோசி உத்தரவிட்டுள்ளார்.

ஹர்பஜன்சிங் சுமார் 8 கோடி ரூபாவும், யுவராஜ் சிங் சுமார் 4 கோடி ரூபாவும் சேவை வரி செலுத்தவேண்டியுள்ளனர்.

இந்த சேவை வரியை இருவரும் உடனடியாகச் செலுத்துமாறு இந்திய மத்திய கலால் மற்றும் சுங்கவரித் திணைக்களத் தலைவர் ஹிரோசி உத்தரவிட்டுள்ளார்.

சேவை வரியை கட்டத் தவறினால் இவர்கள் மீது வழக்குத் தொடரப்படக்கூடிய நிலை ஏற்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

# பொண்டிங்கின் செயலுக்கு ஐ.சி.சி. சரியான நடவடிக்கை எடுக்கவில்லை—சப்பல்

மெல்பேர்ண், டிச. 30

நடுவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட பொண்டிங்குக்கு ஐ.சி.சி. சரியான தண்டனையை வழங்கத் தவறிவிட்டது. அவருக்கு அபராதம் விதித்தமை போதாது; தடையும் விதித்திருக்கவேண்டும்.

- இவ்வாறு ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவரும், தொலைக்காட்சி வர்ணனையாளருமான இயன் சப்பல் கூறியுள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிரான 4ஆவது டெஸ்ட் போட்டியின்போது ஆஸ்திரேலிய அணித்தலைவர் ரிக்கிபொண்டிங் நடுவர் அலிம்தாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டிருந்தார்.

இங்கிலாந்து வீரர் பீற்றர்சன் விளையாடிக் கொண்டிருந்தபோது பந்து துடுப்பு மட்டையில் பட்டு பிடியெடுப்புச் செய்யப்பட்டது. இதற்கு பொண்டிங் ஆட்டமிழப்புக் கோரினார். ஆனால், பாகிஸ்தான் நடுவர் அலிம்தார் ஆட்டமிழப்பு இல்லை என்று அறிவித்தார்.

இதனால், அதிருப்தியடைந்த பொண்டிங் மற்றும் ஆஸ்திரேலிய வீரர்கள் 3ஆவது நடுவரை நாடும்படி முறையிட்டனர். 3ஆவது நடுவரும் பீற்றர்சன் ஆட்டமிழக்கவில்லை என்று அறிவித்தார்.

இதனால், பொண்டிங் ஆத்திரம் அடைந்து நடுவர் அலிம்தாருடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

பொண்டிங்கின் இந்தச் செயல், வீரர்களின் நடத்தை விதிமுறைகளை மீறிய செயலாகும். இதைத் தொடர்ந்து போட்டியிலிருந்து கிடைக்கும் வருவாயில் 40 சதவீதம் அபராதத்தை ஐ.சி.சி. விதித்தது.

இதுகுறித்துக் கருத்துக் கூறும்போதே இயன்சப்பல் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இங்கிலாந்துக்கு எதிரான நான்காவது போட்டியின்போது பொண்டிங் நடந்துகொண்ட செயலுக்காக அவருக்குத் தடைவிதித்திருக்கவேண்டும்.

நடுவரின் முடிவை எதிர்த்து வாக்குவாதம் செய்வதற்கு அனுமதி இல்லை என்பதுதான் விதி. பொண்டிங் நடந்து கொண்ட செயல் ஏற்க முடியாது. அவர் இப்படி நடந்து கொள்வது இது முதல் முறை இல்லை.

பொண்டிங்கிற்கு அபராதம் விதித்தது போதுமானது இல்லை. அவருக்குத் தடை விதித்திருக்க வேண்டும். ஐ.சி.சி. சரியான நடவடிக்கை எடுக்கவில்லை. இவ்வாறு இயன்சப்பல் கூறினார்.

இந்தச் சம்பவத்திற்காக பொண்டிங் மன்னிப்பு கோரியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
## 2007ஆம் ஆண்டு மாணவர்களுக்கான சுற்றுலாவும் ஒன்றுகூடலும்

மேற்படி நிகழ்வானது எதிர்வரும் 01.01.2011ஆம் நாள் சனிக்கிழமை காலை 9 மணியளவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இடம்பெற இருப்பதால் (2007ஆம்) ஆண்டு மாணவர்கள் தவறாது சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மேலதிக விபரங்களுக்கு :
0778191307,
0773626882,
0772209427 (108181)

2007 பழைய மாணவர்கள்,
யாழ். இந்துக்கல்லூரி.

## மரண அறிவித்தல்

### திருமதி முத்துக்குமாரசாமி சீதாலட்சுமி
(பருத்தித்துறை)

புலோலி மேற்கு தம்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் வதி விடமாகவும் கொண்ட திருமதி முத்துக்குமாரசாமி சீதாலட்சுமி நேற்று (29. 12.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சட்டத்தரணி K.S.முத்துக்குமாரசாமியின் அன்பு மனைவியும், பிரபா, நிருபா, நிருபரன், கௌரி, சிங்காரவேல் ஆகியோரின் பாசமிகு தாயாரும், தங்கராஜாவின் அன்பு மாமியாரும் தனுசன், கீர்த்தனா, பிரவீனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2010) வியாழக்கிழமை காலை 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தம்பசிட்டி வீதி,
பருத்தித்துறை. (சி/573778)

தகவல்:
பிள்ளைகள்.

## தொழிற் பயிற்சிகள்

வெளிநாடுகளில், உள்நாட்டு நிறுவனங்களில் தொழில் நுட்பத்துறையில் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கும், சுய மாக தொழில் ஆரம்பிப்பதற்கும் ஏற்றமுறையில் பயிற்சியளிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும்.

* Mobile Phone Repairing, Basic Electronics, Software, Phone circuit, Flashing, Hard ware, Basic Computer Hardware — காலம் :- 3 மாதம்
* றேடியோ - ரெலிவிசன் றிப்பியரிங் றேடியோ CD, DVD Player ரெலிவிசன் Monitor வீடியோ டெக் UPS — காலம் :- 9 மாதம்
* எலக்ரிக்கல் வயறிங் & றிவைண்டிங், வீட்டு மின்சுற்றுவேலை Motor, Fan, Transformer வீட்டுமின் பொருள்கள் திருத்துதல். றீ வைண்டிங் செய்தல் — காலம் :- 6 மாதம்
* எயர்கொண்டிசனிங் Window Ac Refrigerator Splite Ac Deep Frizer — காலம் :- 6 மாதம்
* Computer Hardware Engineering — காலம் :- 3 மாதம்
* Plumping — காலம் :- 2 மாதம்

பயிற்சிகள் ஆரம்பம் : 06-01-2011, 09-01-2011

விபரங்களுக்கு
JAFFNA TECHNICAL INSTITUTE
இல. 46, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். T.P.0718561654
கிளை NEW ASIAN CENTER 56/15B, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

குறிப்பு:- தொழில் புரிவோர்களுக்கு சனி, ஞாயிறு மாலை நேர பயிற்சி வகுப்பு நடைபெறும். (சி/573781)

## ஆறாத நினைவுகளுடன்

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி | மூன்றாம் மாத நினைவஞ்சலி





அமரர் கந்தையா ஆறுமுகம் (அப்பா)
அமரர் செல்லையா நவரட்ணம் (மாமா)

14.03.1933 மண்ணில் 31.10.1924
09.01.2010 விண்ணில் 22.09.2010
திதி : 30.12.2010 (தசமி)

"அன்பாலும் பண்பாலும் அரவணைத்த அப்பாவே, மாமாவே
நாங்கள் பல ஆனாலும் மாறாது உங்கள் நினைவுகள்
அனுதினமும் உங்கள் நினைவுடனே வாழும்

தம்மளை, கந்தரோடை மேற்கு,
சுன்னாகம். (108128)
குடும்பத்தினர்.

## சுந்தர ஆஞ்சநேயரின் சித்திரத்தேர் வெள்ளோட்டம்

வலி வடக்கு, டிசெ.30

இணுவில், மருதனார்மடம் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில் சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா நாளைமறுதினம் சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ளது.

முற்பகல் 11 மணிக்கு கணபதி பூசை, புண்ணியயாகம், தேவ ஆராதனை என்பன இடம்பெற்று அதனைத் தொடர்ந்து சித்திரத்தேர் வெள்ளோட்டம் நடைபெறும்.

இந்த நிகழ்வில் சித்திரத்தேரை அமைத்த உடுவில் கணேசா சிற்பக் கலையகக் குழுவினர் வரவேற்கப்படுவதுடன் விஸ்வப் பிரம்மஸ்ரீ தியாகராசா பரமசாமி "சித்திர கலாசூரி" என்னும் சிறப்புப் பட்டம் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளார். (ஒ-86)

## வித்தகபுரத்தில் மீளவும் கிராம அபிவிருத்திச் சங்கம்

யாழ்ப்பாணம்,டிசெ.30

அண்மையில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட வலி. வடக்கு வித்தகபுரத்தில் மக்களின் பங்களிப்புடன் கிராம அபிவிருத்திச் சங்கம் மீள உருவாக்கப்பட உள்ளது.

இந்த விடயம் தொடர்பான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் பன்னாலை கனகசபை வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இதன்போது கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் விவசாய சம்மேளனமும் உருவாக்கப்படவுள்ளன. இதன் மூலமாக இந்தப் பிரதேசத்தில் எதிர்காலத்தில் இலகுவான முறையில் அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மக்களே இவற்றைத் தெரிவு செய்ய வேண்டியிருப்பதால் இந்தப் பிரதேச மக்கள் அனைவரையும் தவறாமல் பங்குபற்றுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ம-15)

## பெற்றோருக்கான கலந்துரையாடல்

அச்சுவேலி, டிசெ.30

அச்சுவேலி மத்திய கல்லூரியில் அடுத்த வருடம் தரம் 06 வகுப்பில் பிள்ளைகளை அனும்திக்க விண்ணப்பித்த பெற்றோர்களுக்கான கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் என்று கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார். (ம-11)

## கூடைப்பந்தாட்டம்; இன்று அரையிறுதி ஆட்டங்கள்

வலி வடக்கு, டிசெ.30

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் ஆண்கள், பெண்கள் அணிகளுக்கு இடையே நடத்தி வரும் கூடைப் பந்தாட்டத்தில் இன்று பி.ப. 3.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரிகூடைப் பந்தாட்டத்திடலில் ஆண்களுக்கான அரையிறுதி ஆட்டங்கள் நடைபெறவுள்ளன. (ஒ-86)

## German, Swiss மொழிகள்

German, Swiss மொழி வகுப்புகள் தமிழ் மொழிபெயர்ப்புடன் நடைபெறுகிறது.

German Institute,
10, Palaly Road,
Jaffna.
T.P-0771604823
Miss. Kajenthini

## மரண அறிவித்தல்

### பொன்னம்பலம் சிவகுருநாதன் (அம்மான்)

கொக்குவில் மேற்கு, மஞ்சவனப்பதி வீதியைப் பிறப்பிடமாகவும், ஆலடி ஞானவைரவர் கோயிலடி, ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் சிவகுரு நாதன் நேற்று (29.12.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - கனகம்மா தம்பதியரின் மூத்த மகன் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2010) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆலடி ஞானவைரவர் கோயிலடி,
ஆனைக்கோட்டை.

தகவல்:
செந்தூரன் (மருமகன்)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 15.10.1920
ஆண்டவன் அடியில் 10.01.2010

அமரர் பொன்னர் சுப்பிரமணியம்
(நயினாதீவு- பரந்தன்)

அன்பின் திரு உருவமே, பாசத்தின் பிறப்பிடமே
நீங்காத துயரினிலே எமை நிறுத்தி விட்டு
நீங்கள் மறைந்து சென்று ஆண்டு ஒன்று கடந்த போதும்
அணையாத தீபமாக எங்கள் நெஞ்சில் நீங்கள் சுடர்
விடுகின்றீர்கள் ஐயா!
நினைவழியா உங்கள் நினைவுகளுடன் உங்கள்
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்

ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
நல்லூர். (573732)

குடும்பத்தினர்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 30.11.2010 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதமடைந்த எமது குடும்பச் சுடரொளியான

### அமரர் சின்னத்துரை மயூரன்

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (30.12.2010) வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இராஜ வீதி,
நீர்வேலி மேற்கு, நீர்வேலி. (108173)

குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும், நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மண்ணில் 1939 ★ 08 ★ 26
விண்ணில் 2010 ★ 12 ★ 01

திருமதி
### கந்தையா மங்கையர்க்கரசி
(பனைனம்)
புலோப்பளை மேற்கு, பளை.

கடந்த 01.12.2010 அன்று சிவபதம் அடைந்த எமது அன்புத் தாயாரின் மரணச் செய்தி கேட்டு ஓடோடி வந்து அவசர உதவி புரிந்தோருக்கும், ஆறுதல் வார்த்தை கூறியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி, துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும், இறுதிச் சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிகள் புரிந்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நாளை (31.12.2010) வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். (இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறும் தயவுடன் கேட்டுக்கொள்கிறோம்.)

36, சங்கிலியன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தவராசா (இத்தாலி)
தெய்வேந்திரம் (கச்சேரி, கிளிநொச்சி),
யோகேஸ்வரி (புலோப்பளை மேற்கு, பளை),
யோகராஜா (லண்டன்) மற்றும் சகோதரர்களும்,
மருமக்களும், பேரப்பிள்ளைகளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். பெண்ணிடம் கொள்ளையிடப்பட்ட நகை மீட்பு

யாழ்ப்பாணம், டிசெ. 30

யாழ். நோக்கி வந்து கொண்டிருந்த பஸ்ஸில் பயணித்த பெண் ஒருவரிடமிருந்து கொள்ளையிடப்ப்ட்ட 20 பவுண் தங்க நகை மதவாச்சிப் பொலிஸாரால் நேற்று மீட்கப்பட்டது. கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த பஸ் ஒன்று, நேற்றுமுன்தினம் இரவு உணவுக்காக மதவாச்சியில் நிறுத்தப்பட்டபோதே, அதில் பயணித்த பெண்ணிடமிருந்து தங்க நகை கொள்ளையிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மதவாச்சிப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்தே தங்க நகையை பொலிஸார் மீட்டுள்ளனர். இதேவேளை, சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் தெரியவருகிறது.

## அதிபர்களுக்கான கூட்டம் இன்று

யாழ். கல்விவலயத்துக்கு உட்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டமும் பாடசாலை மதிப்பீட்டுப் புத்தக விநியோகமும் இன்று வியாழக்கிழமை 9 மணிக்கு யா/இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும். இந்தக் கூட்டத்துக்கு அனைத்துப் பாடசாலை அதிபர்களை யும் கலந்துகொள்ளுமாறு யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (204)

## ஐ.நா. நிபுணர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் விமல் வீரவன்ஸ லெமன்பப் பிஸ்கட்டுடன் கொழும்பில் உள்ள ஐ.நா.அலுவலகத்துக்கு முன்பாக உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தினார்.

இந்த நிலையில் அந்த நிபுணர்கள் குழு இலங்கை வரவுள்ளதாக பான் கீ- மூன் தெரிவித்துள்ளார். அதை ஜனாதிபதியும் வரவேற்றுள்ளார். இந்தக் குழுவை வரவேற்கும் தீர்மானமானது வெளிவிவகார அமைச்சருடன் கலந்தாலோசிக்காது ஜனாதிபதி எடுத்த முடிவாகும். வெளிநாட்டுக் கொள்கை தயாரிக்கப்படுவது வெளிவிவகார அமைச்சில் அல்ல, ஜனாதிபதி செயலகத்தில்தான் அது தயாரிக் கப்படுகின்றது. வெளிவிவகார அமைச்சில் இடது கை செய்வதை வலது கை அறிவதில்லை.

ஐ.நா.நிபுணர் குழு இலங்கை வருவது தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் எதிர்வரும் மாதம் 4ஆம் திகதி நாடாளுமன்றில் தெளிவுபடுத்த வேண்டும்.

இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை இப்போது நகைப்புக்கிடமாகிவிட்டது. வெளிவிவகார அமைச்சு சொல்வது ஒன்று செய்வது ஒன்று.

இவ்வாறு ஒன்றுக்கொன்று முரண்பட்ட கருத்தைக் கொண்டுள்ள இந்த அரசு வீட்டுக்குச் செல்லும் காலம் நெருங்கிவிட்டது. எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் எமது கட்சி வெற்றி பெறக்கூடியவாறு நாம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம் - என்றார். (ஒ-சி)


**கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர (சாதாரண) பிரிவு பயிற்சிநெறி - 2011 ஜனவரி - ஜூன்**

**விண்ணப்பம் கோரல்**

கிளி/மாவட்ட கூட்டுறவு சபையால் மேற்படி பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் வெளிவாரிப் பயிற்சியாளர்களிடம் இருந்து கோரப்படுகின்றன.

**தகைமைகள்**

01) க.பொ.த.(சா/த) பரீட்சையில் சித்தியடைந்து குறைந்தது 2 வருட தனியார் வர்த்தகத்துறையில் சேவைபுரிந்தவர்கள்.
02) க.பொ.த.(சா/த) பரீட்சையில் சித்தியடைந்து கூட்டுறவுச் சங்கம் ஒன்றின் நிர்வாகக் குழு உறுப்பினர்களாக உள்ளவர்கள்.
03) கூட்டுறவுப் பணியாளர் கனிஷ்ட பிரிவு பயிற்சி நெறியில் சித்தியடைந்து குறைந்தது 3 வருடங்கள் தனியார் வர்த்தகத்துறையில் சேவை புரிந்தவர்கள்.
04) க.பொ.த (சா/த) பரீட்சையில் தமிழ், கணிதம் உட்பட 4 திறமைச் சித்தியுடன் கூடிய இரு தடவைகளுக்கு மேற்படாத 6 பாடங்களில் சித்தி பெற்றவர்கள்.
05) க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஒரே தடவையில் ஏதாவது இரண்டு பாடங்களில் சித்தி பெற்றவர்கள்.

குறிப்பு: விண்ணப்பங்கள் சுயமாக தயாரிக்கப்பெற்று 10.01.2011 ஆம் திகதிக்கு முன்னதாக கிடைக்கத்தக்க வகையில் செயலாளர், மாவட்ட கூட்டுறவுச் சபை, ஏ-9 வீதி, கிளிநொச்சி என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

செயலாளர்,
மாவட்ட கூட்டுறவுச் சபை, கிளிநொச்சி. (பி/573788)


## குடாநாட்டில் தொடர்கிறது.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தராவிட்டால் செல்வனைக் கொலை செய்து விடுவோம் என வும் அச்சுறுத்தி விட்டு அழைப்பைத் துண்டித்துவிட்டனர். அடுத்த நாள் காலை செல்வனின் குடும்பத்தினர் சாவகச்சேரிப் பொலிஸில் அதுகுறித்து முறைப்பாடு செய்தனர்.

இந்த நிலையில் நேற்று புதன்கிழமை மாலை மூன்று மணியளவில் சரசாலை, வேம்பிராய் வீதியில் காளிகோயிலுக்கு அண்மையாக உள்ள கல்குவாரி ஒன்றின் அருகே வெட்டுக் காயங்களோடு - உடைகள் களையப்பட்டு உள்ளாடையுடன் மாத்திரம் - செல்வனின் சடலம் வீசப்பட்டுக் கிடந்தது. இதுபற்றி அறிந்த பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனாவைத்தியசாலைக்கு அனுப்பிவைத்தனர்.

படுகொலை செய்யப்பட்ட செல்வன் நீண்டகாலமாக வன்னிப்பகுதியிலும் வசித்துவந்தாரெனவும், ஒரு வருடத்துக்கு முன்னரே நலன்புரி நிலையத்திலிருந்து விடுவிக்கப்பட்டு மீள்குடியேறினார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. செல்வன் கொண்டுசென்ற மோட்டார் சைக்கிளையும் ஆவணங்களையும் கொலையாளிகள் எடுத்துச் சென்றிருப்பதாகவும், சடலத்தின் நிலையைப் பார்க்கும்போது செல்வன் இரு நாள்களுக்கு முன்னரே கொலை செய்யப்பட்டிருக்கக் கூடும் எனவும் சடலத்தை நேரில் பார்த்த அவரது உறவினர்கள் தெரிவித்தனர்.

சரசாலைச் சம்பவம் குறித்து இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதயமெதவெலவிடம் வினவியபோது, மேற்குறித்த சம்பவம் தொடர்பாகத் தனக்கு இதுவரை எவ்வித தகவலும் கிடைக்க வில்லை என அவர் நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார். இதேவேளை பொலிஸ் தரப்புத் தகவல்களைப் பெறுவதற் காகச் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொண்டபோது, ''தற்போதுதான் விசாரணைகளை ஆரம்பித் திருக்கிறோம். நாளை (அதாவது இன்று) காலைதான் விளக்க மளிக்க முடியும்'' என்ற பதிலே கிடைத்தது.

கடந்த மூன்று வாரங்களுக்குள் நடைபெற்ற இருவேறு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களால் இருவர் காவுகொள்ளப்பட்ட அதிர்ச்சியிலிருந்து - பயங்கரத்திலிருந்து - குடாநாட்டு மக்கள் மீள்வதற்கிடையில் மூன்றாவது கொலைச் சம்பவமும் நடைபெற்றிருக்கிறது. இதனால் குடாநாட்டுமக்கள் மத்தியில் பெரும் பீதிநிலை உருவாகியுள்ளது.

இதேவேளை -

இந்த மாதம் 11ஆம் திகதி இரவு சங்கானையில் ஆயுததாரிகள் நிகழ்த்திய துப்பாக்கிச் சூட்டில் சங்கானை முருகமூர்த்தி ஆலயப் பிரதம குரு படுகாயமடைந்து பின்னர் உயிரிழந்தார். அந்தக் கொலை தொடர்பாக படையினர் இருவர் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அடுத்த சம்பவம் உரும்பிராயில் இடம்பெற்றது. வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆயுததாரி ஒருவரால் அவரது வீட்டில் வைத்து கடந்த ஞாயிறன்று இரவு சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தக் கொலை தொடர்பில் இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை. இதனிடையில் -

குடாநாட்டில் மீண்டும் அரங்கேற ஆரம்பித்திருக்கும் இத்தகைய கொலைகளால் மக்கள் பீதியும் அச்சமும் அடைந்துள்ளனர். போர் உக்கிரமடைந்திருந்த காலப்பகுதிக்கு திரும்பிச் செல்வது போன்று தாம் உணர்கிறார் என்று பெயர் குறிப்பிட விரும்பாத ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

இவ்வாறான கொலைகள் நாட்டில் சமாதானம் நிலவுவதைக் குறிப்பதாக அமையாது மீண்டும் வன்முறைகள் தோன்றுவதற்கே வித்திடும் என்று குடாநாட்டின் மூத்த கல்விமான் ஒருவர் கருத்துத் தெரிவித்தார்.

இந்தக் கொலைகள் தொடர்பான விசாரணைகள் இடம்பெற்றுவருவதாகப் பொலிஸார் தெரிவித்த போதும், இதுவரையில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. கடந்த காலங்களைப் போலவே கொலையாளிகள் தண்டிக்கப்படாது விடப்பட்டால், இவை தொடர்வதற்கே வழி வகுக்கும் என்று அந்தக் கல்விமான் மேலும் குறிப்பிட்டார். (உ-எ-207-131)

## உண்ணாவிரதப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்னார், வவுனியா, மதவாச்சி போன்ற பிரதேசங்களிலிருந்து கைதுசெய்யப்பட்டவர்களைப் பார்வையிடச்சென்ற அவர்களது உறவினர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக் கப்படுகிறது.

விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர் எனக்கூறப்படும் கைதியான சதீஸ் என்பவரை வவுனியாச் சிறைச்சாலையிலிருந்து அநுராதப்புரச் சிறைச்சாலைக்கு மாற்றியமையைக் கண்டித்தே வவுனியாச் சிறைச்சாலையில் உள்ள கைதிகள் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## உள்ளூராட்சி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விண்ணப்பங்களைக் கோரியுள்ளதாகவும் உள்ளூராட்சி தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பின்னர் வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும் என அக்கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்தார்.

ஜே.வி.பி.உள்ளூராட்சி சபைகளின் தேர்தல்களை எந்த நேரத்தில் எந்த முறையில் நடத்தப்பட்டாலும் சந்திக்கத் தயாராக இருப்பதாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார். ஜே.வி.பியின் செயற்குழு மிக விரைவில் உள்ளூராட்சித் தேர்தல்கள் தொடர்பாக ஆராயும். தற்போதுள்ள விகிதாசார முறையில் தேர்தல்களை நடத்துவதால் புதிய தேர்தல் மறுசீரமைப்பு அமுலுக்கு வரத் தாமதமாகுமென்றும் அரசு தமது சுய இலாபத்துக்காகத் தேர்தல் மறுசீரமைப்பைப் பிற்போட்டாலும் இத் தேர்தலில் அரசுக்குப் பின்னடைவே ஏற்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, மலையக தமிழ்க் கட்சிகளும் இத் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக கூடி ஆராயவுள்ளன.

இ.தொ.காங்கிரஸ் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் தொடர்பாகத் தாம் இணைந்துள்ள ஆளும் தரப்புடன் பேச்சுகள் நடத்துவோம் என அக்கட்சியின் பிரதித் தலைவர் அமைச்சர் முத்து சிவலிங்கம் தெரிவித்தார்.

ஜனநாயக மக்கள் முன்னணி கொழும்பிலும் மத்திய மாகாணத்திலுமுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கும் போட்டியிடும். இது குறித்து விரைவில் செயற்குழு கூடி முடிவு செய்யும் என முன்னணியின் தலைவர் மனோகணேசன் தெரிவித்தார்.

மலையக மக்கள் முன்னணி ஊவா, மத்திய,சப்ரகமுவ மாகாணங்களிலுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கும் புத்தளம் மாவட்டத்திலுள்ள ஆராய்ச்சிகட்டுவ பிரதேச சபைக்கும் வேட்பாளர்களை நிறுத்தும். இது தொடர்பாக ஜனவரி 2ஆம் திகதி செயற்குழு கூடி முடிவெடுக்கும் என முன்னணியின் அரசியல் பிரிவுத் தலைவர் வே.இராதாகிருஷ்ணன் எம்.பி.தெரிவித்தார். (ஒ-சி)


**O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான..**

Diploma in Microsoft Office 2010
Diploma in PC Application
Dip. in Pre-Press Desktop Publishing
Dip. in Video Production & Multimedia
Dip.in Web Designing & Development
Diploma in Computerized Accounting


முதலில் பதிவு செய்யும் 200 மாணவர்களுக்கு Internet E-mail or Hard ware Technology Course முற்றிலும் இலவசம் !

Internet E-mail | Hardware Technology

முழுமையானதும் தரமானதுமான கணினிக்கல்வி

ஆசியாவிலேயே முதன்மை நிலை வகிக்கும் veta Experts in English Training An ISO 9001:2000 Company

புதிய பிரிவுகள் ஆரம்பம்.




DMI COMPUTER EDUCATION

NO. 113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். Tel.: 021-222 4403 | M.M.V. வீதி, நெல்லியடி. Tel.: 021-226 2470


## கொழும்பு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குற்றச் செயல்கள், போக்குவரத்து ஒழுங்கு விதிகளை மீறுதல் போன்ற பல்வேறு விடயங்களைக் கண்காணிக்கும் வகையில், 28 இடங்களில் 108 கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. (சி)

## வடக்கு, கிழக்கின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்க உள்ளது. அதனையடுத்து எதிர்வரும் 10ஆம் திகதி உள்ளூராட்சி மன்றங்கள் கலைக் கப்படும் என அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்நிலையில், உள்ளூராட்சித் தேர்தலில் கூட்டமைப்பு வடக்கு, கிழக்குப் பகுதிகளில் போட்டியிடும். இதேவேளை, தமிழ் மக்களின் பிரச்சினை, வடக்கு, கிழக்கிலுள்ள மீள்குடியேற்றப்பட்ட வர்களின் பிரச்சினை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தத் தயார் என்று பல தடவைகள் கோரியுள்ளோம். ஆனால், அரசிடமிருந்து எவ்வித பதிலும் இதுவரை வரவில்லை. அவ்வாறு அழைப்பு விடுக் கப்பட்டால், பேச்சு நடத்தத் தயார். இப்படி அவர் தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்

### மகேந்திரசெல்வம் திருவருட்செல்வன் (செல்வன்)

உருத்திரபுரத்தை வசிப்பிடமாகவும், மீசாலையை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட மகேந்திரசெல்வம் திருவருட்செல்வன் அகாலமரணமானார்.

அன்னார் துவாரகையின் அன்புக் கணவரும், சோபிதனின் அன்புத் தந்தையும், மகேந்திரசெல்வம் - செல்வராணி தம்பதியினரின் அன்பு மகனும், மகாலிங்கம் - கமலாம்பிகையின் மருமகனும், மிதிலா, நிலக்சன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2010) வியாழக்கிழமை அவரது மீசாலையில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொற்புலவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிற்றம்பலம் வீதி,
மீசாலை வடக்கு,
புத்தூர் சந்தி.0770691678 (பி/573787)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டு. வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உடனடி நிவாரணம்

## பிரதி அமைச்சர் முரளிதரன் நடவடிக்கை

கொழும்பு,டிசெ.30

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்க மீள்குடியேற்றப் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் நட வடிக்கை எடுத்துள்ளார்.

பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் வெள்ளத்தால் மட்டு. மாவட்டத்தில் 56,259 குடும்பங்களைச் சேர்ந்த இரண்டு லட்சத்து 12,211 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும், இவர்களுக்கு உடனடி நிவாரணம் வழங்கப்பட வேண்டுமெனவும் அவசர வேண்டுகோள் விடுத்தார். இதையடுத்தே துரிதமாக நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வெள்ளத்தால் வீடுகள் முற்றாகச் சேதமடைந்த குடும்பங்களுக்கு 50 ஆயிரம் ரூபா வழங்கப்படும். அத்துடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு சமையல் பாத்திரங்கள், உபகரணங்கள் வழங்கப்படும். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நெற்செய்கை மற்றும் ஏனைய விவசாயப் பயிர்களுக்கான நிவாரணம் மற்றும் விவசாய உபகரணங்கள் வழங்கப்படும்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள சகல குடும்பங்களுக்கும் மீள் குடியேற்ற அமைச்சு 4,500 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்களை வழங்கும்.

மீள்குடியமர்த்தப்பட்ட 1,200 குடும்பங்கள் வாழ்ந்த வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. ஏறாவூர்பற்று, வெல்லாவெளி, கோறளைப்பற்று, வவுணதீவு மற்றும் தொப்பிகல பிரதேசத்தில் 5,000 குடும்பங்கள் மிக மோசமாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்துள்ளன.

அமைச்சர் மஹிந்த அமரவீரவுடனான சந்திப்பில் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், அனர்த்த முகாமைத் துவ அமைச்சின் செயலாளர் மபீனா மொஹம்மட், மீள்குடியேற்றப் பிரதியமைச்சரின் இணைப்புச் செயலாளர் பீ. ரவீந்திரன், ஊடகச் செயலாளர் ரமோன் பியரே, ஆலோசகர் ஆர்.ஜே. விதானகே ஆகியோர் கலந்துகொண்டனர்.

(முன்னர் வந்த மற்றொரு செய்தி 19 ஆம் பக்கத்தில்)

## தேசியக் கொள்கை தயாரிக்க ஜனாதிபதி ஆலோசனை

கொள்கை ஒன்றைத் தயாரிக்குமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார் என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

கல்வி, உயர்கல்வி, இளைஞர் விவகாரம் மற்றும் உற்பத்தித் திறன் ஊக்குவிப்பு ஆகிய அமைச்சுகளே அந்த நான்கு அமைச்சுகளாகும்.

திறமை மிகு சமுதாயம் ஒன்றை இந்த நாட்டில் உருவாக்கும் நோக்கிலேயே இந்த நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு தமக்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார் என்று பந்துல குணவர்தன கூறினார்.

இதுதொடர்பாக ஆராய்வதற்காக மேற்படி நான்கு அமைச்சுகளுக்கு இடையிலான முதற்கட்ட சந்திப்பு அண்மையில் இடம்பெற்றது என்றும் இவ்வாறான சந்திப்பு மாதாந்தம் இடம்பெறும் என்றும் அமைச்சர் கூறினார்.

இதனூடாக மாணவர்களின் திறமைகளை விருத்தி செய்தல் மற்றும் அவர்களின் திறமைகளை உபயோகித்து திறமைமிகு சமுதாயத்தை உருவாக்குவதற்கான திட்டங்களை வகுத்தல் போன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார். (சி)


NEW SCIENCE HALL
கன்னாதிட்டி யாழ்ப்பாணம்
2013 - A/L
கணித, உயிரியல் பிரிவுகள்
தமிழ் மொழிமூலம் | ENGLISH MEDIUM
★ எமது வழமையான ஆசிரியர் குழு ★
ஆரம்பம் : 05.01.2011 Wed 8.30 A.M.
(வி/573783)

THE SCIENCE CORNER
Clock Tower Lane, Jaffna.
2013 A/L — TAMIL, ENGLISH MEDIUM
ஆரம்பம் : 01.01.2011 (சனி)
தமிழ் மொழி மூலம் காலை 11.00 மணி | English Medium 2.30 p.m
Com.Maths — ஐங்கரன், சிவகரன்
Biology — பொன்திவாகரன், குகானந்தன்
Chemistry — ராஜா, அன்பு, பிரதீபன்
Physics — அநபாயன், செல்வன், செந்தில்

MyWay English ஆங்கில பயிற்சி
01.01.2010 சனி புதுவருட விடுமுறை
சனி, ஞாயிறு 3 மாத புதிய பிரிவு
ஆரம்பம் : 02.01.2011 முடிவு : 31.03.2011
இலக்கண கற்றல், எழுத்துப்பயிற்சி இன்றி ஒரு ஆங்கில சொல்கூட தெரியாதவர்களும் 3 மாதத்தில் ஆங்கிலத்தில் பேச முடியும்
பயிற்சியில் சேர கடைசி சந்தர்ப்பம்
MyWay 077 33 63 456
182, Stanley Rd, Jaffna

CHEMISTRY COURT
80, ARASADY ROAD, JAFFNA
இரசாயனவியல் - 2013 A/L
(தமிழ், ஆங்கில மொழி மூல வகுப்புகள்)
ஆரம்பம்: 01.01.2011 (சனி) - 9.00 a.m.
நேர அட்டவணை அலுவலகத்தில்
By - RAJAH (B.Sc. (Chem. Spl.)

THE SCIENCE CORNER
CLOCK TOWER LANE - JAFFNA
உயர் கல்வி கற்போருக்கான
ஆங்கில வகுப்புகள்
ஆரம்பம் 01.01.2011 சனி மாலை - 4.00 pm
பிரிவு - I: திங்கள், புதன், வெள்ளி 5.00 to 6.00 Pm
பிரிவு - II: சனி, ஞாயிறு 4.00 to 5.30 Pm
ஆசிரியர்: S.P. VAGEESON B.Com
T.P. 0776271488

THE SCIENCE CORNER
CLOCK TOWER LANE, JAFFNA
CHEMISTRY INORGANIC
அயன் சமநிலை Wed. Fri. 5.15 - 06.15p.m
ஆரம்பம்: 02.01.2011 Sat., Sun. - 11.45 - 12.45
By : அன்பு
(108105)

THE COLLEGE OF CHEMISTRY
2013 A/L DIAS B.Sc (Hons) spl. in Chem.
தமிழ் மொழி மூலம் Sat Sun Fri 3.00 - 4.30 P.M.
English Medium Sat Sun 6.15 - 7.30 A.M.
(108167)

A/L 2013
ஆரம்பம் ஜனவரி 02 ஞாயிறு
கலை, வர்த்தகம்
சனி காலை முதல் அனுமதி வழங்கப்படும்.
யூனிவேர்சல்
யாழ். இந்து மகளிர் கல்லூரி அருகே.

1st in Com, G.A.Q
யாழ்ப்பாணம், பேராதனை பல்கலைக்கழகங்கள் (வெளிவாரி)
A/L மூன்று பாடங்களில் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் ஆகும். இதற்குரிய புதிய ஆண்டுக்கான விரிவுரைகள்.
ஆரம்பம்: 01.01.2011 காலை 8 மணி
இவற்றிற்கான பதிவுகளை மேற்கொள்ளவும்.
விபரங்களுக்கு: S. அருள்நங்கை (நிர்வாகி)
புதிய உயர் கல்லூரி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்

கணக்கீடு
A/L - 2011 கம்பனி முடிவுக் கணக்கு ஆரம்பம் : நாளை 4 P.M.
A/L - DAY CLASS ஆரம்பம் : நாளை 8 A.M.
A/L - 2012 தனிவியாபார முடிவுக்கணக்கு ஆரம்பம் : நாளை 7 A.M.
S.தவா B.Com (Hons) (Acc.Spl.)
தனிப்பட அனுமதி
SHAMROCK
சுப்பிரமணியம், யாழ்ப்பாணம்.

கணக்கீடு
A/L - 2011 கம்பனி முடிவுக் கணக்கு ஆரம்பம் : நாளை 1 P.M.
A/L - DAY CLASS ஆரம்பம் : நாளை 2 P.M.
A/L - 2012 கட்டுப்பாட்டுக் கணக்கு ஆரம்பம் : நாளை 12 மணி
S.தவா
B.Com (Hons) (Acc.Spl.)
NEW SCIENCE HALL JAFFNA

A/L - 2013
(கலை, வர்த்தகப் பிரிவுகள்)
ஆரம்பம்
ஜனவரி - 8
காலை - 8
DMI Jaffna
(வி/573783)

கொழும்பு விலையைவிட குறைவான விலையில்..
DSI, BATA பாடசாலை மாணவர்களுக்கான பாத அணிகளை பெற்றுக்கொள்ளலாம்
கபிலா பாதணியகம்
13, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
கபிலா காலணியகம்
24,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.







கிறிஸ்த சேவா ஆச்சிரமம்
மருதனார்மடம்
31.12.2010 நாளை சின்னண்ணன் அவர்களின் வாழ்வுக்கும் திருப்பணிக்கும் நன்றி செலுத்தும் தூய நற்கருணை திருவழிபாடு காலை 6.30 மணிக்கு எமது ஆலயத்தில் ஏறெடுக்கப்படும்.
* காலை ஒன்றிப்புடன் சின்னண்ணனது ஏடுகளில் இருந்து அவரது வாழ்வும் ஆச்சிரமத் திருப்பணியும்.
* மக்கள் மன்றாட்டுடன் மதியநேர ஒன்றிப்பும் இடம்பெறும்.
* இரவு 10 மணி தொடக்கம் நள்ளிரவு 12.30 மணிவரை புதுவருடத்தினை நோக்கி காத்திருக்கும் வழிபாடு
* 01.01.2011 (சனிக்கிழமை) காலை 6.30 மணிக்கு தூய நற்கருணை திருவழிபாடு நடைபெறும்.
யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
எமது நண்பர்கள் யாவேர்க்கும் எமது நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் உரித்தாகுக ...
இப்படிக்கு
ஆச்சிர திருப்பணியில் அருட்சகோதரன்
செ.போக்கர் லக்சன்
(108163)

"தரம் 4, 5 மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் ஒரு நற்செய்தி" 03.01.2011 முதல் வெளிவருகின்றது...
புலமைச் சுடர்
2011-2012
"ஒரு வாரகாலம் கற்பதற்குப் போதுமான ஆக்கங்கள் ஒரே கையேட்டில்"
இக்கையேட்டை அலங்கரிப்பவை...
* தரம் 4, 5 படிமுறைப் பரீட்சை வினாத்தாள்
* சுற்றாடல் கல்விக்கான கற்றல் குறிப்புக்கள்
* தமிழ்மொழிக் கற்றல் குறிப்புக்கள்
* கணிதபாட கற்றல் குறிப்புக்கள்
* ஆங்கில, சிங்கள பாட கற்றல் குறிப்புக்கள்
* வாரம் ஐந்து வினா-விடை விளக்கம்
* கட்டுரைக்களம்
* மூளைக்கு வேலை
* சங்கமம்
இவையனைத்தும் 10 ரூபா விலையில்...
கடந்த வருடம் மாவட்ட ரீதியில் முதன்னிலை பெற்ற மாணவர்களின் வாழ்த்தும் அனுபவப் பகிர்வும்
நாடளாவிய ரீதியில் புகழ்பெற்ற 20 ஆசிரியர்களின் ஆக்கங்களைத் தாங்கி வெளிவருகின்றது
உங்கள் பிரதியை உறுதிப்படுத்த அருகிலுள்ள உதயன் முகவரிடம் உடன் பதிவு செய்யுங்கள்.
விநியோகப்பிரிவு இலக்கங்கள்: கொழும்பு-011 5738866, யாழ்- 021 5677222, ஆசிரியர் பீடம் -011 576 8855, 071 427 3035.




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.12.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org